விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே
SATS-TECH
சாட்ஸ்டெக் இன்ஜினியரிங்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய நாவல் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-5012)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 21 சனிக்கிழமை (05.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 017

ஐரோப்பிய பாராளுமன்ற குழுவினர்

வவுனியாவில் மீள்குடியேற்றப்பட்ட இடங்களை பார்வையிட்டனர்

(பனிக்கன்குளம்)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களான வில்லியம் டார்ட்மவுத் மற்றும் ஜியோஃப்ரே வான் ஓர்டன் ஆகியோர் நேற்று பிற்பகல் 3 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்ததுடன், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இடங்களையும் பார்வையிட்டிருந்தனர். இதன்போது வவுனியா மாவட்ட செயல 23

நீங்கள் வெள்ளத்தில் மிதக்க சுமந்திரன் ஹெலியில் திரிகிறார்

கிளி.யில் பத்ரமுல்லே சீலரத்ன தேரர்

(கிளிநொச்சி)

உங்களின் வாக்குகளினால் பாராளுமன்றம் சென்ற சுமந்திரன் உலங்கு வானூர்தியிலேயே பயணிக்கிறார். அவர் உத்தியோகபூர்வ மற்ற பிரதமராக செயற்படுகிறார்.

மலையகத்தில் தொண்டமான் போன்றோரின் பிள்ளை 23

எதிர்க்கட்சித் தலைவராக மகிந்தவை ஏற்க வேண்டும்

கட்சித் தலைவர்களுக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்த தீர்மானத்தை சபாநாயகர் கரு ஜயசூரிய கட்சித் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் நிலைப்பாட்டில் அதேநிலையில் தொடர்ந்து நிற்கப்போவதாக கட்சித் தலைவர்களிடம் சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று நடைபெற்ற கட்சிகளின் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்க்கட்சி தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என சபாநாயகர் 02

இனவாதத்தை பரப்பி மக்களிடம் பிழையான பிரசாரம் மேற்கொள்ளும் மகிந்த தரப்பினருக்கு அரசியலமைப்பு குறித்து தெளிவுபடுத்த வேண்டும்

அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு) அரசியலமைப்பு விடயத்தில் இனவாதத்தை பரப்பி மக்கள் மத்தியில் பிழையான பிரசாரங்களை மேற்கொள்ளும் மகிந்தவுக்கும் அவரது தரப்பினருக்கும் அரசியலமைப்பு குறித்து முதலில் தெளிவுபடுத்த வேண்டும் என அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் அரசியல் கட்சிகள் மாறுபட்ட கருத்துக்களை குறிப்பிடுவது தொடர்பில் தெளிவுபடுத்துகையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் அரசாங்கம் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ள 23

ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற்காக பேசுகின்றனர்

தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கரணவாய்)

எதையாவது சொல்ல வேண்டும் என்பதற்காக பேசிக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது என தென்னிலங்கை அரசியல்வாதிகளிற்கு பதிலடி கொடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன்.

மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் வடமராட்சி 23

அரச சுகபோகங்களை எதிர்பார்த்து எதிர்க்கட்சி பதவியை வகிக்கவில்லை

மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் பதவியில் கிடைக்கப்பெறுகின்ற அரச சுகபோகங்களை எதிர்பார்த்து எதிர்க்கட்சி தலைவர் பதவியை வகிக்கவில்லை. எதிர்க்கட்சி தலைவர் பதவியில் கிடைக்கப் பெறுகின்ற சலுகைகள் இல்லாமலே பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி தலைவராக செயற்படுவேன் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன முன்னணியில் நேற்று வெள்ளிக் 24

ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை தொடர்பில் ஐரோப்பாவுடன் இலங்கை பேச்சு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை தொடர்பில் ஐரோப்பிய பாராளுமன்றின் இலங்கை நட்புகுழு உறுப்பினர்களை நிதியமைச்சர் மங்கள சமரவீர சந்தித்து கலந்துரையாடியுள்ளார். கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 23

பொதுஜன முன்னணி மற்றும் சுதந்திரக்கட்சி இணைந்து போட்டி!

-மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் சுதந்திர கட்சி இணைந்து பரந்த கூட்டணியாக எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள 23

வட மாகாண ஆளுநராக மார்ஷல் பெரேரா?



(கொழும்பு)

வடக்கு ஆளுநராக மார்ஷல் பெரேரா நியமிக்கப்படுவார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுதந்திரக்கட்சியின் முன்னாள் அமைச்சர் டிலான் பெரேராவின் தந்தையே மார்ஷல் பெரேரா ஆவார். தென் மாகாண ஆளுநராக இது வரை பதவி வகித்து 23

மாகாணசபை தேர்தல் நடத்துவது தொடர்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று வெள்ளிக் கிழமை கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் நடைபெற்றது.

இதில் மாகாணசபைத் தேர்தலை மிக விரைவில் நடத்துவது தொடர்பிலும் கட்சிக் கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், 2019 ஆம் 23

ஐந்து மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நியமனம்

(கொழும்பு)

5 மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். 02

பகிரங்க ஏலவிற்பனை

மாநகர சபையினால் பாவிக்கப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள், இரும்புகள், பழைய பத்திரிகைகள் மற்றும் பெரிய தோர் மலைவேம்பு, அதன் ஏனைய பாகங்களும் மாநகரசபை வளாகத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் திகதியில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

காலம் : 10.01.2019
வியாழக்கிழமை
காலை : 10.00 மணி
இடம் : மாநகரசபை வளாகம்

ஆணையாளர்,
யாழ்.மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
2019.01.05 (C-5014)

எதிர்க் கட்சி அலுவலகம் கூட்டமைப்பின் சொத்தல்ல

பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம், மற்றும் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலம் ஆகியவற்றை பல வந்தமாக வைத்துக் கொள் ளுவதற் கு அவை ஒன்றும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் குடும்ப சொத்து அல்ல. எதிர் கட்சி தலைவர் பதவியை மகிந்த ராஜபக்ஷ வகிக்க வேண்டும் என்பதே நாட்டு மக்களின் எதிர் பார்ப்பாக காணப்படு கின்றது.

கூட்டமைப்பின் தலைவர் எதிர்க் கட்சி தலைவர் பதவியில் இருந்து முறையாக விலகிக்கொள்ளவேண் டும் என பாராளு மன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

மக்கள் இளை ஞர் முன்னணி அலு வலகத்தில் நேற்று வெள் ளிக் கிழமை இடம் பெற்ற ஊட க வியலாளர் சந்திப் பில் கலந்து கொண்டு கருத் துரைக் கும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட் டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பாராளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சி தலைவர் பதவியை மகிந்த ராஜபக்ஷ வகிக்க முடியும் என சபாநாயகர் குறிப் பிட்டதற்கு முரணா கவே கூட்டமைப் பினர் செயற்பட்டு வரு கின்றனர்.

இவ்விடயத்தில் ஜக்கிய தேசிய கட் சியே இவர்களுக்கு ஆதரவு வழங்குகின்ற னர். ரணில் விக்கிர மசிங்க பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் அவர் எவ்வாறு அலரிமாளிகையினை விட்டு வெளியேறா மல், அரச சொத்துக் களை முறை கேடாக பயன்படுத்தினார். அதன் தொடர்ச்சி யினையே தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம் பந்தன் இன்றும் பின் பற்றுகின்றார் என் றார். (ம-3)

யாழ். நகரிலுள்ள சைவ உணவகத்துக்கு பின்வரும்

வேலையாட்கள் தேவை

- உணவு பரிமாறுபவர்
- பார்சல் கட்டுபவர்
- சமையல் உதவியாளர்
- சுத்திகரிப்பாளர்
- தேநீர் தயாரிப்பாளர்
- பில்கிளாக்

ஆகிய வேலைகளுக்கு வேலையாட்கள் தேவை
(ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்) (C-5022)

077 88 22 741

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கூட்டுறவு சேவையாளரும் / பிறப்பு இறப்பு விவாக பதிவாளர்

திரு. கோபாலப்பிள்ளை கௌரிதாசன்

எமது சக பணியாளர் திரு. கோபாலப்பிள்ளை கௌரிதாசன் அவர்கள் 2018.12.31ஆம் திகதி. மேல் நீதிமன்ற நீதிபதி திரு. அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து சமாதான நீதவானாக பதவி ஏற்றார். அவர் கூட்டுறவு துறையின் வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றி வருகின்றார். இவரது சேவை மேலும் வளர்ச்சி பெற்று பல்லாண்டு காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

யாழ்.மா.சி.க.கூ.ச.ச.மா.ச
ஊழியர் சி.க.க.சங்கம்
ஊழியர் நலன்புரி சங்கம்

(6927)

இலத்திரனியல் ELECTRONICS

- இலத்திரனியல், ஓட்ட மின்னியல் வினா விடை பயிற்சி. A/L பொறியியல் தொழில் நுட்பத்திற்கு.
- இலத்திரனியலை விரும்பும் எத்தரப்பினரும் 100% செயல்முறை ஊடாக கற்கலாம்.
- பிரத்தியேக வகுப்பாதலால் முன்பதிவு செய்க.

தொடர்பு: J.J.MICHAEL
66, Chapel Street, Jaffna.
Tel: 077 955 4276

ஆரம்பம் : 05.01.2019

(6920)

விற்பனைக்கு

யாழ்.ரக்கா றோட், ரக்கா லேனில் 3 பரப்பு காணியுடன் மேல்மாடி வீடு விற்பனைக்கு

தொடர்புகளுக்கு : மணியம்
076 473 4160

பேராசிரியர் கலாநிதி ஜோன் மனோகரன் கென்னடி அவர்களின்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நூல் வெளியீடும்

இடம் - நடராஜா ஞாபகார்த்த மண்டபம்,
காரைநகர் இந்துக்கல்லூரி
காலம் - 06.01.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - பி.ப 2.00 மணி
தலைவர் - விஜயதர்மா கேதீஸ்வரதாசன்
(தவிசாளர், காரைநகர் பிரதேச சபை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். - குடும்பத்தினர்

(6921)

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

மகா சபைக் கூட்டம்

காலம் : 06.01.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 1.30 மணி
இடம் : குருகுலம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

- தலைமையுரை
  சிவஶ்ரீ.பா.மனோகரக் குருக்கள்
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- பிறவிடயங்கள் கலந்துரையாடல்
- புதிய நிர்வாகசபை தெரிவு செய்தல்
- நன்றியுரை

அனைத்து அந்தணகுருமார்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் மூலம் வடபகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவிப் பொருட்கள் சேகரிப்பின் போது உதவிப் பொருட்களை தந்துதவிய அனை வருக்கும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் சார்பாக நன்றி களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் எமது இவ் அழைப்பிதழை ஏற்றுக்கொள்ளவும்.

தலைவர் : சிவஶ்ரீ.ப.மனோகரக்குருக்கள்
செயலாளர் : பிரம்மஶ்ரீ.சோ.கேதீஸ்வரசர்மா

(6931)

ஐந்து மாகாணங்...

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் கிழக்கு மாகாண ஆளுநராக ரோஹித போகொல்லாகம பணியாற்றினர்.

இதேவேளை, மேல் மாகாண புதிய ஆளுநராக அசாத் சாலி நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் அந்தப் பதவியில் ஹேமகுமார நாணயக்கார கடமையாற்றினர்.

மத்திய மாகாண ஆளுநராக பி.பீ.திஸ நாயக்க கடமையாற்றிய நிலையில், மத்திய மாகாண புதிய ஆளுநராக மைத்திரி குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமத்திய மாகாண ஆளுநராக சரத் ஏக்கநாயக்க நியமிக் கப்பட்டுள்ளார். அந்தப் பதவியில் இதற்கு முன்னர் எம்.பி.ஜயசிங்க கடமையாற்றினார்.

இதேவேளை, கே.சீ.லோகேஸ்வரன் வகித்த வட மேல்மாகாண ஆளுநர் பதவிக்கு, வட மத்தியமாகாண முன்னாள் முதலமைச்சர் பேசல ஜெயரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பாராளுமன்ற உறுப்பினர்பதவியில்இருந்து விலகியுள்ள நிலையில், அந்த வெற்றிடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார நியமிக்கப் படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

எதிர்க்கட...

இதன்போது தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல்களை துரிதமாக நடத்தி, இந்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மற்றும் பாராளுமன்றக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாகவும் நேற்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

ரணில் தலைமையிலான இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கிப் பயணிக்கிறது

நாமல் பகிரங்க குற்றச்சாட்டு

(அம்பாந்தோட்டை)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கிப் பயணித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நல்லாட்சி மற்றும் ஜன நாயகம் என்ற பெயரில் ஆட்சியை மட்டுமே எதிர்பார்ப்பாக வைத்துப் பயணிக்கின்ற அரசாங்கத்தால் நாட்டு மக்களுக்கு எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்றும் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த தென் மாகாணத்திலுள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் பலர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை நேற்று முன்தினம் அம்பாந்தோட்டையில்வைத்து சந்தித்தனர்.

இதன்போது அடுத்துவரும் தேர்தல்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கின்ற இந்த அரசாங்கம்வெறும் கட்டுக்கதைகளை மாத்திரமே கூறிவருவதாகவும் நாட்டு மக்களுக்கு அதனால் எந்தவிதப் பிரயோசனமும் நன்மைகளும் கிடைக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

அடுத்து வரும் தேர்தல்களை இலக்காகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி தற்போது பலவித கட்டுக்கதைகளை உருவாக்கி வருவதாக குற்றம் சாட்டிய நாமல் ராஜபக்ஷ, கடந்த 4 வருட ஆட்சியில் மக்களுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். (இ-7)

புலிகளின் தலைவர் பிரபாகரனின் நெருங்கிய நண்பர் காலமானார்!

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் நெருங்கிய நண்பரும் அவ்வமைப்பின் சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கான பொறுப்பதிகாரியுமாக விளங்கிய பிறைசூடி காலமானார்.

யாழ்ப்பாணம், வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், உடல் நலக் குறைவின் காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை சென்னையில் காலமாகியுள்ளதாக அவரது உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

இவர் அரசதுறையில் சேவையாற்றிய வேளையில் இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, தமிழ் அரச ஊழியர்கள் அனைவரும் சிங்களத்தை கற்க வேண்டியது அவசியமென வலியுறுத்தப்பட்ட நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தனது பதவியைத் துறந்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

தலைவர் பிரபாகரனுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தவர்களில் ஒருவரான இவர், இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இந்தியாவில் தஞ்சடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில்

அமைச்சர் காமினி தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது, ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக, ரணில் விக்கிரமசிங்கவே களமிறங்குவாரென, புத்த சாசன மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அக்கட்சியின் பிரதமர் வேட்பாளர், பொதுமக்களால் தெரிவு செய்யப்படுவாரென்றும் தெரிவித்துள்ள அமைச்சர், எதிர் வரும் 14 மாதக் காலப்பகுதியில், நாட்டின் பொருளாதாரம் பலப்படுத்தப்பட்டு, மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார். (இ-7)

விடைத்தாள் திருத்தும் பணியில் அநீதி; பரீட்சைகள் திணைக்களம் நிராகரிப்பு

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை மாணவர்களின் ஆங்கில பாட விடைத்தாள் திருத்தும் பணியில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தைப் பரீட்சை திணைக்களம் நிராகரித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் பரீட்சார்த்திகள் அதிகளவில் ஆங்கில பாடத்தில் "ஏ" சித்தி பெற்றுள்ளனர். இந்நிலையில் கண்டி மாவட்டத்தில் அதிகமானோர் "பி" சித்தி பெற்றிருப்பதற்கு காரணம் திருத்தப் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்களின் கல்வித் தகைமையே எனவும் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மாத்திரம் தான் திருத்தப் பணிகளுக்காக தேர்தெடுக்கப்பட்டதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளுக்கு ஏதாவது அநீதி இழைக்கப்பட்டிருந்தால் மறு பரிசீலனை மூலம் தீர்வு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள்கள் மதிப்பீட்டுப் பணிகள் இம் மாதம் 8 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரைநடைபெறும் என்றும் 140 ஆசிரியர்கள் கலந்து கொள்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

'சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நிறுத்தப்படவில்லை'

அமைச்சர் மலிக் தகவல்



(கொழும்பு)

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மீளாய்வு செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு விதந்துரை செய்துள்ள போதிலும், அது தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

"நிபுணர்கள் குழுவின் அறிக்கை எமக்குக் கிடைத்திருக்கிறது. அது தொடர்பாக பிறகு நாம் ஆராய்வோம். ஆனால், சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நிறுத்தப்படவில்லை.

அரசாங்கம் அதைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்துகிறது. நிபுணர்கள் குழுவின் விதப்புரைகள் வெறுமனே அபிப்பிராயங்கள்தான்.

வர்த்தகத்தையும் ஏற்றுமதியையும் மேம்படுத்துவதற்கு இலங்கை வெளிநோக்கிய திசையிலான கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது முக்கியமான தாகும்" என்று அமைச்சர் மலிக் மேலும் தெரிவித்தார். (இ-7)

நான் விலகியதாலேயே தயாசிறிக்கு பொதுச் செயலாளர் பதவி கிடைத்தது

பியதாஸ விளக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நான் விலகுவதாக அறிவித்ததாலேயே தயாசிறி ஜெயசேகரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுச் செயலாளராக நியமித்தார். இந்த நியமனத்தில் வேறு எந்த மறைமுக விடயங்களும் இல்லை என பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக தயாசிறி ஜெயசேகர நியமிக்கப் பட்டுள்ளமை தொடர்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சி உறுப்பினர்களானாலும் தொகுதி அமைப்பாளர்களானாலும் யாராக இருந்தாலும் கட்சியை விமர்சிப்பதற்கும் குறைகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் உரிமை உள்ளது. அவை தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டிய பொறுப்பு எமக்கு காணப்படுகின்றது. எனவே இவை தொடர்பிலும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

'சபாஷ்' ரிஷாப்... 'ஜாலி' ஜடேஜா

சிட்னியில் இந்தியா ஓட்ட மழை

சிட்னி டெஸ்டில் அவுஸ்திரேலிய பந்துவீச்சை புரட்டியெடுத்த இளம் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் ரிஷாப் பன்ட் சதம் கடந்து அசத்த, முதல் இன்னிங்சில் இந்திய அணி 622 ஓட்டங்களைக் குவித்தது. புஜாரா 193 ஓட்டங்கள் எடுத்து கைகொடுத்தார். ரவிந்திர ஜடேஜா தன் பங்குக்கு அரைச்சதம் கடந்தார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, அங்கு நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று டெஸ்ட் முடிவில் இந்திய அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான 4ஆவதும் இறுதியுமான டெஸ்ட் சிட்னியில் நடக்கிறது. முதல் நாள் முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 4 விக்கெட்டுக் களை இழந்து 303 ஓட்டங்களை எடுத்திருந்தது. புஜாரா (130), விஹாரி (39) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

விஹாரி 'அவுட்'

நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் நடந்தது. முதல் இன்னிங்சை தொடர்ந்த இந்திய அணியின் புஜாரா, லயன் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி, 150 ஓட்டங் களை எட்டினார். சிட்னி மைதானத்தில் இந்த இலக்கை எட்டிய 5ஆவது இந்தியர் ஆனார்.

மறுபக்கம் விஹாரி 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து புஜாராவுடன் ரிஷாப் பன்ட் இணைந்தார். இருவரும் ஸ்டார்க் பந்துகளை பவுண்டரிகளாக மாற்றினர். 150.6 கி. மீ., வேகத்தில் வீசிய ஸ்டார்க்கின் 'யோர்க்கர்' பந்தில் பவுண்டரி அடித்து அசத்தினார் பன்ட்.

நழுவிய 'இரண்டு'

புஜாரா 192 ஓட்டங்கள் எடுத்தபோது லயன் பந்தில் கொடுத்த 'பிடியை' அருகில் நின்ற கவாஜா கோட்டை விட் டார். இருப்பினும் அடுத்து ஒரு ஓட்டம் மட்டும் எடுத்த நிலை யில் புஜாரா (193) ஆட்ட மிழந்து, இரட்டைச்சதம் அடிக் கும் வாய்ப்பை நழுவவிட்டார். அந்நிய மண்ணில் இவர் எடுத்த அதிக ஓட்டங்கள் இது தான்.

'சுப்பர்' ஜோடி

சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்தார் பன்ட். இவருக்கு 'கம்பெனி' கொடுத்த ஜடேஜா, கம்மின்ஸ் பந்துகளில் பவுண் டரி, சிக்சர் அடித்து மிரட்டினார்.

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் தென் னாபிரிக்க அணித் தலைவர் டு பிளசி சதம் கடந்தார்.

தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணி கள் மோதும் 2ஆவது டெஸ்ட் கேப்ட வுனில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 177 ஓட்டங்கள் எடுத்தது.

தொடர்ந்து முதல் இன்னிங்சுக்காக துடுப் பெடுத் தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி நேற்று முன் தினம் முதல் நாள் ஆட்ட நேர நிறைவில், 2 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அம்லா (24) ஆட்ட மிழக்காமல் இருந்தார்.

டு பிளசி அசத்தல்

நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் நடந்தது. அம்லா (24) முந்தைய நாள் ஓட்டங்களுடன் திரும்பினார். புருய்ன் (13) சொதப்பினார். பின், இணைந்த அணித் தலைவர் டு பிளசி, பவுமா ஜோடி அபாரமாக விளையாடியது. பாவுமா (75) அரைச்சதம் கடந்தார். டு பிளசி (103) சதம் எட்டி னார். தன் பங்கிற்கு குயின்ரன் அரைச்சதம் அடித்தார்.

நேற்றைய 2ஆம் நாளாட்டம் நிறைவுக்கு வந்த வேளை தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட்டுக்களை இழந்து 382 ஓட்டங்கள் எடுத்திருந்தது. குயின்ரன் (55), பிலாண்டர் (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சதமடித்த மகிழ்வில் இந்தியாவின் ரிஷாப் பன்ட்

விஹாரி சோகம்

நேற்றைய நாள் ஆட்டத்தில் விஹாரிக்கு (42) லயன் பந்தில் ஆட்டமிழப்பு வழங்கினார் இயன் கோல் (இங்கிலாந்து). 'டி.ஆர்.எஸ்..' கேட்டார் விஹாரி. 'ஹொட் ஸ்பொட்' தொழில்நுட்பத்தில் பந்து துடுப்பில் பட்டதற்கான அடையாளம் இல்லை. 'ஸ்னிக்கோ மீற்றரில்' பந்து, பேட் இடையே இடைவெளி இருந்தும், 'மார்க்' ஆனது போல காண்பிக்க, சோகத்துடன் திரும்பினார்.

மூன்றாவது நடுவர், தொழில் நுட்பம் இருந்த போதும் இவருக்கு தவறாக வழங்கப்பட்டதாக விமர்சனம் எழுந்தது.

'பெஸ்ட்' ஜோடி

ஜடேஜா, பன்ட் இணைந்து 7 ஆவது விக்கெட்டுக்காக 204 ஓட டங்கள் சேர்த்தது. இதன்மூலம் சிட்னி மைதானத்தில் 7ஆவது விக் கெட்டுக்காக அதிக ஓட்டங்கள் எடுத்த ஜோடி ஆகினர். இதற்கு முன் 1983 ல் கிரகாம், மத்யூஸ் (ஆஸி.,) ஜோடி பாகிஸ்தானுக்கு எதிராக 185 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

◈ அவுஸ்திரேலிய மண்ணில் 7ஆவது விக் கெட் டுக் காக அதிக ஓட்டங்கள் எடுத்ததும் ஜடேஜா, பன்ட் ஜோடி தான்.

அந்நிய மண் ணில் இந்தியா சார்பில் 7ஆவது விக்கெ ட்டுக்காக எடுக் கப்பட்ட இரண்டாவது அதிக பட்ச ஓட்டங்கள் இது (204). லட்சு மண் - அஜய் ரத்ரா ஜோடி 217 ஓட்டங்கள் எடுத்தது (2002, மே. தீவுகள்) முதலிடத்தில் உள் ளது.

1 சிட்னி டெஸ்டில் புஜாரா - மயங்க் (116 ஓட்..), புஜாரா - விஹாரி (101) ஜோடி 2ஆவது மற்றும் 5ஆவது விக்கெட்டுக்கு 100 ஓட்டங்களுக்கும் மேல் சேர்த்தது. கடந்த 10 ஆண்டுகளில் தென்னா பிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா மண்ணில் இந்தி யாவின் 'ரொப் 5' ஜோடி ஒரு டெஸ் டில் இருமுறை இதுபோல ஓட் டங்கள் எடுத்தது இதுதான் முதன் முறை.

2 ஆஸி., மண்ணில் இந்தியா தனது இரண் டாவது அதிக பட்ச (622/7 ஓட்..) ஓட்டங்களை பதிவு செய்தது. இத ற் கு முன் 2004 ல் இங்கு 705/7 ஓட் டங்கள்தான் 'நம்பர் 1' ஓட்ட எண் ணிக்கையாக உள்ளது.

3 அவுஸ்திரேலியாவில் குறைந்த வயதில் (21 வயது, 92 நாள்) சதம் அடித்ததில் மூன்றாவது இடம் பெற் றார் ரிஷாப் பன்ட். சச்சின் 1992ல் (18 வயது, 256 நாள், சிட்னி, 18 வயது, 285 நாள், பெர்த்) இருமுறை குறைந்த வயதில் இங்கு சதம் அடித்தார். தத்து பத்கர் (22 வயது, 46 நாள், அடி லெய்ட்) 4வதாக உள்ளார்.

ஜடேஜா டெஸ்ட் அரங்கில் 10வது அரைச்சதம் அடித் தார். பன்ட் டெஸ்ட் அரங்கில் 2ஆவது சதம்.

நம்பர் 1 ரிஷாப்

இப்போட்டியில் துடுப்பாட்டத்தில் அசத்திய இந்திய அணி விக்கெட் காப் பாளர் ரிஷாப் பன்ட் (159) சதம் விளாசினார்.

இதையடுத்து அவுஸ்திரேலிய மண்ணில் முதல் சதம் அடித்த இந்திய விக்கெட் காப்பாளரானார். இதற்கு முன் பரூக் என்ஜினியர் 1967ல் 89 ஓட்., (அடிலெய்ட்) எடுத் ததே அதிகம். கிரண் மோர் (67, மெல் போர்ன், 1991), பார்த்திவ் படேல் (62, சிட்னி, 2004), தோனி (57, சிட்னி, 2012) அடுத்தடுத்து உள்ளனர்.

அவுஸ்திரேலிய மண்ணில் முதல் சதம் அடித்தார். 7வது விக்கெட்டுக்கு 204 ஓட்டங்கள் சேர்த்த போது, ஜடேஜா (81) ஆட்டமிழந்தார். இந்திய அணி முதல் இன்னிங்சில் 7 விக் கெட்டுக்கு 622 ஓட்டங்கள் எடுத்து, ஆட்டத்தை இடை நிறுத்தியது. பன்ட் (159) ஆட்டமிழக்காமல் இருந்தார். சிட்னி யில் மூன்றாவது முறையாக 600 ஓட்டங்களுக்கும் மேல் எடுத்தது இந்தியா.

தொடர்ந்து முதல் இன்னிங்சுக்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி இரண்டாவது நாள் ஆட்ட முடிவில் முதல் இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 24 ஓட்டங்கள் எடுத்து இருந் தது.

ரொனால்டோ 'ஹட்ரிக்'



விருதுடன் ரொனால்டோ

ஐரோப்பிய அரங்கில் வழங்கப்படும் 'குளோப் கால்பந்து' விருதை கிறிஸ்டியானோ ரொனா ல்டோ 'ஹட்ரிக்' முறையில் வென்றார்.

ஐரோப்பிய கழக கால்பந்து அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு ஆண்டு தோறும் 'குளோப் கால்பந்து' விருது வழங் கப்படும். இதை ஐரோப்பிய கழக கூட்ட மைப்பு மற்றும் ஐரோப்பிய கால்பந்து வீரர் கள் சங்கம் இணைந்து தருகின்றன.

இந்த விழா ஐக்கிய அரபு எமிரேட்சில் நடந்தது. கிரீஸ்மான் (அத்லெட்டிகோ மட்ரிட்), மபே (பாரிஸ் செயின்ட் ஜெர்மைன்) ஆகி யோரை முந்திய போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டி யானா ரொனால்டோ (ரியல் மட்ரிட், யுவன் டஸ் அணி) விருது வென்றார்.

இதன்மூலம், இந்த விருதை 5ஆவது முறையாக (2011, 14, 16, 17, 18) தட்டிச் சென்றார். தவிர, 'ஹட்ரிக்' முறையில் வசப் படுத்தினார். ரசிகர்களின் மனம் கவர்ந்த வீரர் என்ற விருதும் இவருக்கு தரப்பட்டது. சிறந்த கழக அணிக்கான விருதை அத்லெட் டிகோ மட்ரிட் கைப்பற்றியது.

இது குறித்து ரொனால்டோ 'இன்ஸ்டா கிராமில்' வெளியிட்ட செய்தியில், 'புத்தாண்டை சிறப்புடன் ஆரம்பித்தது மகிழ்ச்சி. எனக்கு ஆதரவு தந்து கிண்ணம் வெல்ல உதவி யதற்கு நன்றி.' என தெரிவித்துள்ளார். இத் துடன், கிண்ணம் வென்ற புகைப்படத்தை யும் இணைத்துள்ளார்.

டு பிளசி சதம் தெ.ஆ. ஸ்திரம்

டு பிளசிஸ் சதம் விளாசியபோது

கண்ணீர் அஞ்சலி

அமரர். சொக்கலிங்கம் விநாயகமூர்த்தி

எமது சங்கத்தின் உறுப்பினர் சொக்கலிங்கம் விநாயகமூர்த்தி டி 10. உருத்திரபுரம் அவர்கள் காலமான செய்தியால் ஆழ்ந்த கவலையடைவதுடன் இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-5017)

தகவல்: கரைச்சிப் பிரதேச ஓய்வூதியர் சங்கம், கிளிநொச்சி.

கண்ணீர் அஞ்சலி

அமரர். கந்தவனம் கணபதிப்பிள்ளை



(6916)

ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி

எமது கலாசாலை விரிவுரையாளர் திருமதி.க.அன்பரசி அவர்களின் அன்புத் தந்தையார்

கந்தவனம் கணபதிப்பிள்ளை

அவர்கள் 03.01.2019 அன்று காலமான செய்தியறிந்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர் கழகம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்.சிதம்பரப்பிள்ளை பத்மநாதன் J.P

(கனன் போட்டோப் பிரதி நிலைய உரிமையாளர், பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் உப தவிசாளர்)

அன்னை மடியில்:- 23.02.1945

அரன் அடியில்:- 18.12.2017



(சி-5015)

அன்பான குடும்பத் தலைவராக,
அருமைச் சகோதரனாக
பண்பான மைத்துனராக,
பாசமிகு மாமாவாக,
அன்புருவான ஆசை அப்பாவாக,
அன்புச் சித்தப்பாவாக,
அருமைத் தாத்தாவாக,
ஆருயிர் நண்பராக
அனைவரையும் அரவணைத்து
ஆலமரமாய் நிழல் தந்தீர்கள்,

ஆலயங்களின் நிர்வாகக்குழு உறுப்பினராக சமயப் பணி புரிந்தீர்கள், வர்த்தக சங்கத் தலைவர், அரிமா சங்கத் தலைவர், செவிப்புலனற்றோர் நிறுவன போஷகர், நகர சபை உப தவிசாளர், சமாதான நீதவான் என பல பதவிகளை வகித்து சமூகப் பணி செய்தீர்கள். மக்கள் சேவையே மகேசன் சேவை எனக் கொண்டு வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த தங்களின் சிரித்த முகம் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்கள் சிந்தையை விட்டு நீங்காது.

தங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனல் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை. குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

திரு.கந்தவனம் கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி)



பிறப்பு - 01.12.1931
இறப்பு - 03.01.2019

தலைமடை, அல்வாய் மேற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் கணபதிப்பிள்ளை அவர்கள் 03.01.2019 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தவனம் சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ் சென்ற இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பையா செல்லம்மா தம்பதியரின் மருமகனும் கதிர்காமத்தம்பி, காலஞ்சென்ற வள்ளிமுத்துவின் சகோதரனும் மற்றும் கலையரசன் (மேலாண்மை கணக்காளர்), அன்பரசி (விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), இன்பரசி (பிரான்ஸ்), கலையரசி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவிகா, வரதராஜன், தவராஜா ஆகியோரின் மாமனாரும், ஆரூரன், அபிநயா, அபிநயன், அரிகரன், அனந்தன், கஜாங்க, இரேஷ், மலிந்து ஆகியோரின் ஆசை பேரனுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 06.01.2019 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தலைமடை, அல்வாய் மேற்கு, அல்வாய்.

(சி-5016)

இங்ஙனம், குடும்பத்தினர். 077 248 7617

இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
ரோகினி, மிருகசீரிடம்

05.01.2019
மார்கழி 21, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
அமாவாசை முழுவதும்
மூலம் பிற்பகல் 4.15 மணிவரை
சுபநேரம் 3.31-5.01 மணிவரை
இராகுகாலம் 9.31-11.01 மணிவரை
அமாவாசை விரதம்
வளவன்

மீனம்	பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.	மேடம்	அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், கரைந்த சேமிப்பை ஈடு கட்டும் எண்ணம் உருவாகும், பெரிய மனிதர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.	இடபம்	தேக நலனில் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம், சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம்.	மிதுனம்	நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.
கும்பம்	பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்,	செவ்				கடகம்	பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், பகையொன்று நட்பாகலாம், கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், கௌரவமான நாள்.
மகரம்	காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.	கேது		ராகு		சிம்மம்	பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.
		சூரி,புத, சனி,சந்	குரு,சுக்				
தனுசு	மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆழ்ந்த சிந்தனையுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.	விருச்சிகம்	வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், உறவினர் வருகையுண்டு, வருமானம் திருப்திகரமாக அமையும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.	துலாம்	நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.	கன்னி	இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இணுவில், மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது. (படங்கள்:-ஜ.சிவசாந்தன்)

அனுமதியின்றி கற்றாழை பிடுங்கியவர்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொன்னாலையில் கற்றாழைக் கன்றுகளைப் பிடுங்கி வாகனத்தில் ஏற்றிச் செல்ல முற்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்த நபர்கள் அப்பகுதி சமூக ஆர்வலர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

மருத்துவ குணமுடைய இயற்கை மூலிகையான கற்றாழைக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ள நிலையில் யாழ். குடாநாட்டில் தற்போது கற்றாழைக் கடத்தல் அதிகளவில் இடம்பெற்று வருகின்றது. தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களும் உள்ளூர் வாசிகளும் கற்றாழையைப் பிடுங்கி விற்பனை செய்து வருகின்றனர்.

தீவகம் உள்ளிட்ட சில இடங்களில் கற்றாழைக் கன்றுகளைப் பிடுங்கிச்செல்வோர்

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

இந்நிலையில், சிறியரக படி வாகனத்தில் வந்த தென்னிலங்கையைச் சேர்ந்த நால்வர் பொன்னாலை மயானத்திற்குச் செல்லும் வீதியில் கற்றாழைகளைப் பிடுங்கியுள்ளனர்.

இதை அவதானித்த சமூக ஆர்வலர் செ.றதீஸ்வரன் அப்பகுதி பிரதேச சபை உறுப்பினருக்கு அறிவித்தார்.

இதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற அவர்கள் இருவரும் கற்றாழைகளைப் பிடுங்கியவர்களை எச்சரித்ததுடன் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க முற்பட்டனர்.

வவுனியாவிலுள்ள பாம் ஒன்றுக்கே கற்றாழைகளைக் கொண்டு செல்வதாகக் கூறிய அவர்கள் குறிப்பிட்டளவான கற்றாழைகளைப் பிடுங்கிச் செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

ஆனால், இயற்கை மூலிகையான கற்றாழையை முற்றாகப் பிடுங்கிச் செல்ல அனுமதித்தால் அது அழிவடைந்துவிடும் என்பதை எடுத்துக் கூறிய மேற்படி இருவரும், அவர்கள் பிடுங்கிய கற்றாழைகளை மட்டும் கொண்டு செல்ல அனுமதித்து திருப்பி அனுப்பினர்.

மருத்துவ தேவைக்கு கற்றாழைகளைக்கொண்டுசெல்வதாயின் வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் அனுமதி பெற்று வாருங்கள் எனவும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் உள்ள சில மரக்கன்று விற்பனை பண்ணைகளில் ஒரு கற்றாழைக் கன்று 60 ரூபா தொடக்கம் 80 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

யாழ்.பிரதேச செயலக கலாசார அதிகார சபையினர் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலைஞர் சுவதம் வேலைத்திட்டத்திற்கமைவாக 15 மூத்த கலைஞர்களுக்கு வீடு தேடிச் சென்று கலைக்குருசில் விருது வழங்கிக் கௌரவித்தனர். (படங்கள்:-கொழும்புத்துறை செய்தியாளர்)

புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கத் திட்டம்

விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2019 ஆம் ஆண்டிற்கான புதிய எழுத்தாளர்களை ஊக்குவிப்புசெயற்றிட்டம் நூல்கொள்வனவு மற்றும் தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டி போன்றவற்றிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே நல்லூர் பிரதேச செயலகபிரிவிற்குட்பட்ட இலக்கியத் துறை சார்ந்த கலைஞர்கள் குறித்த செயற்றிட்டம் மற்றும் போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்களைபிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ

குறுகிய காலக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் ஆங்கில மொழி மூல மனிதவள முகாமைத்துவக் (Short Course Human Resource Management in English Medium) குறுகிய காலக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தி பெற்ற அனைவரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இக்கற்கை நெறியானது மூன்று மாத காலங்களைக் கொண்டுள்ள நிலையில் இக் கற்கை நெறிக்குரிய விண்ணப்பப் படிவங்களை 05.01.2019 முதல் 15.01.2019 வரை பிறவுண்வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்திலும், RDS கட்டடம் சிறிய குருமட வீதி, சாவற்கட்டுமன்னாரில் அமைந்துள்ள மன்னார் கற்கை நிலையத்திலும்பெற்றுக்கொள்ளலாமெனவும் மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திற்கு அல்லது மன்னார் கற்கை நிலையத்திற்கு வருகை தருவதன் மூலம்பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் இக்கற்கை நிலையங்களின் உதவிப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ

இயலுமானவரை மக்கள் நலனை முன்னிறுத்தி சகலரும் செயற்படுங்கள்

டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

பிரதேச சபையை நாம் கைப்பற்றியதானது புகழுக்காகவோ தற்பெருமைக்காகவோ அல்ல. இப் பிரதேச மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்குடனேயே இந்த சபை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் இயலுமானவரை மக்கள் நலனை முன்னிறுத்தி செயற்படுவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்துசெயலாற்றவேண்டுமென்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கட்சியின் வேலணை பிரதேச சபை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது கட்சி மக்களுக்கான அபிவிருத்தி மற்றும் அரசியல் செயற்பாடுகளை முன்னிறுத்தியே பணிகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்தகாலத்தில்வேலணை பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்தி பணிகளை நாம் முன்னெடுத்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொடுத்திருக்கின்றோம். ஆனாலும் இன்றும் பல தேவைப்பாடுகள் இப் பகுதியில் காணப்படுகின்றன.

பொறுப்பை ஏற்றுக்கொள்பவர்கள் அதற்குரிய மகத்துவத்துடன்மக்கள் சேவையை மேற்கொள்ளவேண்டும். கடந்த காலங்களில் கற்றுக்கொண்ட பாடங்களை படிப்பினையாகக் கொண்டு இனிவரும் காலத்திற்குரிய செயற்பாடுகளை நாம் ஒற்றுமையுடன் முன்னெடுக்க வேண்டும்.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியை நிர்ணயிக்கும் பொறுப்பில் பிரதேச சபைக்கே அதிக பங்குண்டு. அந்த வகையில் இந்த பிரதேச சபை எமது கட்சி ஆளுகைக்குள் ளிருப்பதால் மக்களின் நலன்களை முன்னிறுத்தியதாக ஒவ்வொரு செயற்பாடுகளையும் மேற்கொண்டு மக்களின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொடுக்க உழைக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

மணல் பகிரங்க ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு தொகுதி மணல் 09.01.2019 ஆம் திகதி காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏலத்தில் மணல் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும். அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக்கொள்ளும் மணலை அன்றைய தினம் உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-7)

தொழிற்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தில் 2019 ஆம் ஆண்டின் முதலாம் கல்வியாண்டில் பின்வரும் தொழிற்கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

வெளி இணைப்பு இயந்திர பொறிவலர் (NVQ-3), கடலக மாலுமி (NVQ-4), ஆழ்கடல் சுழியோடி (NVQ-3), நீச்சல், கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

படகினை செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தினை (Coxwains License) பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு கடலக மாலுமி பயிற்சி நெறியானது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

மேற்படி பயிற்சியாளர்களுக்கு க.பொ.த. சாதாரணதரம், உயர்தரம் தோற்றியவர்கள் மற்றும் துறைசார் அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

மேலும் இக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு உள்நாடுமற்றும்வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் வகையில் தேசிய தொழிற்றகைமைச் (NVQ) சான்றிதழும் வழங்கப்படும்.

அனைத்து கற்கை நெறிகளும் கட்டணமின்றி நடத்தப்படுவதுடன் இக்கற்கை நெறிகளைக் கற்க விரும்புபவர்கள் உரிய விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்று 20.01.2019 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் மேலதிக தொடர்புகளுக்கு தொ.இல. 021 738 8188/9, 071 834 9073, 077 375 5063 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் உதவிப் பணிப்பாளர் எஸ்.எஸ். கிருஸ்ணலிங்கம் அறிவித்துள்ளார். (இ

தமிழரசுக் கட்சியில் இருப்பவர்கள் அனைவரும் புலிகளுக்கு ஆதரவானவர்கள் அல்ல!

சிலர் விளக்கமில்லாமல் பேசுகின்றனர் என்கிறார் சீ.வீ.கே

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜனநாயகத்திற்கு விரோதமானவர் அல்ல. அவர்கள் ஜனநாயகத் தன்மையை எப்போதும் கைக்கொண்டவர்கள் எனத் தெரிவித்த வடமாகாண சபை அவைத் தலைவரும் தமிழரசுக்கட்சியின் துணைப்பொதுச் செயலாளருமான சி.வீ.கே.சிவஞானம், தமிழரசுக் கட்சியில் இருப்பவர்கள் அனைவரும் புலிகளுக்கு ஆதரவானவர்கள் அல்ல. கட்சியில் ஆரம்பத்தில் இல்லாத சிலர் விளக்கம் இல்லாமல் விடுதலைப்புலிகள் தொடர்பாக பேசுகிறார்கள் எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் அமைந்துள்ள அவரது வீட்டில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது, "ஜனநாயக அரசியல் செய்தவர்களை விடுதலைப் புலிகள் கொலை செய்தார்கள்"என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கூறியிருந்தார். அவரின் கருத்து தொடர்பில் கேட்டபோதே சீ.வீ.கே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.கடந்த 1991 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவை சந்திப்பதற்கு என்னைத் தெரிவு செய்து அனுப்பியிருந்தார். நாங்கள் தினமும் சண்டை பிடித்துக் கொண்டிருக்க முடியாது. பாராளுமன்ற அரசியலிலும் ஈடுபட வேண்டிய தேவை இருக்கின்றது.

அந்தவகையில் ஜனநாயக வழிமுறைகளையும் முன்னெடுக்க வேண்டுமென்றும் பிரபாகரன் தன்னிடம் கூறியதாக சீ.வீ.கே. தெரிவித்தார்.

நீண்ட நாட்களின் பின்னர் பேசப்படுவதனால் மறைக்கப்பட்டிருக்கலாம் அல்லது மறுக்கப்பட்டிருக்கலாம், அந்த விடயங்கள் தெரியாமல் இருந்திருக்கலாம். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் ஜனநாயக தன்மையை எப்போதும் கைக்கொண்டவர்கள். அதனால் தான் ஒவ்வொரு கிராம அமைப்புக்கள், மக்கள் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன.

ஜனநாயகத்திற்கு விரோதமாக விடுதலைப் புலிகள்

எந்தக் காலத்திலும் செயற்படவில்லை.தமிழரசு கட்சியில் இருக்கும் சிலர் அந்தக் காலங்களில் இருந்தவர்கள் அல்ல. இடைவெளிகள் இருக்கின்றன. 20 வருட இடைவெளிகள் இருக்கின்றன.

தமிழரசுகட்சியில் இருப்பவர்கள் அனைவரும் புலிகளுக்கு ஆதரவானவர்கள் அல்ல.உண்மைகள் சொல்ல வேண்டிய நிலை ஏற்படும் போது சொல்ல வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

ஏனெனில், அந்தக் காலத்தில் இருந்து அதற்குள்ளேயே வாழ்ந்தவன். சவால் விடுக்க முடியாது. கட்சித் தலைவர்கள் கொலை செய்யப்பட்டது நடக்கவில்லை எனச் சொல்லவில்லை. சில கொலைகள் நடந்திருக்கின்றன. அது யதார்த்தம், உண்மை, அதற்குரிய காரணங்கள், காரியங்கள் புலிகள் தான் சொல்லியிருக்க வேண்டும். அது எனக்குத் தெரியாது.

அமிர் தலிங்கத்தை கொலை செய்தது தவறு என மாத்தையா போன்றவர்களுக்குச் சொன்னவன் நான். ராஜீவ் காந்தியை கொலை செய்தது தவறு என சொன்னவன் நான். சில தவறுகள் நடந்திருக்கின்றன. அவை இல்லை என மறுப்பதற்கு இல்லை. மக்கள் புரிந்து கொள்வார்கள். சிலரைக் குறை சொல்ல முடியாது. அவர்கள் தற்போது தான் அரசியலுக்கு வருகின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தன்னுடைய காலத்தில் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டுமென்பதில் தெளிவாக இருந்தவர். அதேபோன்று தான், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தனது காலத்திற்குள் தீர்வு கிடைக்க வேண்டுமென்று முயற்சி செய்கின்றார். அதை மதிக்க வேண்டுமென்று அவர்மேலும் தெரிவித்தார். (இ-9-101)

சு.க.தலைமையகத்திற்கு ஜனாதிபதி திடீர் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் முற்பகல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண் டார்.

கட்சியின் மகளிர் அமைப்பு, இளைஞர் அமைப்பு, சட்டத்தரணிகள் அமைப்பு, பட்டதாரிகள் அமைப்பு, தொழிற் சங்கத்தினர் அமைப்பு உள்ளிட்ட அனைத்து இணைந்த சங்கங்களின் பிரதிநிதிகளையும் இதன்போது ஜனாதிபதி சந்தித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து இணைந்த சங்கங்களையும் மறுசீரமைத்து அவற்றின் வினைத்திறனான பங்களிப்பை கட்சிக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய வழிவகைகள் குறித்து ஜனாதிபதி இதன்போது கேட்டறிந்துள்ளார்.

பலமான மக்கள் நேய கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முன்கொண்டு செல்ல வேண்டியதன் முக்கியத்துவத்தையும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையக நடவடிக்கைகளை முறையாக மேணுமாறு கட்சியின் சிரேஷ்ட செயற்பாட்டாளர்களுக்கு இதன் போது ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (இ-7)

யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் விரைவில் நியமிக்கப்படுவார்

இராஜாங்க அமைச்சர் விஜயகலா உறுதி

(யாழ்ப்பாணம்)

தகுதியான சேவைக்கால ஒழுங்கு அடிப்படையிலுள்ள ஒருவரை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 9 மாதங்களாக யாழ்.வலயக் கல்விப்பணிப் பாளர் நியமிக்கப்படாமை தொடர்பில் அவரிடம் வலம்புரி தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாணக் கல்வித் தேவை தொடர்பிலும் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் அதனடிப்படையில் தகுதியான சேவைக்கால ஒழுங்கு அடிப்படையிலுள்ள ஒருவரை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்க விரைவில் நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார். (இ-10)

பெருந்தோட்ட மக்களுக்குப் புரியும் மொழியில் கூட்டு ஒப்பந்தம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்

பிரதமர் ரணிலுக்கு கடிதம்

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை நாளாந்த வேதனத்தை 1000 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு, பிரதமரிடம் கோரிக்கை விடுக்கும் கடிதம் ஒன்று நேற்று பிரதமர் அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ளது.

"ஒருமீ" என்ற சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தினால் இந்தக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கினை வழங்கி வருகின்றனர்.

அவர்களது வேதனத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

அதேநேரம் பிரதமர் ரணில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஜன நாயக உரிமை உறுதி செய்யப்படும் வகையில், அவர்களது வேதன அதிகரிப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் இது தொடர்பான கூட்டு ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்கள் பெருந்தோட்ட மக்களுக்கு புரியும் மொழியில் பகிரங்கப்படுத்தப்படாமல், அதனைக் கைச்சாத்திட அனுமதிக்க வேண்டாம் என்றும் அந்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (இ-7)

பேராசிரியர் கென்னடியின் நினைவும் நூல் வெளியீட்டு நிகழ்வும் நாளை

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கலாநிதி ஜோன் மனோகரன் கென்னடியின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நூல் வெளியீட்டு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் காரைநகர் இந்துக்கல்லூரி நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

காரைநகர் பிரதேசசபை தவிசாளர் விஜயதர்மா கேதீஸ்வரதாசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், ஓய்வுநிலை பேராசிரியர்களான சங்கரலிங்கம் தில்லைநாயகம், பேராசிரியர் செ.யோகராசா, கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-9)

அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
இணுவில்-மருதனார்மடம், சுன்னாகம்
இசை ஆராதனை
05.01.2019
சனிக்கிழமை ஹனுமத் ஜெயந்தி தினம்
அதிகாலை 5.30 மணி - உதயபூசை
காலை 6.00 மணி - 108 கலச அபிஷேகம்
பகல் 11.00 மணி - ஆன்மீக உரை: "தொண்டர் தம் பெருமை"
வழங்குபவர்:- "மதுர வாகீசர்" பிரம்மஸ்ரீ குமார சுவாமிநாத சர்மா
பகல் 12.00 மணி - சந்தன அலங்கார பூஜை
பகல் 1.00 மணி - அன்னதானம்
உபயம் திரு இராசேந்திரம் குடும்பம் - "சிறி சிவராம் ரேடர்ஸ்"
இல.248, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். S.S.T

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
வருடாந்த பொதுச்சபைக் கூட்டம்
காலம்:- 06.01.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி
இடம்:- கரவெட்டி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபம்
தலைவர்:- திரு.வ.கணேசமூர்த்தி
சங்க அங்கத்தவர்களுக்கும் நிகழ்ச்சிநிரல் தபால்மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இவ்வறிவித்தலை ஏற்று அங்கத்தவர்கள் அனைவரையும் உரிய நேரத்திற்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றேன்.
தலைவர்:- வ.கணேசமூர்த்தி (C-5018)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
2016/2017 ஆம் ஆண்டிற்கான திறன் உற்பத்தி தேர்வில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் திறமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
கிளி.மாவட்டச் செயலர் மற்றும் அனைத்து அலுவலர்களினதும் பணி மேலும் உயர் வடைய எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.
கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதியர் சங்கம்.
கிளிநொச்சி. (C-5019)

பார்த்தீனியம் ஒழிப்பு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தால் பருத்தித்துறை வீதி வல்வைப் பகுதியில் வளர்ந்துள்ள பார்த்தீனியச் செடிகளை அழிக்கும் நடவடிக்கை நேற்று காலை 7 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலாளர் இ.தயாரூபன் தலைமையில் இடம்பெற்றது. (இ-10-60)

க.பொ.த.(உ/த) வில் 3S பெற்ற எல்லோரும் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் (முதற்படிவம்- First Form) அனுப்புவதற்கு தகுதி பெற்றவர்களாவர்

கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்
(B.A. (Hons) Dip-in-Edu,M.A)

03

பௌதிக விஞ்ஞானப் பிரிவு (Physical Science Stream) பல்கலைக்கழக கற்கை நெறிகளும் பட்டங்களும்

இல	பாடம்	பட்டம்	உயர்கல்வி நிறுவனம்
1	பொறியியல் 1. இரசாயனமும் பதப்படுத்தலும் பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	பே/மொற
	2. குடிசார் பொறியியல்	பீ.எஸ்.சி என்.ஜி	பே/மொற/தெகி/யாப
	3. குடிசார் மற்றும் சூழலியல் பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	உறு
	4. கணினி பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	பே/யாப்
	5. கணினி (மென்பொருள்) பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	தெகி
	6. கணினி விஞ்ஞானமும் பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	மொற
	7. மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	பே/தெகி/யாப
	8 மின் மற்றும் தகவல் பெறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	உறு
	9. மின் பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	மொற/தெகி
	10.இலத்தி. மற்றும் தொலை.தொடர் பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	மொற
	11. பொறிமுறைப் பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	பே/மொற/தெகி/யாப
	12. பொறிமுறை, தயாரிப்புப் பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	உறு
	13. உற்பதிப் பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	பே
	14. திரவிய விஞ்ஞானமும் பொறியியலும்	பீ.எஸ்.சி.என்.ஜி	மொற
	15. இலத்திரனியல் பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	தெகி
	16. உயிரியல் மருத்துவப் பொறியியல்	பீ.எஸ்.சி.என்.ஜி	மொற
2	பொறியியல் (EM)	பீ.எஸ்.சி.என்.ஜி	மொற
3	பொறியியல் (TM)	பீ.எஸ்.சி.என்.ஜி	மொற
4	பௌதிக விஞ்ஞானம்	பீ.எஸ்.சி	கொ/பே/ஸ்ரீஜ/கள/யாப/உறு/கிப/தெகி
5	கணினி விஞ்ஞானம்	பீ.எஸ்.சி	யாப/சப/கிப/ரஜ/வய
6	பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிகவியல்)	பீ.எஸ்.சி	வப/கிப/யாப
7	போக்குவரத்தும் தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவம்	பீ.எஸ்.சி	மொற
8	கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும்	பீ.எஸ்.சி	கொ
9	புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும்	பீ.எஸ்.சி	பே
10	கணக்கிடலும் தகவல் முறைமைகளும்	பீ.எஸ்.சி	சப
11	பௌதிக விஞ்ஞானம் (ICT)	பீ.எஸ்.சி	ஸ்ரீஜ/கள
12	கணிய அளவையியல்	பீ.எஸ்.சி	மொற
13	கட்டடக்கலை	பீ.ஆர்க்	மொற
14	வடிவமைப்பு (கட்டடக்கலை)	பீ.டிசைன்	மொற
15	நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்	பீ.டீ.எஸ்	மொற
16	முகாமைத்துவக் கற்கைகள் (TV)	பீ.எஸ்.சி	கிப/யாப
17	விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	பீ.எஸ்.சி	ஊவெப
18	தகவல் தொழில்நுட்பம்	பீ.எஸ்.சி	மொற
19	முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்	பீ.எஸ்.சி	கள
20	பட்டினமும் நாடும் திட்டமிடல்	பீ.எஸ்.சி (சி)	மொற
21	சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும்	பீ.ஏ	கள
22	தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் (ICT)	பீ.ஜ.ரி.சி	யாப (வவு)
23	சட்டம்	எல்.எல்.பீ	கொ/பே/யாப
24	வசதிகள் முகாமைத்துவம்	பீ.எஸ்.சி	மொற
25	கணக்கிடலும் முகாமைத்துவமும்	பீ.எஸ்.சி	பே
26	கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	பீ.எஸ்.சி	ஊவெப
27	தொழில்முயற்சியும் முகாமைத்துவமும்	பீ.பீ.ஏ (சி)	ரஜ
28	இயன் மருத்துவம்	பீ.எஸ்.சி.	கொ/பே
29	தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்	பீ.எஸ்.சி.	ஊவெப
30	கைத்தொழில் தகவலும் தொழில்நுட்பம்	பீ.ஜ.ஜ.ரி	ஊவெப
31	கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும்	பீ.எஸ்.சி	ஊவெப
32	முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL)	பீ.எஸ்.சி	தெகி
33	உடற்றொழில் கல்வி	பீ.எஸ்.சி	சப
34	விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும்	பீ.எஸ்.சி	சப/ஸ்ரீஜ
35	பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும்	பீ.எஸ்.சி	கள
36	விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்சிகள் முகாமைத்துவம்	பீ.எஸ்.சி	ஊவெப
37	பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர்பால்தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்	பீ.எஸ்.சி	ஊவெப
38	தகவலும் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்	பீ.எஸ்.சி	மொற
39	சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும்	பீ.எஸ்.சி	ரஜ/சப
40	தகவல் முறைமைகள்	பீ.எஸ்.சி	கொபகக
41	நிலத்தோற்றக் கட்டடக் கலை	பீ.எஸ்.சி	மொற
42	மென்பொருள் பொறியியல்	பீ.எஸ்.சி	கள
43	அளவையியல் விஞ்ஞானம்	பீ.எஸ்.சி	சப
44	மொழிபெயர்ப்புக் கற்கைகள்	பீ.ஏ	கள/யாப/சப
45	திரைப்படமும் தொலைக்காட்சிக் கற்கைகள்	பீ.எஸ்.சி	கள
46	செயற்றிட்ட முகாமைத்துவம்	பீ.எஸ்.சி	யாப(வவு)
47	கடல்சார் மற்றும் நன்னீர் விஞ்ஞானம்	பீ.எஸ்.சி	உறு
48	உணவு வியாபர முகாமைத்துவம்	பீ.ஜ.எஸ்	சப

(தொடரும்)

பந்துலவின் கருத்து கண்டிக்கத்தக்கது

கல்வியமைச்சர் காரியவசம் காட்டம்

(கொழும்பு)

இம்முறை க.பொ.த (உயர் தர) பரீட்சை பெறுபேறுக ளின் பிரகாரம் நாடளாவிய ரீதியில் முதலாமிடத்தை சர் வதேச பாடசாலையை சேர் ந்த மாணவி ஒருவர் பெற் றுக் கொண்டமை தொடர் பாக முன்னாள் கல்வி அமை ச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்த கருத்தை வன் மையாகக்கண்டிப்பதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரி யவசம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கல்வி அமை ச்சின் ஊடகப் பிரிவு வெளி யிட்டுள்ள அறிக்கையில்,

உயர்தர பரீட்சை பெறு பேறுகளை வெளியிடும்போது தேசிய பாடசாலை மற்றும் சர்வதேச பாடசாலை எனப் பிரித்து நோக்க வேண்டும் என்பதே பந்துல குண வர்த் தனவின் கருத்தாகவுள்ளது. சர்வதேச பாடசாலை மாண வர்கள் சர்வதேச மட்டத்தி லான பரீட்சைக்கு மாத்திரமே தோற்ற வேண்டும் என்பதே அவரது கூற்றாகவுள்ளது.

அவர் அமைச்சராக இரு க்கும் போது சர்வதேச பாட சாலை மாணவர்கள் எவரு க்கும் தேசிய மட்டத்திலான பரீட்சைகளுக்கு இடம் வழ ங்கவில்லை என அவர் கூறி யுள்ளார். சர்வதேச பாடசா லைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பெறுபேறு களை தேசிய பாடசாலை களில் கல்வி பயிலும் மாண வர்களின் பெறுபேறுகளு டன் இணைத்துக் கொள் வது இலவச கல்வியை கீழ் நிலைக்குத் தள்ளும் என் பதே பந்துல குணவர்த்தன எம்.பியின் வாதமாகும்.

பல வருடங்களாகக் கல்வி அமைச்சராகவும் தனியார் வகுப்பு ஆசிரியராகக் கடமை புரிந்த பந்துல குணவர்த்தன கூறும் கருத்து அடிப்படை தகைமையற்றதுடன் மக்க ளின் கவனத்தை திசை திரு ப்பும் செயலாகும். தனது குறு கிய அரசியல் நோக்கத்துக் காகச் சிறார்களின் கல்வி யைப் பயன்படுத்து வது வெட் கக்கேடான முயற்சியாகும்.

நாட்டின் அனைத்துப் பிர ஜைகளுக்கும் கல்வி பயிலும் சம உரிமை என்பது ஐக்கிய நாடுகளின் நிலையான அபி விருத்தி இலக்குகளிலும் உள் ளடக்கப்பட்டுள்ளது.

இதனை இலங்கையர் என்ற வகையில் நாம் மனி தாபிமான அடிப்படையில் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். தேசிய மற்றும் சர்வதேச பாடசாலைகளிலோ அல்லது வேறு ஏதும் பாடசா லைகளிலோ கல்வி பயில்வ தற்கும் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கும் எந்தத் தடை யும் கிடையாது.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறு களை வெளியிடும் போது பாடசாலை, இன, மத பேதங் களின் பிரகாரம் பிரித்து பெறு பேறுகளை வெளியிடும் முறைமை ஜனநாயக சமூக த்தில் ஒருபோதும் கிடை யாது. பந்துல குணவர்த்தன

கூறுவது போன்று பரீட்சை பெறுபேறுகளை பிரித்து வெளி யிடப் பரீட்சைகள் திணை க்களத்தினால் முடியாது என் பதனை நினைவூட்ட விரும் புகின்றேன்.

பக்கச்சார்பற்ற நிறுவன மான பரீட்சை திணைக்கள த்தைச் சுயாதீனமாகச் செயற் பட இடமளிப்பதனை விடு த்து அதன் செயற்பாடுகளின் மீது அத்துமீறி அமைச்சர் என்ற வகையில் என்னால் தலையிட முடியாது. தன்னு டைய பதவிக் காலத்தில் சர் வதேச பாடசாலை மாணவர் கள் இவ்வாறு உயர் பெறுபே றுகளை எடுக்கவில்லை என பந்துல குணவர்த்தன கூறு வதானது பரீட்சை திணைக் களத்தின் வினாத்தாள் திரு த்த பணிகளில் அத்துமீறி தலையீடு செய்திருக் லாம் என்ற சந்தேகம் ஏனையவ ர்களுக்குத் தோன்றுவதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

மாணவர்களுக்கு அரச அல்லது தனியார் பாடசா லைகளில் கல்வி பயில்வதற் கான பூரண உரிமை உள் ளது. அதனை எவராலும் சவாலுக்கு உட்படுத்த முடி யாது. கடந்த காலங்களில் காட்சிப்படுத்தலுக்கு மாத்தி ரம் மட்டுப்படு த்தப்பட்டிருந்த இலவச கல்வி தற்போது செய ற்றிறன்மிக்க பெறு பேறுகளை பெறும் அளவுக்கு தலைமைத் துவம் வழங்கப்படுகின்றது.

இதன்படி அருகாமை பாட சாலை சிறந்த பாடசாலை திட்டம் சிறந்த எடுத்துக்காட் டாகும். அதேபோன்று உயர் தர மாணவர்களுக்கு டப் வழ ங்கல், விஞ்ஞான ஆய்வுக் கூடம் இல்லாத பாடசாலை களுக்கு நடமாடும் விஞ்ஞான ஆய்வுக் கூடம் வழங்கல், கணனி வசதிகள் இல்லாத பாடசாலைகளுக்கு மடிக் கணனி வழங்கல், அனை த்து மாணவர்களுக்கும் சுர க்ஷா காப்புறுதி திட்டம் ஆகி யன இலவச கல்வியை பாது காப்பதற்கான நோக்கத்தின் பிரதிபலன்களாகும். மேற் குறிப்பிட்ட திட்டங்கள் படிப்ப டியாக அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு வருகின்றன.

இலவச கல்வி, மாணவ ர்களுக்கான இலவச சீருடை, இலவச பாடப்புத்தகம், மதிய உணவு போன்ற சலுகை வழங்கி அனைத்து மாண வர்களின் கல்வி உரிமை யைப் பாதுகாப்பதற்கு அர்ப்ப ணித்த ஐக்கிய தேசியக் கட்சி யின் தற்போதைய பொதுச் செயலாளர் என்ற வகையில் பந்துல குணவர்த்தனவின் கருத்தை நான் நிராகரிக் கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

திமிங்கிலங்கள் பார்வையிடல் சுற்றுலா பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்

அமைச்சர் சாகல தெரிவிப்பு

(கொழும்பு)

நீண்ட காலமாக திமிங் கிலங்கள் பார்வையிடல் சுற்றுலா வியாபாரத்தில் தீர் வின்றி காணப்படுகின்ற பிரச்சினைகளை உரிய முறை யில் தீர்த்து.இத்துறை மூல மாக நாட்டின் பொருளா தாரத்திற்கு பங்களிப்புச் செய்யப்படவேண்டுமென துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார த்தை போன்று திமிங்கில ங்களின் பாதுகாப்பினை உறுதி செய்வது தொடர்பி லும் அனைவரும் விசேட கவனம் செலுத்தி செயற்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

திமிங்கிலங்கள் பார் வையிடல் வியாபாரத்தில் காணப்படுகின்ற பிரச்சி னைகள் தொடர்பாக, அத னுடன் தொடர்புடைய நிறு வனங்களுடன் கலந்துரை யாடி குறித்த காலத்திற்குள் பிரச்சினைகளுக்கு தீர் வினை வழங்கும் நோக் குடன் விசேட கலந்துரை யாடலொன்று துறைமுகங் கள் மற்றும் கப்பல்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாய க்க தலைமையில் அமைச் சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் கருத்துரை த்த அமைச்சர் நீண்ட கால மாக திமிங்கிலங்கள் பார் வையிடல் வியாபாரத்தில் தீர்வின்றி காணப்படுகின்ற பிரச்சினைகளை உரியமுறை யில் தீர்த்து.இத்துறை மூல மாக நாட்டின் பொருளா தாரத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை போன்று திமிங்கிலங்களின் பாது காப்பினை உறுதி செய்வது தொடர்பிலும் அனைவரும் விசேட கவனம் செலுத்தி செயற்பட வேண்டும்.

நாடென்ற வகையில் நாம் உரிய முறையில் சட்ட திட் டங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண் டும். இச்சந்தர்ப்பத்தில் ஏதே னும் குறைபாடுகள் நிகழுமா யின் அதன் மூலமாக நாட் டிற்கு பெரும் பாதிப்பு ஏற்ப டும். அதே போல் நாட்டின் பெருளாதாரத்திலும் பாரிய சிக்கல்கள் தோன்றும். அது மாத்திரமன்றி சான்றிதழ் வழங்குதலிற்கு அப்பால் காணப்படுகின்ற பிரச்சினை கள் தொடர்பிலும் அவதா னம் செலுத்த வேண்டும். கடலில் படகுகள் செயற்படும் முறை,திமிங்கிலங்களிற்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் செயற்படும் முறை தொடர் பிலும் அவதானம் செலுத்த வேண்டும்.

இவ்வனைத்து நடவடிக் கைகளின் பொருட்டு அனை வரும் ஒன்றிணைந்து செயற் பட வேண்டும். அவை உரிய நடைமுறைகளை பின்பற்றி முன்னெடுக்கப்பட வேண் டும். அவர்கள் எதிர்கொள்கி ன்ற பிரச்சினைகள் தொடர் பில் அவதானம் செலுத்தி. குறித்த காலப்பகுதிக்குள் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் சுட்டிக்காட்டி னார்.

வனஜீவராசிகள் பாது காப்பு திணைக்களம் மற் றும் கரையோர பாதுகாப்பு திணைக்களத்துடன் இணை ந்து வணிக கப்பல்செயல க அலுவலகத்தின் உதவியு டன் இச்செயற்றிட்டம் முன் னெடுக்கப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டு தை மாதம் முதல் 05 மாத காலப்ப கு திக்குள் படகு உரிமையாளர் களுக்கு தரச் சான்றிதழ்வழ ங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெ டுக்குமாறு அமைச்சர் இதன் போது யோசனை யொன்றை முன்வைத்தார்.

அதேபோல் வன ஜீவரா சிகள் பாதுகாப்பு திணைக் களத்தால் 2012ஆம் ஆண்டு திமிங்கிலங்கள் பார்வையிடல் தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை கற்பிட்டி மற்றும் ஹிக்கடுவ பிரதேசங்களில் நடைமு றைப்படுத்தப்படுவதைப் போல் தை மாதம் முதல் மிரிஸ்ஸ பிரதேசத்திலும் நடைமு றைப்படுத்துவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டது.

அமைச்சரின் யோச னைக்கமைவாக படகு உரி மையாளர்களிற்கு கடன் சலுகைகள் வழங்குவதற் கும், சட்ட திட்டங்களிற்கு உட் பட்ட வகையில் கொடுப்ப னவு களை மேற்கொள்வத ற்கும் யோசனை முன்வைக் கப்பட்டது.

நாளொன்றிற்கு 2000 வரையிலான உல்லாச பய ணிகள் திமிங்கிலங்களை பார்வையிடுவதற்கு வருகை தருவதுடன் உரிய நடை முறை இன்மையினால்மாதா ந்தம் ரூபாய் 45 இலட்சம் வரையில் நட்டம் ஏற்படு வதாகவும் திமிங்கிலங்கள் பார்வையிடல் மற்றும் நீர் விளையாட்டு சங்கத்தின் தலைவர் எச்.எட்வின் சில்வா இக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டினார். (இ-7)

மாமனிதர் குமார் பொன்னம்பலம்



மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.

நெஞ்சு நிறை வீரமுடன் நேர்மை தேங்க
நாம்போற்றி வளர்த்தகுமார் வந்த பொல்லா
வஞ்சகரின் வழிபோனார் வாழ்வை நீத்தார்
வரலாறு மறக்காத சதியாற் கொன்றோர்
வெஞ்சமரே விளையாடும் இடமாய்க் கொண்ட
வீரனையேன் அழித்தீர்கள் எதற்கும் என்றும்
அஞ்சியறி யாதகுமார் வீர சொர்க்கம்
அடைந்துசிரித் திருக்கின்றார் வீரம் வாழ்க.

அதிகார வர்க்கமே உமக்கோர் நீதி
அடுத்தவர்க்கு வேறொன்றா ஏற்க மாட்டோம்
அதிகாரம் வெல்வதெந்த நாளும் அல்ல
சந்தர்ப்பம் வரும் போது புரிவீர் உண்மை
இதமாக மக்களுடன் பழகி நேர்மை
இதவென்று சொன்னவரை அழித்து விட்டால்
புதிதாக அவர் பிறப்பார் நீதிக்காக
புறப்படுவார் அன்னவரை வாழ்த்து வோமே.

நான் வாழ்ந்து நம்மினத்தோர்
நாடுண்டு அரசுண்டு என்னும் போது
ஏன்கூழ்ந்து நிற்கின்றீர் விலகிப் போங்கள்
என்றதற்கா தண்டித்தீர் கோழைக்கூட்டம்
தான் தேர்ந்த வழி நடந்த வீரச் சிங்கம்
சதியாலே அழிக்கப்பட் டகன்றா ருண்மை
ஏன் சேர்ந்து நிற்கின்றோம் இங்கே அந்த
இணையில்லை வீரனைநாம் பணிவதற்கே.

தருக்குடையான் தமிழ்த்தலைவன் ஜீ.ஜீ.தந்த
தனிவீரன் மாமனிதன் ஆகிவிட்டீர்
நெருப்பிடையில் என்றாலும் நீந்திச் சென்று
நேரெதிர்க்க வல்லவனை வீழ்த்தி னார்கள்
மரிப்பதிலும் புகழோடு மரித்த வீர
மாமனித தலைதாழ்த்தி வணங்கு கின்றோம்
மருக்கொழுந்தே நீர்வேண்டும் தமிழீழத்தின்
மண்ணிடத்தே பிறந்திடுக வரவேற்போமே.

நீதியதன் தேவதையே நிலைத்து நோக்கி
நின்றமுத காட்சிமனக் கண்ணிற் கண்டோம்
மாதவனே மாமனித குமாரே எங்கள்
மனம் நிறைந்த மாமணியே தலைசாய்க் கின்றோம்
ஏதுமினித் தவறுநடந் திட்டால் எங்கள்
இராச்சியத்தில் பதில்சொல்லி ஆக வேண்டும்
போதுகளால் மாலைசெய்து பூணு கின்றோம்
புகழ்வீரு யுகம் நூறு வளர்க வாழ்க

அமரர்-மன்னவன்

கம்பெரலிய திட்டத்தில் அமைக்கப்பட்ட குடத் தனை அ.த.க. பாடசாலையின் திறந்த வெளியரங்கை நேற்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தி ரன் திரைநீக்கம் செய்தார். (படங்கள்:-மகாலிங்கம்)

நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர்

பாதிக்கப்பட்ட 490 குடும்பங்களுக்கு உதவிப்பொருட்கள் வழங்கி வைப்பு

ஒட்டுசுட்டானில் வைத்து வழங்கினார்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேற்று பயணம் மேற்கொண்ட நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள ஒட்டுசுட்டானிலுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கிவைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பயணம் மேற்கொண்ட நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 490 குடும்பங்களுக்கு உதவி பொருட்களை வழங்கிவைத்துள்ளார்.

பொதுமக்களின் வீட்டுப் பாவனைக்கு தேவையான அத்தியாவசியபொருட்கள் மெத்தை, நுளம்புவலை, விளக்குமாறு, தும்புத்தடி, மொப்பர், தண்ணீர்க்கான், பாய் தலையணை, போர்வை, துவாய் உள்ளிட்ட சிறுவர்களுக்கு தேவையான பொருட்களும் பாடசாலை மாணவர்களுக்கு தேவையான கொப்பிகள், புத்தகப்பை உள்ளிட்ட பத்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை 200 குடும்பத்தலைவிகளை கொண்ட குடும்பங்களுக்கும், 250 பாடசாலை மாணவர்களுக்கும், 40 சிறுவர்களுக்கும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சின் செயலாளர், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மக்களுக்கான உதவிப் பொருட்களை வழங்கி வைத்துள்ளார்கள். (2-281)

முல்லைத்தீவு மக்களுக்கு சபாநாயகர் நட்டஈடு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் வெள்ள இடரால் பதிக்கப்பட்ட மக்களுக்கு சபாநாயகர் கருஜெயசூரிய நட்டஈடு வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அவர், மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார். அதன் பின்னர் வெள் ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கி வைத்ததுடன், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகளையும் மாவட்ட செயலாளரிடம் கையளித்தார்.

அத்தோடு மாவட்டத்தின் அனர்த்த நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்த அவர், அடுத்து முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

நிகழ்வில் சபாநாயகர் கரு ஜெயசூரிய, சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் அமைச்சர் தயாகமகே, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சாந்தி சிறிஸ்கந்தராஜா உள்ளிட்டவர்களும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (2-281)

முல்லை.மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் வாழ்வாதாரங்கள், உட்கட்டுமானங்கள் பாதிப்பு

அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் 10 ஆயிரத்து 118 குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 551 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 86 வீடுகள் முழுமையாகவும் 2 ஆயிரத்து 297 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் 24493.5 ஏக்கர் பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளது. அத்துடன் 11 ஆயிரத்து 237 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும் கடற்றொழிலில் ஈடுபடுகின்ற 22 படகுகள் தொலைந்ததுடன் 224 வலைகள் காணாமல் போயுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் இடம் பெற்ற வெள்ள அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஏற்பட்ட மொத்த இழப்பீடுகள் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ளநீர் காரணமாக மக்களின் வாழ்வாதாரங்கள், உட்கட்டுமானங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நெற்பயிர்ச்செய்கை 2016 46.5 ஏக்கர் பகுதியாகவும் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. நிலக்கடலை 3 ஆயிரத்து 849 ஏக்கர் சேதமடைந்துள்ளன. உளுந்து, பயறு போன்றனவும் முழுமையாகவே சேதமடைந்துள்ளன. மரக்கறி பயிர்ச்செய்கை 498 ஏக்கர் சேதமடைந்துள்ளன.

கால்நடைகளும் உயிரிழந்துள்ளன. மாடுகள் 3ஆயிரத்து 12, எருமை மாடுகள் 418, ஆடுகள் 912, கோழிகள் 6 ஆயிரத்து 895 முழுமையாக இறந்துள்ளன. இதனை நம்பியுள்ள விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளார்கள். கால்நடைகளின் கொட்டில்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மேய்ச்சல் தரவைகளும் சேதமடைந்துள்ளன.

மீன்பிடித்துறையில் கடற்றொழிலில் ஈடுபடுகின்ற 15 படகுகள் தொலைந்துள்ளதுடன் 187 வலைகள் காணாமல் போயுள்ளன. நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்களின் படகுகள் ஏழு, 37 வலைகளும் காணாமல் போயுள்ளன.

நன்னீர் மீன்பிடிக்காக மீன்குஞ்சுகள் குளங்களில் விடப்பட்டன. அவைகளும் வெள்ள நீரினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. மீண்டும் குளங்களில் மீன் குஞ்சுகள் விடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதிகளும் கட்டுமானங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கான வீதிகள், 84.2 கிலோமீற்றர் வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. 29 கால்வாய்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மூன்று விவசாய வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் மாந்தை கிழக்கில் 39 வீதிகளான 36.5 கிலோ மீற்றர் வீதிகளும் துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட 30.9 கிலோமீற்றர் வீதிகளும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட 119.8 கிலோமீற்றர் வீதிகளும் பாலங்கள், கல்வெட்டு போன்ற சுமார் 60 இற்கு மேற்பட்டவை பாதிக்கப்பட்டுள்ளன. கரைதுறைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட 82 வீதிகள், 93.25 கிலோமீற்றர் வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாசன திணைக்களத்திற்குரியக் கட்டுமானப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு கீழான பத்து சிறுகுளங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளில் சிறுசிறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (2-281)

புதுக்குளத்தில் தங்கம்மா கல்வி வளாகத்தில் வன்னியின் முதலாவது E கல்வி நிலையம் திறப்பு

கனகராயன் புதுக்குளத்தில் வன்னியின் முதலாவது E கல்வி நிலையமாக தங்கம்மா கல்வி வளாகம், E கல்வி நிலையம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படுவதில் மகிழ்வடைகின்றேன் என பேராசிரியர் கலாநிதி முருகர் குணசிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கனகராயன்குளம்தெற்கு கிராம அலுவலர் பிரிவில் புதுக்குளம் கிராமத்தில் வன்னியின் முதலாவது E கல்வி நிலையமாக தங்கம்மா கல்வி வளாகம், - E கல்வி நிலையம் கடந்த 2 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் கலாநிதி முருகர் குணசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கனகராயன்குளம்தெற்கு கிராம அலுவலர் பிரிவில் புதுக்குளம் கிராமத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் தங்கம்மா முதியோர் இல்லம் மற்றும் தங்கம்மா இலவச கல்வி நிலையம் என்பன நடத்தப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் குறித்த தங்கம்மா கல்வி வளாகத்தில் புலம்பெயர் அமைப்பான we 4 you அமைப்பின் ஊடாக குறித்த வளாகத்தில் E-கல்வி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான கணனிகளையும் அதற்கான ஆசிரியரையும் வழங்கி உதவி செய்துள்ளனர். இதனடிப்படையில் இதற்கான கட்டடம் தங்கம்மா கல்வி வளாகத்தால் அமைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக தங்கம்மா கல்வி வளாகம், E- கல்வி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் கலாநிதி முருகர் குணசிங்கத்தின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் குறித்த தங்கம்மா E- கல்வி நிலையத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார். (2)

இ.போ.சபை ஊழியர்கள் அரைநாள் பணிப்புறக்கணிப்பு

பேருந்துகள் சாலைகளில் தரிப்பு; மக்கள் வீதியில் காத்திருப்பு

(மன்னார்)

வடக்கு மாகாணத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை ஏழு சாலைகளின் ஊழியர்கள் நேற்று காலை முதல் நண்பகல் வரை பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

வடக்கு பிராந்திய முகாமையாளரை மாற்றக்கோரி மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய சாலைகளின் ஊழியர்கள் பேருந்து சேவையில் ஈடுபடாது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

பேருந்து சேவை இடம் பெறாமையால் வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பொது மக்கள், உத்தியோகத்தர்கள், உட்பட பல்வேறு தரப்பினரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்திருந்தனர்.

குறிப்பாக பருவகால சீட்டுடன் பயணங்களை மேற்கொள்ள சென்ற மாணவர்கள், தினைக்கள உத்தியோகத்தர்கள் கடும் பாதிப்பை எதிர்கொண்டிருந்தனர்.

இதேவேளை மன்னார் சாலைக்குச் சொந்தமான பேருந்துகள் நேற்று முன்தினம் இரவு தங்கி நின்ற கிராமங்கள் மற்றும் மாவட்டங்களில் இருந்து மன்னார் சாலைக்கு வந்தன.

இப்பேருந்துகளில் மன்னாருக்கு வருகை தந்த மக்கள் தொடர்ந்தும் தமது இடங்களுக்கு பயணத்தை மேற்கொள்ள முடியாது சிக்கி தவித்தனர்.

இதனால் மக்கள் அங்கலாய்த்து நின்றதுடன் வெளி மாவட்டங்களுக்கு சென்று தமது வேலைகளை செய்ய முடியாது அவசரப்பட்டதை காண முடிந்தது.

அத்துடன் அனைத்து அரச பேருந்துகளும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் சாலைகளில் தரித்து நின்றன.

எனினும் மக்கள் தனியார் போக்குவரத்து சபையில் பேருந்துகள் மூலம் தமது பயணங்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-285-250)

பொலிஸாரின் உருவப்பொம்மைக்கு இலஞ்சம்

சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட இரு நபர்கள் பிணையில் விடுதலை

(பனிக்கன்குளம்)

வவுனியா பொலிஸாருக்கு இலஞ்சம் வழங்கிய இரு தனியார் நிறுவன ஊழியர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வவுனியா போக்குவரத்து பொலிஸாரினால் அதி வேகத்தை கணிக்கும் கருவியுடனான பொலிஸ் உருவப் பொம்மையொன்று வவுனியா ஏ9 வீதியில் வைக்கப்பட்டிருந்தது.

அந்த உருவப்பொம்மைக்கு இலஞ்சம் வழங்குவது போன்று வீடியோ செய்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் இரு ஊழியர்களை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியுள்ளனர்.

இதன் போது குறித்த இரு நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

தற்போது அவ்விடத்திலிருந்த உருவப்பொம்மையைப் பொலிஸார் அகற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)



கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை சென்.ஜோன் அம்புலன்சினதும் AMDA ஆசிய நாட்டு நிறுவன இலங்கைக் கிளையின் தலைவருமான டாக்டர் எஸ்.எம். சமரகேயின் வேண்டுகோளுக்கு இணங்க AMDA தலைமையகம் ஜப்பான் நாட்டில் இருந்து தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதியாகிய கி.டி.அக்கி நேரடியாக விஜயம் செய்து பாதிக்கப்பட்ட கண்டாவளை மக்களுக்கு சென்.ஜோன் அம்புலன்ஸ், யாழ்.மாவட்ட உறுப்பினர்களுடன் இணைந்து நிவாரண உதவி வழங்குவதைப் படங்களில் காணலாம்.

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

பத்தரமுல்ல சீலரத்தின தேரர் உலருணவுப் பொதிகள் வழங்கினார்

(பரந்தன்)

பத்தரமுல்ல சீலரத்தின தேரர் நேற்று கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100 பேருக்கு நிவாரணப் பொதிகளை கிளிநொச்சி உதயநகர் பகுதியில் வைத்து வழங்கினார். இதன் போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு அவரால் உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மக்கள் மத்தியில் கருத்து தெரிவித்த தேரர்,

இங்கு உள்ளவர்கள்எமது சகோதரர்கள். சுனாமி ஏற்பட்டது போன்று இன்று இங்கு உள்ள மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உதவுவதற்கு இவர்களின் வாக்குகளால் வந்தவர்களிற்கு முடியாது உள்ளது.

சம்பந்தனும் தமிழ் மக்களின் வாக்குகளாலே வந்தவர். அவர்களால் பாதிக்கப்பட்ட இவர்களுக்கு எதையும் செய்ய முடியவில்லை என தெரிவித்தார்.

மலையகத்தில் தொண்டமான் போன்றோரின் பிள்ளைகளும், இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளின் பிள்ளைகளும் இந்தியாவில் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர்.

ஆனால் இந்த பிள்ளைகள் ஏழைகளாகவே வாழ்க்கையை முன்னெடுக்கின்றனர் என அவர் இதன்போது தெரிவித்தார். (2-312)

திருவாசக முற்றோதல்

(பளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பளை இரட்டைக் கேணி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் நாளை 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு திருவாசக முற்றோதல் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நிறைவு பெற்று தொடர்ந்து விசேட பூசைகள் இடம்பெற்று மாணிக்கவாசகர் சுவாமி வீதியுலா இடம் பெறும். (2)

மாணவர்களுக்கான சீருடை வவுச்சர்கள் விநியோகம்

வவுனியா தெற்கு கல்வி வலயப்பணிப்பாளர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான சீருடை வவுச்சர்கள் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக வவுனியா தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர் முத்து இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

வவுனியா தெற்குகல்விவலயத்திற்குரிய பாடசாலைகளுக்கான மாணவர்களின் சீருடை வவுச்சர்கள் அனைத்தும் பாடசாலை அதிபர்களிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதனை தற்போது பாடசாலைகளில் பெற்றுக்கொள்ளமுடியும்என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன வடபிராந்திய அலுவலகத்தினரால் அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு உலருணவுப் பொதிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன வட பிராந்திய முகாமையாளர், சாவகச்சேரி, நெல்லியடி, கிளிநொச்சி, சங்கானை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் கிளை முகாமையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் தொண்டு நிறுவனத்தினால் சுத்தப்படுத்தும் பணி

(குரும்மன்காடு)

கிளிநொச்சியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் இறைக்கப்பட்டு கனடா உறங்காவிழிகள் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கனடா உறங்கா விழிகள் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகள் துப்புரவு செய்து மக்களுக்கு கையளிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

குறித்த பணியில் கிளிநொச்சி மாற்றுவலுவுள்ளோர் சங்கம், கிறீன் பியூச்சர் நேசன் பவுண்டேசன் ஆகியன இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

அவ் வகையில் கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கட்டைக்காடு, பெரியகுளம் பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிப்படைந்த கிணறுகள் சில அண்மையில் துப்புரவு செய்யப்பட்டு குளோரின் இடப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டன.

குறித்த பணிகளை மேற்கொள்வதற்கான நிதியுதவி கனடாவிலுள்ள உறங்காவிழிகள் தொண்டு நிறுவனத்தினால் கிறீன் பியூச்சர் நேசன் பவுண்டேசன் ஊடாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-10-250)

பாரதம்

தொழிற்சாலையில் சிலிண்டர் வெடிப்பு குழந்தை உட்பட 7 பேர் உயிரிழப்பு



(டில்லி)

டில்லியில் தொழிற்சாலை ஒன்றில் சிலிண்டர் வெடித்து கட்டடம் இடிந்து விழுந்ததில் ஒரு குழந்தை உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சுதர்சன் பார்க்கில் செயற்பட்டு வந்த 2 மாடிகளை கொண்ட மின்விசிறி தயாரிப்பு தொழிற்சாலை கட்டடத்தின் ஒரு பகுதியில் சிலிண்டர் வெடித்ததால், இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு துறையினர். இடிபாடுகளில் சிக்கியிருந்த 15க்கும்மேற்பட்டோரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த விபத்தில் 5 வயது குழந்தை உட்பட 7 பேர் உயிழந்துள்ளதோடு, குறித்த கட்டடத்தின் உரிமையாளர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மேலும் 7 பேர் கட்டட இடுபாடுகளில் சிக்கியிருப்பதாகவும், அவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாகவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-7)

கேரளாவின் தவறான அணுகுமுறையே சபரிமலை பிரச்சினைக்கு காரணம்

எடியூரப்பா தெரிவிப்பு

(டில்லி)

சபரிமலை பிரச்சினைக்கு கேரள அரசின் தவறான அணுகுமுறையே காரணமென கர்நாடக பா.ஜ.க தலைவரும், சட்டசபை எதிர்க்கட்சி தலைவருமான எடியூரப்பா தெரிவித்துள்ளார்.

சபரிமலையில் தொடரும் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே எடியூரப்பா இதனை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பக்தர்களின் போராட்டத்தை மீறி, சபரிமலை ஐயப்பனை இரு பெண்கள் தரிசனம் செய்துள்ளனர். இதனால் கேரளாவில் மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. மேலும் சபரிமலை பிரச்சினைக்கு மக்களை கருத்திற் கொண்டே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால், கேரள அரசு இவ்விடயத்தில் தவறான அணுகுமுறையை பின்பற்றுகின்றமையே பிரச்சினைகள் தொடர்வதற்கு காரணம் என எடியூரப்பா சுட்டிக்காட்டியுள்ளார். (4-7)

அமெ. - மெக்ஸிக்கோ எல்லைச் சுவரால் பிளவுபட்டுள்ள காங்கிரஸ்

(வோஷிங்டன்)

அமெரிக்க காங்கிரஸின் பிரதிநிதிகள் சபையில் பகுதியளவு அரசுத்துறை முடக்கத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஆதரவாக ஜனநாயக கட்சியைச் சார்ந்தவர்கள் வாக்களித்துள்ளனர்.

இருந்த போதும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அந்த தீர்மானத்தை நிராகரிப்பார் என்று கருதப்படுகிறது.

முன்னதாக, தனது அமெரிக்க- மெக்ஸிக்கோ எல்லைச்சுவர் அமைப்பு திட்டத்திற்கு நிதியுதவி அளிக்காத எந்த தீர்மானத்தையும் ரத்து செய்யப் போவதாக ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் புதிதாக நியமனம் பெற்ற சபாநாயகரான நான்சி பெலோசி, எல்லைச்சுவர் அமைப்பு திட்டத்திற்கு எந்தவித நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை என்று அறிவித்துள்ளார்.

சென்ட் சபையில் ஆதிக்கம் செலுத்தும் குடியரசு கட்சியினர் இதுகுறித்த வாக்கெடுப்பிலும் பங்கேற்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளனர்.

பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்த பிரேரணையில் எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி வரை அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறைக்கும், செப்டெம்பர் மாதம்வரை ஏனைய பல அரசுத்துறைகளுக்கும் தேவையான நிதித்தேவை பூர்த்தி செய்யப்படும்.

இந்தநிலையில், அமெரிக்காவில் தொடர்ந்து வரும் அரச செயற்றிட்ட முடக்கம், நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

மெக்ஸிக்கோ எல்லையில் சுவர் அமைக்கும் ஜனாதிபதி ட்ரம்பின் திட்டத்துக்கு நிதி ஒதுக்க காங்கிரஸ் மறுத்து வரும் நிலையில் ஏற்பட்ட நெருக்கடியால், பல்வேறு அரசுத் துறைகளுக்கு நிதி ஒதுக்குவதற்கான நிதி மசோதா நிறைவேற்றப்படாமல் அரச பணிகள் முடங்கியுள்ளன.

அரசுப் பணிகள் முடக்கம் என்ற பதம் அமெரிக்காவுக்கு புதிதல்ல என்றபோதும், தற்போது அது 13 நாட்களாகத் தொடர்ந்து வருவது நாட்டு மக்களிடையே வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக ஏறத்தாழ 8 லட்சம் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமையால், அதன் மோசமான விளைவுகளை அந்த மக்கள் எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க - மெக்ஸிகோ எல்லையில் சுவர் அமைக்கும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படும் வரை அரசாங்க முடக்கம் தொடரும் என ஜனாதிபதி ட்ரம்ப் கூறியுள்ளார்.

அரசாங்கம் செயற்படாமல் இருப்பதன் விளைவாக தாங்கள் மோசமான விளைவுகளை சந்திப்பதாக சமூக ஊடகங்களில் மக்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

உள்நாட்டு பாதுகாப்பு, சட்டம், வீட்டு வசதி, விவசாயம், வணிகம் உள்ளிட்ட ஒன்பது துறைகள் இன்றளவில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, கடந்த 2013 ஆம் ஆண்டு இதே போன்று 16 நாட்கள் நீடித்த கடைசி அரசாங்க பணி முடக்கம் நிலவியது. (4-7)

ஆப்கான் நூ ட்ரம்பின்

ஆதரவாக காங்கிர

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் இந்தியா அமைத்துக் கொடுத்த நூலகத்தால் யாருக்கு பயன் என பிரதமர் மோடியை கிண்டல் செய்த ட்ரம்புக்கு காங்கிரஸ் பதிலளித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனது வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது ஆப்கானிஸ்தான் குறித்த கேள்விக்கு ட்ரம்ப் பதிலளிக்கும்போது"இந்தியப் பிரதமர் மோடி என்னிடம் அடிக்கடி, ஆப்கானிஸ்தானில் நாங்கள் நூலகம் உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம் என்கிறார். உங்களுக்குத் தெரியுமா, அந்த நூலகம் எங்கே இருக்கிறது?. போர் நடந்து கொண்டிருக்கும் அந்த நாட்டில் நூலகம் அமைத்து யாருக்கு என்ன பயன். அந்த நூலகத்தில் அமர்ந்து 5 மணிநேரம் செலவு செய்திருப்பார்களா?

பிரதமர் மோடி அவ்வாறு கூறியதற்கு, ஓ அப்படியா நூலகம் அமைத்துக் கொடுத்தமைக்கு நன்றி என்று கூறிவிட்டேன். ஆப்கானிஸ்தானில் பிரதமர் மோடி அமைத்துக் கொடுத்த நூலகத்தை யார் பயன்படுத்துகிறார்கள் என்று எனக்குத் தெரியாது" என கிண்டல் தொனியில் கூறியிருந்தார்.

ட்ரம்பின்
எழுந்த நிலை
பதிலடி அளிக்
கப்பட்ட ஆப்கா
மட்டுமே மாற்
தீவிரவாதத்
நாடுகளின் ப
கானிஸ்தான்
களை இந்திய
மாணவர்கள
உதவிகளை
தெரிவித்திருந்
இந்த நிலை
இந்த விவகார
இதுகுறித்
உறுப்பினர் அ
"இந்தியா கு
குறித்தும் அ
இருப்பது ஆ
இதை ஏற்றுக்
2004 முதல்

தாய்லாந்தை அச்சுறுத்தி 80 ஆயிரம் பேர் வெ

(பாங்கொங்)

தெற்கு தாய்லாந்து பகுதியில் புயல் சீற்றம் ஏற்பட்டுள்ளதால் அனைத்து விமானங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் நகோன் சி தாமராத் மாகாணத்தில் 80 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தாய்லாந்தின் தெற்கு கடல்பகுதியில் புயல் நிலை கொண்டுள்ளது. பபுக் என பெயரிடப்பட்டுள்ள இந்த புயல், 75 கி.மீ முதல் 95 கி.மீ. வேகத்துடன் நேற்று மதியம் கரையைக் கடக்கும் என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அச்சமயம் அதிக மழைப்பொழிவினால் தெற்கு தாய்லாந்து கடற்கரையோரப் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்படுத்தும். முன்னெச்சரிக்கை நடவடிக்கை

காரணமாக
80 ஆயிரம்
நடவடிக்கைக
சமயம் 8 ஆ
னர்.
முன்னெச்
தாவோ மற்
கப்பல் மற்று
செய்யப்பட்டு
மேலும் பா
துறை சாமு
விமானங்க
அனைத்து
செய்துள்ள
கப்பட்டுள்ளது

அமெரிக்கா வான்வழித் 10 பயங்கரவாதிகள்

(மொகாடிஷு)

அமெரிக்க இராணுவத்தினர் நடத்திய வான்வழித் தாக்குதலில் சோமாலியாவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் 10 அல் ஷபாப் பயங்கரவாதிகள் பலியாகினர்.

சோமாலி
கள் அடிக்கடி
வருகின்றனர்
பாடுகள் சோ
தப்பட்டுள்ளத
தாக்குதல்கள்
பயங்கரவ
அரசு தீவிர ந
இந்த வேட்
இணைந்துள்

வெளிநாடு

நூலகம் குறித்த கேலிப் பேச்சு

கிரஸ் பதில்

ரம்பின் இந்தப் பேச்சுக்கு கண்டனங்கள் ந்த நிலையில் இதற்கு இந்திய அரசு தரப்பில் டி அளிக்கப்பட்டது. அதில், 'போரால் பாதிக் ட்ட ஆப்கானிஸ்தானில் வளர்ச்சி பணிகளால் ுமே மாற்றங்களை கொண்டு வர முடியும். ரவாதத்தை ஒழிப்பதுடன் மட்டும் உலக களின் பணிகள் முடிந்து விடவில்லை. ஆப் ிஸ்தான் மக்களுக்கு தேவையான பணி ள இந்தியா செய்து வருகிறது. பாடசாலை, னவர்களுக்கு உதவித் தொகை என பல விகளை இந்தியா செய்துள்ளது" என வித்திருந்தது.

இந்த நிலையில் பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் விவகாரத்தில் ஆதரவு அளித்துள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் நாடாளுமன்ற ப்பினர் அக்மத் பட்டேல் தெரிவிக்கும்போது, தியா குறித்தும் இந்திய பிரதமர் மோடி த்தும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறி பது ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை. த ஏற்றுக் கொள்ளவே முடியாது. இந்தியா 4 முதல் ஆப்கானில் தன் உட்கட்டமைப்பு



வசதிகளுக்கு உதவி வருகிறது"என்றார்.

மேலும், காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ரன்தீப் சுர்ஜேவாலா, "ட்ரம்ப், நீங்கள் இந்தியப் பிரதமர் மோடியைக் கிண்டல் செய்வதை நிறுத்த வேண்டும். பொருளாதார அடிப்படையிலான உறவில் மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன. நாங்கள் ஆப்கானிஸ்தானில் உள்ள சகோதர, சகோதரிகளுடன் நாங்களும் ஒருவர்"என்று தெரிவித்துள்ளார். (4-7)

ஈரானில் போர் உருவாக்க அமெரிக்கா திட்டமிடுகிறது

(டெஹ்ரான்)

ஈரானில் போரை உருவாக்க அமெரிக்கா திட்ட மிடுவதாக அந்நாட்டு தலைவர் அயத்துல்லா அலி கொமேனி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அனடோலு செய்தி நிறுவனம், பொருளாதாரத் தடை மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளைப் பயன்படுத்தி ஈரானில் போரை உருவாக்க அமெரிக்கா திட்டமிடுகிறது. எனவே ஈரான் மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று அறிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆயுத உற்பத்தி அதிகரித்து இந்த பிராந்தியத்தில் ஆத்தான நிலையை அமெரிக்கா உண்டாக்குகிறது என்று கடந்த வாரம் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமத் அமெரிக்காவை விமர்சித்திருந்தார்.



ஈரானுடன் அமெரிக்கா செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த வருடம் தெரிவித்தார்.

ஆனால், ட்ரம்ப்பின் மிரட்டலைச் சிறிதும் பொருட் படுத்தாத அந்நாட்டு ஜனாதிபதி ஹசன் ரவ்ஹானி ஈரான் ஆக்கப் பூர்வமான செயல்களுக்கு அணு ஆயுத சோதனையைப் பயன்படுத்தும் என்றார்.

இதனைத் தொடர்ந்து ஈரான் மீது அமெரிக்கா தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்ததுடன் அந்நாட்டுடன் எந்த நாடும் கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யக் கூடாது என்றும் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (4-7)

த்திய பபுக்புயல்; வளியேற்றம்

ணமாகவே நகோன் சி தாமராத் மாகாணத்தில் ஆயிரம் மக்களை வெளியேற்ற அவசர டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற் ம் 8 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ள

ன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சாமுய், வா மற்றும் பாங்கான் ஆகிய தீவுகளுக்கு மற்றும் படகுப் போக்குவரத்து இரத்துச் ப்பட்டுள்ளது.

மலும் பாங்கொக் விமானப் போக்குவரத்துத் சாமுய் விமான நிலையத்திலிருந்து ானங்கள் புறப்படவும் அனுமதிக்கவும் னத்து விமானங்களையும் இரத்துச் துள்ளது. மீன் பிடிக்கவும் தடைவிதிக் டுள்ளது. (4-7)

ழித்தாக்குதல் ள் உயிரிழப்பு

சோமாலியாவில் அல் ஷபாப் பயங்கரவாதி அடிக்கடி தாக்குதல்களை மேற்கொண்டு ன்றனர். அல் ஷபாப் பயங்கரவாதிகள் செயற் ள் சோமாலியாவில் ஓரளவுக்கு கட்டுப்படுத் டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் தல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பாங்கரவாதிகளை கட்டுப்படுத்த சோமாலிய தீவிர நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. வேட்டையில் அமெரிக்க இராணுவமும் ணந்துள்ளது. (4-7)

எதிரிகளுக்கு பாகிஸ்தான் அடைக்கலம் தருகிறது

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

பாகிஸ்தானுடன் நல்லுறவை கடைப்பிடிக்க முடியவில்லை என்றும், எதிரிகளுக்கு அந்தநாடு அடைக்கலம் தருவதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவின் கூட்டாளி - யாக பாகிஸ்தான் உள்ளது. இதற்காக பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆண்டுதோறும் நிதி உதவி அளித்து வந்தது.

ஆனால் அந்த நிதியை பாகிஸ்தான் பெற்றுக் கொண்டு, தனது சொந்த நாட்டில் உள்ள பயங்கரவாத அமைப்புகளை பாரபட்சமின்றி ஒடுக்கத்தவறி விட்டது என்பது அமெரிக்காவின் கருத்தாக உள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தானை வெளிப்படையாக கண்டித்த ஜனாதிபதி ட்ரம்ப், பாகிஸ்தானுக்கு அளித்து வந்த கோடிக்கணக்கிலான நிதி உதவியை நிறுத்தினார்.

கடந்த நவம்பர் மாதம் ஆப்கானிஸ்தானுக்கான புதிய கொள்கையை வெளியிட்ட ட்ரம்ப், பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் பாகிஸ்தான் இரட்டை வேடம் போடுவதாகவும், அந்நாட்டுக்கு வழங்கப்பட்டு வரும் 1.3 பில்லியன் டொலர் (சுமார் ரூபாய் 9 ஆயிரத்து 100 கோடி) நிதி நிறுத்தப்படுவதாக அறிவித்தார்.

இந்த நிலையில் அமெரிக்காவில் இந்த ஆண்டின் முதல், அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் ஜனாதிபதி ட்ரம்ப் கலந்துகொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது.

பாகிஸ்தானுடன் நாம் நல்லுறவை கடைப்பிடிக்க விரும்புகிறோம். ஆனால் அந்நாடு எதிரிகளுக்கு அடைக்கலம் தருகிறது. எதிரிகளை பாதுகாக்கிறது. இதனால் அந்த நாட்டுடன் நல்லுறவை கடைப்பிடிக்க முடியவில்லை.

பாகிஸ்தானின் புதிய அரசுடன் நான் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறேன். காலம் தாழ்த்தாமல் அதனை உடனே செய்ய வேண்டும்.

அதே சமயம் பாகிஸ்தானுக்கு நிதி உதவியாக வழங்கி வந்த 1.3 பில்லியன் டொலரை நான் நிறுத்தி விட்டேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளதுடன், தொடர்ந்து பேசிய ட்ரம்ப் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னிடம் இருந்து தனக்கு ஒரு சிறப்பான கடிதம் கிடைத்ததாகவும், கிம் ஜாங் உன்னை விரைவில் சந்திப்பேன் என்றும் தெரிவித்தார். (4-7)

இரு ரயில்கள் மோதல்; உயிரிழப்பு 10ஆக உயர்வு

(கோபன்ஹேகன்)

டென்மார்க் நாட்டில் சரக்கு ரயிலுடன் பயணிகள் ரயில் மோதிய விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

டென்மார்க் நாட்டிலுள்ள ஜிலாந்து மற்றும் புனேன் தீவுகளை இணைக்கும் பாதை வழியாக நேற்று முன்தினம் ஒரு பயணிகள் ரயில் வந்து கொண்டிருந்தது. கிரேட் பெல்ட் பிரிட்ஜ் என்னும் பாலத்தின் மீது வந்த போது அந்த பயணிகள் ரயில் மீது பக்கவாட்டில் சென்ற ஒரு சரக்கு ரயில் பயங்கரமாக மோதியது.

இந்த விபத்தில் 5 பெண்கள் உட்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், காயமடைந்த 16 பேர் அருகிலுள்ள வைத்திய சாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் என்றும் முதல்கட்ட தகவல் வெளியானது.

இந்நிலையில், விபத்து நடைபெற்ற இடத்திலிருந்து மேலும் 2 பேரின் உடல்களை மீட்புக்குழுவினர்

நேற்று மீட்டனர். இதையடுத்து, ரயில் விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த விபத்தால் அந்த வழித்தடத்தில் ரயில் சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

ஞாயிறு, போயா தினங்களில் மேலதிக வகுப்புக்களுக்குத்தடை

விரைவில் அமைச்சரவைப் பத்திரம்

(கொழும்பு)

ஞாயிற்றுக்கிழமை மற்றும் போயா தினங்களில் மேலதிக வகுப்புக்கள் நடத்துவதைத் தடை செய்வதற்காக முஸ்லிம், இந்து மத அலுவல்கள் அமைச்சர்களுடன் ஒன்றிணைந்து அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை முன்வைக்கப்போவதாக புத்தசாசன மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை என்பவற்றிற்கு அறநெறிக் கற்கை மூலம் புள்ளிகள் வழங்கும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சருடன் கலந்துரையாடியிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், அதன்படி குறித்த பரீட்சைகளுக்கு 10 புள்ளிகள் வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி வரையும் போயா தினங்களில் முழுமையாகவும் மேலதிக வகுப்புக்களை நிறுத்த குறித்த அமைச்சரவைப் பத்திரத்தில் யோசனை முன்வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்



போதே அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா இதனைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

கொழும்பு சிறையிலுள்ள கைதிகளை பூஸா சிறைச்சாலைக்கு மாற்றத் தடை

(கொழும்பு)

கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலரை பூஸா சிறைச்சாலைக்கு இடமாற்ற சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு தடையேற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெலிக்கடை, கொழும்பு சிறைச்சாலை, மகசின் ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல பாதாளக் குழு கைதிகள் சிறைச்சாலையில் முன்னெடுத்த சில சட்டவிரோத நடவடிக்கைகளைக் கவனத்திற்கொண்டு இவர்களை பூஸா சிறைக்கு மாற்றுவதற்கு இதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், பூஸா சிறைச்சாலையில் மேலதிகமாக 50 சிறைக்கூடங்கள் இருப்பதுடன், இதில் 30 சிறைக்கூடங்கள் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் பொறுப்பில் உள்ளது. அத்துடன் அதில் ஒரு பகுதி ரோஹிங்யா புகலிடக்கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்களை பூஸா சிறையின் வேறொரு பகுதியில் தங்க வைக்குமாறும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள 30 சிறைக்கூடங்களை சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு வழங்குமாறு பொலிஸ்திணைக்களத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதும் அதற்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவித்திருப்பதாகவும் இது குறித்து ஜனாதிபதி இறுதி முடிவை எடுப்பதாக பாதுகாப்புச் செயலாளர் மற்றும் நீதிமன்றம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

களுத்துறை துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேகநபர் கைது

(களுத்துறை)

களுத்துறை வடக்கு, காலி வீதி, தொடுபல சந்திக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பாக, பிரதான சந்தேகநபர் நேற்று முன்தினம் அதிகாலை துப்பாக்கியொன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனவரி முதலாம் திகதியன்று, இரவு 10.35 மணியளவில் காலி வீதியில் அமைந்துள்ள ஹோட்டலொன்றுக்கு எதிரேயுள்ள வீதியில், நபரொருவர் துப்பாக்கியால் சுட்டு தப்பியோடியமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்தேகநபர் அடையாளங்காணப்பட்டுள்ள நிலையில், களுத்துறை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது, இப்பிரதான சந்தேகநபரை கைது செய்ததாக மேலும் தெரிவித்தனர். (இ-7)

ஷேக் ஹசீனாவுக்கு ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற பங்களாதேஷ் பொதுத் தேர்தலில், மகத்தான வெற்றியைப் பெற்றுக்கொண்ட பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா அம்மையாருக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஷேக் ஹசீனா அம்மையாருக்கு, விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ள ஜனாதிபதி, பிறந்துள்ள புத்தாண்டில் அவரது சகல செயற்பாடுகளும் வெற்றியடைய வேண்டுமென வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஷேக் ஹசீனா அம்மையார் பிரதிநிதித்துவம் செய்யும் அவாமி லீக் கட்சி வெற்றி பெற்றதனூடாக பங்களாதேஷ் மக்கள் ஷேக் ஹசீனா அம்மையார் மீதும் அவரது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடைமுறைக்குச் சாத்தியமானதும் வெற்றிகரமானதுமான கொள்கைகள் தொடர்பில் கொண்டுள்ள நம்பிக்கை, மீண்டும் ஒரு முறை உறுதி செய்யப்பட்டுள்ளதென ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பங்களாதேஷுக்கும் இலங்கைக்கும் இடையேயான நீண்டகால தொடர்புகள், பொதுவான அபிலாஷைகள் மற்றும் பரஸ்பர நம்பிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளதுடன், அந்தத் தொடர்புகள், பொருளாதார, அரசியல், பாதுகாப்பு மற்றும் கலாசாரம் உள்ளிட்ட துறைகளின் ஊடாக தற்போது விரிவடைந்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையே காணப்படும் இந்த உறுதியான தொடர்புகளும் நட்புறவும் எதிர்காலத்தில் மென்மேலும் மேம்படுத்தப்படும் எனத் தான் நம்புவதாகவும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

இசை மருந்து

இசையே ஒரு மருந்து என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? நம்ப மாட்டீர்கள்... சொல்லுகிறவர்களைச் சந்தேகமாகப் பார்ப்பீர்கள்! இசை விருந்து என்று சொல்வது தான் நம்ம பழக்கம்.

இசை மருந்து என்று சொன்னாலும் அதிலே ஒன்றும் தப்பில்லை! இசை என்றால் ஏதோ ஒருத்தர் பாட இன்னொருத்தர் தலையாட்டிக்கொண்டு போற சமாச்சாரம் மட்டுமில்லை! அதிலே நிறைய விடயம் இருக்கு.

"காஞ்சிப்பண்" பாடினால் புண் எல்லாம் சீக்கிரமாக ஆறிப்போய்விடும். அப்படி என்று சங்ககால புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன? ஏதோ ஒரு சந்தர்ப்பத்திலே அப்படி பாடிட்டுப் போய் விட்டார்கள் என்று நினைக்கலாம்.

ஆனால் இப்போ சில டாக்டர்கள் சொல்வதைப் பார்த்தால்... அவர்கள் எல்லாம் அனுபவத்தைத்தான் பாட்டிலே சொல்லியிருப்பார்கள் போல இருக்கு! மும்பையிலே ஒரு டாக்டர் ராமகாந்த் கே.கெனி என்று பேர்.

இசை மூலமாக இதயநோயைக் குணப்படுத்தி விடலாம் என்று சொல்கிறார். சும்மா சொல்லவில்லை! விஞ்ஞான ரீதியாகச் சொல்கிறார்!

இசை மூலமாக அவர் சில இதயநோயாளிகளைக் குணப்படுத்தியிருக்கிறார். அது மட்டுமில்லை...சில ஆஸ்துமா நோயாளிகளையும் குணப்படுத்தியிருக்கிறார்.

அப்படி அவர் குணப்படுத்தியுள்ள நோயாளிகளை செய்தியாளர்களிடம் காட்டினாராம். முற்றிய நிலையிலே இருக்கிற காசநோயைக்கூட இசை மூலமாகக் குணப்படுத்த முடியும் என்பது நிரூபணமாகியிருக்கு என்று அவர் சொன்னாராம்.

வாதுவாக நமக்கு வருகிற வியாதிகளுக்கும் மனதுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கு. இசையைக் கேட்கிறபோது மனசு இலேசாகிறது...மனதுக்கு இதமா இருக்கு... அதனாலே வியாதி குணமாகிறதுக்கும் அது காரணமாக இருக்கும் போல இருக்கு!

கடவுளை வணங்கிறபோது கண்ணை மூடிக்கொண்டு சில பேர் பாடுகிறார்களே... எதுக்காக? கடவுள் இவர் பாட்டை மிகவும் ரசித்துக் கேட்கிறார் என்பதற்காகவா?

இவர் பாடுகிறது இவருக்கே ஒரு மருந்தாகிறது! அதுதான் காரணம். எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் வேண்டுதலை இசை ரூபமாகத்தானே சொல்கிறார்கள்!

கந்தசஷ்டி கவசம், கந்தரனுபூதி, விஷ்ணு சகஸ்ரநாமம், சுப்ரபாதம்–இப்படியெல்லாம்சொல்கிறது எதற்காக?

இதுக்கெல்லாம் ஆன்மீகக் காரணங்கள் எதுவா இருந்தாலும் இதயத்துக்கு இதமாயிருக்கும் என்பது எல்லோரும் சுலபமா புரிந்துகொள்ளக்கூடிய ஒரு காரணம். யானைக்கு மதம் பிடித்துப் போகுதெல்லோ! அப்படிப்பட்ட மதம் பிடித்த யானைகூட இசைக்கு அடங்கி விடும் என்று தோன்றுது.

ஒரு பெரிய மலை. அங்கே மதங்கொண்ட யானை ஒன்று பிளறிக்கொண்டே ஓடி வருகிறது. அது ஏன் ஓடி வருகிறது தெரியுமா? தினைப்புனத்திலே உள்ள தினைக் கதிரை தின்பதற்காக! அந்த நேரத்திலே தினைப்புனத்துக்கு காவல் காத்துக்கொண்டு ஒரு சின்னப் பெண் நின்று கொண்டிருக்கின்றாள்!

சிறிது நேரத்திற்கு முன்னர்தான் பக்கத்திலுள்ள சுனை நீரில் நீராடி விட்டு வந்து நிற்கிறாள்! நீளமான கூந்தல் ஈரமாக இருக்கிறது! அதனால் அதை வாரிக் கொண்டிருக்கிறாள்! அந்தச் சிறுபெண் தன்னுடைய கூந்தலை வாரிக் கொண்டே மிகவும் இனிமையாக குறிஞ்சி பண்ணாகிய தமிழ் இசையைப் பாடிக் கொண்டே தலைமுடியைக் காய வைத்துக்கொண்டிருக்கிறாள்!

அங்கே ஓடி வந்த யானை இந்த இசையைக் கேட்டது அவ்வளவுதான் அப்படியே அசையாமல் நின்றுவிட்டது. தினைக்கதிரை தின்ன வந்ததையே மறந்துவிட்டது! பசியையெல்லாம் மறந்து இசையிலே மயங்கி நிற்கிறது அந்த யானை. "அகநானூறு"லே இருக்கு அந்தப் பாட்டு!

"ஒலியல் வார்மயிர் உளரிணள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சிப் பாடக்
குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கள் பாடுபெற் றொய்என
மறம்புகல் மழகளிறு உறங்கும்!"

மயிலும்–பாம்பு பகை, யானையும்–சிங்கமும் பகை, மானும்–புலியும் பகை ஆனால் புல்லாங்குழல் இசையைக்கேட்டுவிட்டு இதெல்லாம் பகை மறந்து கூடியிருந்து மகிழ்ச்சியாக இருந்ததாக பெரிய புராணத்திலே ஒரு பாட்டு இருக்கு. பகைமையை மறந்திட வைத்திடுதென்றால் பாருங்க இசைக்கு உள்ள சக்தி எப்படிப்பட்டதென்று!

ஒரு கதை தெரியுமா உங்களுக்கு ...பத்திரிகையிலே பார்த்தேன். ஒரு சங்கீத வித்துவானைப்பற்றி இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருத்தர் சொல்கிறார் "அதோ இருக்கிறாரே அந்த வித்துவான் பாடினால் நாள் பூரா கேட்டுக்கொண்டிருக்கலாம்!" என்றார்.

"அவ்வளவு நல்லா பாடுவாரா?" என்று கேட்கிறார் இன்னொருத்தர். அதுக்கு இவர், "அப்படியில்லை... அவர் ஆரம்பித்தால் அவ்வளவு சீக்கிரத்திலே முடிக்க மாட்டார்! அதனாலே அப்படிச் சொன்னேன்" என்றார்.

புத்தாண்டுப் பலன்கள் -2019



பழைய சடங்கு, சம்பிரதாயங்களில் நம்பிக்கை வைக்கும் கன்னி இராசி வாசகர்களே!

புத்தாண்டு பிறக்கும் பொழுதே தனாதிபதி சுக்கிரன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். லாப ஸ்தானத்தில் ராகு பலம்பெற்று கடகத்தில் வீற்றிருக்கின்றார். எனவே பொருளாதார முன்னேற்றம் அதிகமாக இருக்கும் ஆண்டாகவே இந்த ஆண்டு அமையப் போகின்றது. தேக ஆரோக்கியம் சீராகி தெளிவு பிறக்கும். குடும்பத்தில் காலாகாலத்தில் நடைபெற வேண்டிய கல்யாணம், காதுகுத்து விழாக்கள் மற்றும் சுபகாரியங்கள் படிப்படியாக நடைபெறும் ஆண்டாக இந்தப் புத்தாண்டு அமையப் போகின்றது.

மொழிப்பற்றும், இனப்பற்றும் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். முகம் சுளிக்காமல் எல்லோரிடமும் சிரித்துப் பேசுவதில் வல்லவர்கள் நீங்கள். உற்றார், உறவினர்களுக்கு நீங்கள் என்ன தான் உதவி செய்தாலும் உங்களுக்கு அவர்கள் நன்றி காட்டமாட்டார்கள். இரக்க சிந்தனை, இறைவழிபாட்டால் அமைதி காணுதல், மற்றவர்களுக்கு உதவிசெய்தல், பழைய சடங்கு, சம்பிரதாயங்களில் அதிக ஆர்வம் காட்டுபவர்கள் நீங்கள்.

புத்தாண்டின் தொடக்க நிலை

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் சுக ஸ்தானத்தில் விரயாதிபதி சூரியனோடும், 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனியோடும் இணைந்து சஞ்சரிக்கின்றார். அவரது பார்வை 10ஆம் இடத்தில் பதிகின்றது. இந்த இடம் தொழில் ஸ்தானம் என்பது குறிப்பிடத்தக்கது. தன் வீட்டைத் தானே பார்க்கும் புதன், தொழில் முயற்சியில் வெற்றிபெறச்செய்வார். தொல்லை தந்த எதிரிகள் விலகிச் செல்வர். நல்ல முன்னேற்றம் வந்து சேரும்.

நாடு மாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம், உயர் பதவியில் மாற்றம், பொதுவாழ்வில் புதிய திருப்பம் போன்றவை எல்லாம் தரும் ஆண்டாக இந்த ஆண்டு அமையப்போகின்றது.

தன ஸ்தானத்தில் சுக்கிரன் பலம் பெற்றிருக்கின்றார். இலாப ஸ்தானத்தைக் குரு பார்க்கின்றார். எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். தொழிலில் வரும் இலாபம்மட்டுமல்லாமல் வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகள் மூலம் உதிரி வருமானங்களும் கிடைக்கும்.

சப்தம ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால் உடன்பிறப்புகளும், உறவினர்களும் உங்களுக்கு உறவாக இருப்பது போல் பேசுவார்களே தவிர செயல்முறையில் திருப்தியளிக்கும் விதத்தில் நடந்து கொள்ளமாட்டார்கள். இருப்பினும் நீங்கள் பகை பாராட்டாமல் நாம் நம் கடமையைச் செய்துவிடுவோம் என்று அவர்களுக்குரிய உதவி செய்வோம் என்று செய்து கொண்டே இருப்பீர்கள். இடம், பூமி விற்பனையில் சகோதரர்களுக்குள் பிரச்சினை வரலாம். பஞ்சம ஸ்தானத்தில் கேது இருப்பதால் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. அவர்களால் சில பிரச்சினைகளும், விரயங்களும் கூட ஏற்படலாம்.

ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

ஆண்டின் தொடக்கத்தில் கடகத்தில் சஞ்சரிக்கும் ராகுவும், மகரத்தில் சஞ்சரிக்கும் கேதுவும் பெயர்ச்சியாகப் போகின்றார்கள். பிப்ரவரி 13ஆம் திகதி மிதுனத்தில் ராகுவும், தனுசில் கேதுவுமாக மாறுகிறார்கள். இந்த மாற்றம் ஓர் இனிய மாற்றமாகும்.

'பத்திலே அரவு நின்றால் பணிச்சுமை அதிகரிக்கும்' என்பார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது புதிய ஒப்பந்தங்கள் உங்களுக்கு வந்து சேரலாம். புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு நட்பாகி புதிய பாதையை அமைத்துக்கொடுக்கலாம். தொழிலை விரிவு செய்யும் எண்ணம் மேலோங்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உடன்பணிபுரிபவர்களால்ஏற்பட்ட தொல்லை அகலும். கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். ஊதிய உயர்வும் கிடைக்கும். வெளிநாட்டில் பணிபுரியச் செல்ல வேண்டும்என்று ஆசைப்பட்டவர்களில் சிலரின் விருப்பம் கைகூடும் நேரமிது.

அதே நேரத்தில் வருடத் தொடக்கத்தில் 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் சுக ஸ்தானம் எனப்படும் 4ஆம் இடத்திற்கு வருகின்றார். இதனால் சுகக் கேடுகள் ஏற்படுமோ, ஏதேனும் பாதிப்புகள் உருவாகி சிகிச்சைகள் செய்து கொள்ள வேண்டுமோ என்றெல்லாம் நீங்கள் நினைக்க வேண்டாம்.

பெயர்ச்சியாகும் கேது, குரு வீட்டில் அல்லவா அடியெடுத்து வைக்கின்றார். எனவே உடல் ஆரோக்கியம் சீராகும். நாட்பட்ட நோயிலிருந்து குணமடைய மாற்று மருத்துவம் கைகொடுக்கும்.

சுபவிரயங்கள் அதிகரிக்கும் நேரம் இது. அந்த அடிப்படையில் பிள்ளைகளின் கல்யாண முயற்சி அல்லது பெற்றோர்களின் மணிவிழா, பவளவிழா, கட்டடம் கட்டிக் குடியேறும் புதுமனை புகுவிழா, குழந்தைகளின் காதணி விழா, குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் விழாக்கள் போன்றவற்றை எல்லாம் ஒவ்வொன்றாக செய்ய சந்தர்ப்பங்கள் கூடிவரும். பட்டமேற்படிப்பு படிக்க வெளிநாடு செல்லவேண்டும் என்று விரும்புபவர்களுக்கு அந்த ஆசையும் நிறைவேறும்.

குருப்பெயர்ச்சிக் காலம்

ஒக்டோபர் 28ஆம் திகதி குருப் பெயர்ச்சி நிகழ இருக்கின்றது. இதுவரை உங்கள் இராசிக்கு 3ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது நான்காமிடத்தில் சஞ்சரிப்பதால் அர்த்தாஷ்டம குருவாக இருக்கிறாரே என்று நினைக்க வேண்டாம்.

குரு தனது சொந்த வீட்டில் உலா வருவதால் இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். ஒருசிலருக்கு கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் சூழ்நிலை அமையும். ஒருசிலர் வீட்டை விரிவுபடுத்திக் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக பக்கத்தில் உள்ள இடத்தையும் விலைகொடுத்து வாங்க முயற்சிப்பர்.

குருவின் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. இதனால் இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்புகள் கைகூடி வரும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நல்லவிதமாக முடிவடையும். வழக்குகள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊர் மாற்றங்கள், பதவி உயர்வோடு கிடைக்கலாம். தந்தையின் உடல்நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கரைந்த சேமிப்பை ஈடுகட்ட முயற்சிப்பீர்கள். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். மனப்போராட்டம் அகலும். மூதாதையர் சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

குருவின் அதிசாரமும், வக்கிரமும்

ஆண்டின் தொடக்கத்தில் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் குரு அதிசாரமாக மார்ச் 13ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். இடையில் விருச்சிகத்திலும் வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் நல்ல பலன்கள் இல்லம் தேடி வரப்போகின்றது. கொடிகட்டிப் பறந்த வீட்டுப் பிரச்சினைகள் படிப்படியாக தீரும். விழிப்புணர்ச்சி ஏதும் இன்றி ஒருகாரியம் செய்தால் கூட அதில்

விரயங்கள் ஏற்படாது. நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று நினைக்க வேண்டிய நேரமிது. இக்காலத்தில் முறையாக குரு பீடங்களுக்கு சென்று குருவை வழிபடுவது நல்லது. அறுபத்து மூவர் வழிபாடும் அனுகூலம் தரும்.

கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

7.5.2019 முதல் 24.6.2019 வரை சனி, செவ்வாய் பார்வைக் காலமாகும். மிதுனச் செவ்வாயை தனுசு சனி பார்க்கின்றது. இக்காலம் ஒரு இனிய காலமாகும். 6ஆம் இடத்திற்கு அதிபதியான சனியை 8ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாய் பார்ப்பதால் விபரீத ராஜ யோகம் செயல்படப்போகின்றது. எனவே திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர்.

தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டு. இதுவரை பிரியம் காட்டாத பெற்றோர்கள் இப்பொழுது பிரியம் காட்டுவர். இரண்டு பகைக் கிரகங்களின் பார்வை இருப்பதால் இப்பொழுது பிறருக்கு பொறுப்பு சொல்லி ஏதேனும் ஒரு தொகை வாங்கிக் கொடுத்தால் அதன் மூலமே பிரச்சினைகள் உருவாகலாம்.

5.6.2019 முதல் 26.9.2019 வரை ரிஷப சுக்கிரனை குரு பார்க்கின்றார். இக்காலத்தில் திடீர் மாற்றங்கள் பலவும் ஏற்படும். குடும்பத்தில் சுப காரியங்கள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்திணைவர். தந்தை வழிச் சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். பூர்வீக சொத்துக்களை விற்று விட்டுப் புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

வளர்ச்சி தரும் வழிபாடு

வயதுக்கேற்ற எண்ணிக்கையில் ஸ்ரீராமஜெயம் எழுதி வருவதோடு சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. நாமக்கல் ஆஞ்சநேயர் வழிபாடு நன்மைகளை வழங்கும்.

சனியின் வக்கிர காலம்

8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியில் பூராட நட்சத்திரத்தில் சனி வக்ரம் பெறுகின்றார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. எனவே இக்காலத்தில் கொஞ்சம் எச்சரிக்கை தேவை. எதைச் செய்தாலும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. தெய்வ வழிபாட்டின் மூலம் திருப்தியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளலாம். வாங்கல்-கொடுக்கல்களில் கூடுதல்கவனம்தேவை. அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் கிடைக்கும் நேரமிது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

கன்னி இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப் புத்தாண்டு வருடத் தொடக்கத்தில் வசந்த காலமாகவே இருக்கும். சுப காரியப் பேச்சுகள் கைகூடும். கணவன்-மனைவிக்குள் அன்பும், அரவணைப்பும் அதிகரிக்கும். பழைய நகைகளைக் கொடுத்துவிட்டுப் புதிய சொத்துக்கள் உங்கள் பெயரிலேயே வாங்கும் வாய்ப்பும் உருவாகப் போகின்றது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. அவர்களின் எதிர்காலம் குறித்த கவலை அதிகரிக்கும். இருப்பினும் ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு உங்கள் எண்ணங்கள் ஈடேறும். தாய்வழி ஆதரவு உண்டு. சகோதரர்களைச் சார்ந்திருப்பவர்கள் கொஞ்சம் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றம் இனிமை தரும். வெளிநாடு அல்லது வெளிமாநிலங்களுக்கு சென்று பணிபுரிய விரும்புபவர்களுக்கு குருப் பெயர்ச்சிக்குப் பின் எடுக்கும் முயற்சி வெற்றி தரும். வராகி வழிபாடும், தட்சிணாமூர்த்தி வழிபாடும் வருங்காலத்தை நலமாக்கிக் கொடுக்கும்.

(தொடரும்)

தொழில் வளம் கூடும், தொகை வந்து சேரும்!

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–164

2020ஆ உலக தாவர சுகாதார ஆண்டு

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் முயற்சியின் பயனாக இந்திய அரசினது கோரிக்கையை ஏற்று ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உணவு பாதுகாவலனான உலக உணவு தாபனம் 2020ஆம் ஆண்டினை உலக தாவர சுகாதார ஆண்டாகவும் 2023ஆம் ஆண்டினை உலக தானியங்களின் ஆண்டாகவும் பிரகடனப்படுத்தியிருக்கின்றது. இந்த ஆண்டுகளை இவ்வாறு பிரகடனப்படுத்துவதற்குகாரணங்களும் உண்டு. வெறுமனே பிரகடனப்படுத்தல்கள் எந்தளவிற்கு பயன்பாடுடையதாக இருக்கப்போகின்றது என்பதற்கப்பால் உலக உணவு தாபனம் இவ்வாறு பிரகடனப்படுத்தியபின் முழு மூச்சாக இவைபற்றிய செயலூக்கங்கள் பலவற்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியும் வருவது பாராட்டத்தக்கது.

2016ஆம் ஆண்டு உலக அவரைகள் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டு அவரைப் பயிர்களின் முக்கியத்துவம் உணரப்படுத்தப்பட்டது. இவ்வாறாக தாவரத்தின் சுகாதாரம் முக்கியப்படுத்தப்பட்டதன் நோக்கம் பலவாறாக ஊகிக்கப் படுகின்றது. தாவரங்கள் பல வகையான பீடைகள் மற்றும் நோய்களினால் பாதிக்கப்படுவதனால் அவற்றைக்கட்டுப்படுத்த அசேதன இரசாயனப் பீடை கொல்லிகளின் பாவனை அதிகரித்தது. பீடைகொல்லிகளுள் களை நாசினிகள், பங்கசு நாசினிகள், பூச்சிநாசினிகள், சிற்றுண்ணி நாசினி மற்றும் நெமற்றோட்டு நாசினிகளும் உள்ளடங்கும். இவற்றை அறிமுகப்படுத்திய நாளிலிருந்து பரிந்துரைக்கப்பட்டதற்கு அதிகமாக வகை தொகையின்றி பயன்படுத்தப்பட்டதனால் சூழலும் மாசடைந்து பீடைகளிலும் இவ்விரசாயனங்களுக்கெதிரான எதிர்ப்பு உருவாகியிருப்பதனை உலக உணவு தாபனமும் உலக சுகாதார தாபனமும் மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றன.

விவசாய உற்பத்தியில் கணிசமானளவுக்கு அசேதன இரசாயனங்களின் பாவனை மண்ணையும், மக்களையும் இன்னும் நன்மை தரும் உயிரினங்களையும் வெகுவாக பாதித்திருக்கின்றன. இந்நிலையில் இவற்றிலிருந்து எமது மண்ணையும் குறிப்பாக சூழலையும் காப்பாற்ற வேண்டுமாயின் நாம் அதற்கு மாற்று வழிகளை கண்டறிந்தாக வேண்டும். இந்நிலையில் சேதன விவசாயத்தினை நோக்கிய நகர்வு தேசத்தின் விருத்திக்கு நல்லதொரு சகுனமென்றே கூறலாம். சேதன விவசாயத்தை நோக்கியதான எமது பயிர்ச்செய்கை நிச்சயமாக எமது வளமான சந்ததியை கட்டியெழுப்ப உதவும். உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளை நாம் பரிந்துரைத்தும் அதற்காக பயன்படுத்தக்கூடிய தேவையான உயிரிகள் போதுமானதாக கிடைக்கக்கூடியதாக இல்லையென்றே கூறலாம். இந்த நிலையை மாற்றியமைக்க எமது சூழல் தொகுதியில் காணப்படும் உயிரிகளை இனங்கண்டு அவற்றை பெருக்கி நாம் மண்ணை வளமாக்கவும் பீடைகளைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்த முடியும்.

உலகத்தில் தினந்தினம் பல மாற்றங்கள் இயற்கையாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இயற்கையோடு இயைந்து வாழ நாம் தலைப்பட்டிருப்பது நல்ல செய்தியாகவும் அதற்காக எடுக்கப்படும் முயற்சிகளும் பாராட்டத்தக்கது. இன்னொரு பசுமைப் புரட்சியினூடாக பலரும் எதிர் பார்ப்பதைப்போல வெறுமனே உணவுற்பத்திப் பெருக்கத்துடன் முன்னிற்காது அனைவருக்கும் நிறையுணவு, சுகாதாரமான உணவு அதிலும் சத்துணவு என்பனவற்றை விரைந்து பெற்றுக் கொடுக்கும் மக்களிணைந்த கூட்டுமுயற்சியாகவே இருக்க வேண்டும். அறுபதுகளில் நடந்தேறிய பசுமைப்புரட்சியின் பலன்களை நாம் உணவில் அதன் உற்பத்தியில் பெற்றிருக்கின்றோம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் எந்தவொரு தொழில்நுட்பமாயினும் அதனை தவறான வழியில் பிரயோகிக்கும் போது நாம் எதிர்பார்த்த பலன்களுக்கு மேலாக பாரதூரமான விளைவுகளையும் நாம் சந்திக்க வேண்டியேற்படுகின்றது. இது தவிர்க்க முடியாததாக இருப்பினும் பசுமைப்புரட்சியின் விளைவாக திருந்திய கலப்பின பயிரினங்களை பயன்படுத்திய போது அவை உள்ளீடுகளில் முழுக்க முழுக்க தங்கியிருந்ததாலும் உள்ளீடுகளின் பாவனை பரிந்துரைக்கப்பட்ட அளவை விட பன்மடங்கு பெருகியதாலும் எமக்கும் சூழலுக்கும் ,தனால் பாதகமான விளைவுகள் ஏற்பட காரணமாயிற்று என்பது நெருடலான செய்தியாகும். பசுமைப்புரட்சியினூடாக உணவுற்பத்தியை விரைந்து பெருக்கியதால் ஒருபக்கத்தில் உணவின்றி மடியும் பல உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது என்பது உண்மைதான். இது ஒரு நல்ல விஞ்ஞான கண்டுபிடிப்பு என்பதற்கப்பால் பசியால் வாடிய உயிர்களுக்கு உணவளித்த பெருமை இது சார்ந்த விஞ்ஞானிகளைச் சாரும்.

தானியப் பயிர்களில் ஏற்படுத்திய இந்த அதீத விளைச்சல் உலகப்பசியை போக்கிய விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு. இதனை உலகமே வியந்து வாழ்த்தியதையும் இதில் குறிப்பிட்டேயாக வேண்டும். அதே பசுமைப் புரட்சி நீண்டகால நோக்கில் பல பாரிய விளைவுகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்பதனை தற்போது நாமெல்லோரும் உணரத் தொடங்கியிருக்கின்றோம். பாதிவழியில் காரணம் கண்டறிய இடம் விடாது உயிர்களை அவசரமாக அநியாயமாக காவுகொள்ளும் போது மனதில் எங்கேயோ நெருடுகின்றது. புற்றுநோய் என தெரிந்து இறப்பவர்கள் சிலர், மாறாக இது இன்னது என தெரியாது இறப்பவர்கள் பலர். இனந் தெரியாத சிறுநீரக நோய் என மருத்துவம் அடையாளப் படுத்தியபோது பலர் இதனால் இறந்து விட்டார்கள். என்ன செய்வ தென தெரியாது அனைவரையும் திக்குமுக்காட வைத்திருக்கும் இவ்விளைவுகளைப் பற்றி அனைவரும் ஆழமாக அக்கறையுடன் சிந்திக்க வேண்டிய தருணமிது.

சுகாதாரமான உணவினை உற்பத்தி செய்வதற்கும் அதனை மக்களுக்கு சுகாதாரமான முறையில் கிடைக்கச் செய்து மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் வழிவகைகள் கண்டறியப்பட வேண்டும்.

வருமுன் காப்போம் என்பது வெறும் சொல்லாட்டாக இருக்காமல் அதனை பயன்படுத்தும் வழிவகைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும். 2020 உலக தாவர சுகாதார ஆண்டு என பிரகடனப்படுத்துவதில் உற்பத்தியாகும் உணவு நஞ்சற்றதாக மக்களுக்கு எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாததாக இருத்தல் வேண்டும்.

அதற்கான வழிமுறைகளை நாமே தெரிந்தெடுத்து பயிர்ச்செய்கையை செய்தல் வேண்டும். இதற்கு மக்களுக்கு இன்னும் விழிப்புணர்வினை செய்தல் வேண்டும். அனைத்தும் எமது கைகளிலேயே தங்கியிருக்கின்றது.

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 178



புகைத்தல், மதுவை ஒழிக்க அனைத்து பிரதேச சபைகளும் விரைந்து செயற்பட வேண்டும்

தவிசாளர்களிடம் நல்லொழுக்க சம்மேளனம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புகைத்தலையும், மதுவையும் ஒழிக்கும் செயற்றிட்டத்துக்கு யாழ்ப்பாணத்தினுள்ள அனைத்து பிரதேச சபைகளும் விரைந்து செயற்பட வேண்டும் என வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பிரதேச சபைத் தவிசாளர்களுக்கு வட பிரதேச நல் லொழுக்க சம்மேளனத்தின் செயலாளர் செ. குமாரசிங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத் தில்,

மேற்படி செயற்றிட்டத்தை எமது வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் கடந்த 1972 இல் இருந்து இன்று வரை செயற்பட்டு வருகின்றது. அந்தவகையில் யாழ். குடாநாடு பூராகவும் எங்கள் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கின்றோம். குறிப்பாக கிராமங்களிலும் மற்றும் பாடசாலைகளிலும் செயற்படுத்தி வருகின்றோம். மேலும் இந்த செயற் பாட்டிற்காக குடாநாட்டில் செயற்பட்டதற்காக 2016 ஆம் ஆண்டு யாழில் வைத்து ஜனாதிபதியால் சான்றிதழ் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்திற்கு வழங்கப்பட்டது யாவரும் அறிந்ததே. புகைத்தலையும், மதுவையும் முற்றாக ஒழிக்காவிட்டாலும் குறைக்க நடவடிக்கை எடுத்த சுகாதாரத் துறையின் கடும் முயற்சியால் புகைத்தல் பாவனை குறைக்கப்பட்டதனை காணக் கூடியதாகவுள்ளது.

எனவே தவிசாளர் ஆகிய தாங்களும் தங்கள் சபையும் ஒத்துழைத்தால் மேலும் குறைக்க முடியும் என்று நாம் நம்புகின்றோம். இதன் பிரகாரம் 2019 இன் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கும் பொழுது மது விற்பனை நிலையங்கள் மற்றும் புகையிலை பொருட்கள் விற்பனை நிலையங்கள் சட்டப் பிரகாரம் பாடசாலைகள் மற்றும் மத ஸ்தலங்கள் உரிய இட வெளியில் உள்ளதா? என்று பார்த்து அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டும். மேலும் தங்கள் சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியும் என்றால் மதுபான நிலையங்களை மாலை 6 மணியுடன் பூட்ட நடவடிக்கை எடுப்பீர்களாயின் இளைஞர் சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கைக்கு மாற்று கருத்து இருக்கும் என்று நினைக்க வில்லை. எனவே குறித்த வேண்டுகோளை ஏற்று செயற்படுமாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

இலங்கையில் தமிழர்

ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்



> திருச்சபை மிஷனரிமார் சங்கத்தினர் 1818 இல் இலங்கைக்கு வந்து வெஸ்லியன்களைப் போன்றே வட இலங்கை(தமிழ்),தென்னிலங்கை (சிங்களம்) என இரண்டு மிஷன்களாகத் தமது செயற்பாடுக ளைப் பிரித்துக் கொண்டனர். அவர்கள் சுண்டுக்குளியில் பரியோவான் தேவாலயத்தையும் (St. John's Church) கோட்டை யினுள் ஒரு தேவாலயத்தையும் நல்லூரில் ஒரு ஆலயத்தையும் நிறுவினர். திருச்சபை மிஷனரி சங்கத்தினரும் தமது ஆராதனைக ளைத் தமிழிலும் ஆங்கி லத்திலும் நடத்தினர்

பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

01 ஒகஸ்ட் 1816 இல் லிஞ்ச் முற்றவெளிக்கு முன் னாலிருந்த பழைய அநாதை இல்லத்தையும் லூதரன் ஆல யத்தையும் (Luthern Church) 646 றிக்ஸ் டொலருக்கு (Rix Dollars) வாங்கினார். இதுவே வெஸ்லி யன்ஸ் சபையினரால் வாங்க ப்பட்ட முதற்சொத்தாகவும் இந்நிகழ்வு ஒரு புதிய அத் தியாயத்தின் ஆரம்பமாகவும் இருந்தது.

வெஸ்லியன்ஸ் மிஷனரிமார் தேசாதிபதியாலும் மக்களாலும் விரும்பி வரவேற்கப்பட்டனர் என்பதை இது காட்டுகின்றது. தமிழ் மக்கள் மத்தியில் கிறிஸ் தவ எதிர்ப்பு உணர்வுகள் இரு க்கவில்லை. இந்த மூன்று நூற் றாண்டுகால ஐரோப்பியரின் ஆட் சியில் மிஷனரிமாரின் பல் வேறு செயற்பாடுகளுக்கு அவர் கள் பழக்கமடைந்ததுடன் அவர்கள் கிறிஸ்தவ மதமாற்றத் திற்கு எதிராகவும் செயற்பட வில்லை.

கிறிஸ்தவத்திற்கும் அதைக் கடைப்பிடிப்பதற்கும் எதிரான ஒரு சில சம்பவங்கள் நிகழ்ந்த போதும் பிரித்தானியரின் ஆர ம்ப ஆட்சிக்காலத்தில் அமை ப்பு ரீதியான கிறிஸ்தவ எதிர் ப்பு இயக்கங்கள் இருக்கவி ல்லை. 25 ஜூலை 1850 மோர்னிங் ஸ்ரார் பத்திரிகையில் வெளிவந்த வெஸ்லியன் மிஷ னுடைய அறிக்கையில் தமது நோக்கங்களை அடைவதற்குக் கல்வியும் பாடசாலைகளும் முக் கியமென வலியுறுத்தியுள்ள னர்.

சைவசமயத்தின் இறுக்க மான பிடிகளைப் பலவீனப்ப டுத்துவதற்கு ஆங்கில மொழி யில் அளிக்கப்படும் கற்பித்தல், அதி ஊக்கமளிக்கும் விடயம் என்பதற்கு எமக்கு ஒருபோ துமே சான்று அற்ற நிலை இல்லை.

இவ்வகையில் அளிக்கப் பட்ட கல்வி உண்மையான மத மாற்றமாகவே தோன்றுகின்ற உற்சாகமளிக்கும் சந்தர்ப்பங் களை நாம் அறிவோம்.

பயிற்சி பெறுபவரின் வயது, கற்பித்தலின் இயல்பு, திறந் ததும் வசையக்கூடியதுமான மனதிற் பதியும் வகையிலான இந்துத் தவறுகளுக்கெதிரான உண்மைகள், சுதந்திர சிந்தனை, மிகச்சரியான விளக்கம் என்ப வற்றை அளிக்க உதவும் அந் நியமொழி, ஐரோப்பிய குரு வின் மகிழ்ச்சிகரமான செல் வாக்கு என்பவற்றுடன் அவர் குறிப்பாக கவனத்தை ஈர்க்கும் இந்தத் தொடர்பில் இந்த ஆரம்ப சுதேச மொழி நிறுவன ங்கள் மேலும் நலன்பெற பிரார் த்தனையுடன் பாடுபடுகின்றனர்.

ஆங்கில மொழியில் கற்பிப் பது மிஷனரிமாரின் பிரதான கருமங்களில் ஒன்றாக இருந்தது. வேதாகமத்தின் போதனை களைப் பரப்பி சைவத்தைத் தாழ்வடையச் செய்வதற்காக அவர்கள் சுதேச மொழியைக் கற்பதில் ஆர்வமாக இருந்தனர்.

இது இயல்பாகவே மிஷனரி பாடசாலைகளை நிறுவுவதற்கு வழிகோலியது. தமிழ், ஆங்கில வேதாகம வகுப்புக்களை நடத்த ஒய்வு நாள் பாடசாலைப் பயி ற்சிகளையும் செயற்படுத்தி சிறு பிரசுரங்களையும் வேதநூல் களையும் விநியோகித்தனர். மிஷனரிமார் மக்களுடன் கல ந்து பழகி அவர்களில் பலரை மதம் மாற்றினர்.

1849 வட இலங்கை வெஸ் லியன் மிஷன் அறிக்கையில் பின்வரும் விடயங்கள் காணப் படுகின்றன. அங்கிகரிக்கப் பட்ட மிஷனரி அங்கத்தினர் யாழ்ப்பாணம் -150, பரு த்தித்துறை-13, திருகோண மலை-30, மட்டக்களப்பு-148, போதகர்கள் (ஆங்கிலேயர்/ உள்ளூர்)-7, வினாவிடை போதகர்கள்-4, உள்ளூர் பிர சங்கிகள்-15, பாடசாலை ஆசி ரியர்கள்-39, பாடசாலை ஆசிரி யைகள்- 05, கல்வி பயிலும் மாண வர்கள் -1237, கல்வி பயிலும் மாணவிகள்- 238.

இவ் அறிக்கை மிஷனரி வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்க ளின் துணிவையும் உற்சாகத்தை யும் புலப்படுத்துகின்றது. இவ ர்கள் தமது பணியில் தென்பட்ட மந்த கதியையிட்டு மனந்தளர்ந் ததாகத் தெரியவில்லை.

மேலும் மிஷனின் ஆரம்பச் செயற்பாடுகளில் முனைப்பு டன் பங்குபற்றிய உள்ளூர் மக் கள் , மாணவர்கள் என்போரது தொகையைப் பார்க்கையில் தீபகற்பத்தில் மாத்திரமன்றி கிழக்கு மாகாணத்திலும் அவர் களுடைய பணி வெற்றியளித் தது எனத் தெரிகின்றது.

இவ்வகையில் மிஷனரி மாரின் ஊக்கம், அர்ப்பணிப்பு, கடும் உழைப்பு என்பவற்றினால் அவர்களது கடுமையான பணி யின் முதலாவது கட்டம் வெற்றியடைந்தது.

உள்ளூர் சைவர்களை மதம் மாற்றுவதிலும் கல்வி முயற்சி களிலும் மிஷனரிமார் பெற்ற வெற்றியானது தமிழர் மத்தியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்திப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியில் கிறிஸ் தவத்திற்கு எதிரான சைவ இயக்கங்கள் உருவாகக் காரண மாயிற்று. இவ்விடயம் அடு த்த அத்தியாயத்தில் ஆராயப்ப டும்.

சேர்ச் மிஷனரி சொசைற்றி - சி.எம்.எஸ் (The Church Missionary Society)

திருச்சபை மிஷனரி சங்கத்தி னரும் யாழ்ப்பாணத் தீபகற்பத் தின் மாவட்டங்களில் குறிப் பாக கவனம் செலுத்தினர். தமி ழர் மத்தியிலான அவர்களது செயற்பாடுகள் வெஸ்லியன் மிஷனரிமாரின் நடவடிக்கை களை ஒத்ததாக இருந்ததுடன் அதேவிதமான நடைமுறைச் சாத்தியமான அணுகு முறை களைக் கொண்டிருந்தன.

ஆனால் வெஸ்லியன் மிஷ னரிமாரைவிட இவர்களது செயற்பாடுகள் குறைவாகவே இருந்தன. திருச்சபை மிஷ னரிமார் சங்கத்தினர் 1818 இல் இலங்கைக்கு வந்து வெஸ்லிய ன்களைப் போன்றே வட இலங்கை (தமிழ்), தென்னிலங்கை (சிங்களம்) என இரண்டு மிஷன் களாகத் தமது செயற்பாடுக ளைப் பிரித்துக் கொண்டனர்.

அவர்கள் சுண்டுக்குளியில் பரியோவான் தேவாலயத்தையும் (St. John's Church) கோட்டை யினுள் ஒரு தேவாலயத்தையும் நல்லூரில் ஒரு ஆலயத்தையும் நிறுவினர். திருச்சபை மிஷனரி சங்கத்தினரும் தமது ஆராத னைகளைத் தமிழிலும் ஆங்கி லத்திலும் நடத்தினர்.

அத்துடன் சுண்டுக்குளி ஆலயத்துடனான கல்வி நிறு வனங்களைத் தாபித்து அவற் றின் மூலம் மக்களைக் கல்விய றிவு உள்ளவராய் ஆக்குவதில் உள்ள நலன்களை நன்கு உணர்ந்திருந்தனர்.

(தொடரும்)

ஆளுமையற்ற ஆட்சியாளர்களால் டெங்கின் தாக்கம் அதிகரிப்பு

முன்னாள் முதல்வர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் விசேட செயற்றிட்டம் ஒன்று சபையால் இதுவரை அறிமுகம் செய்யப்படாத நிலை காணப்படுவதால் சபைக்குட்பட்ட பகுதிகளில் மீண்டும் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளது.

ஆனால் யாழ்.மாநகரின் தற்போதைய ஆட்சியாளர்கள் அது தொடர்பாக எதுவித முன்னெச்சரிக்கை செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாத ஆளுமையற்றவர்களாக உள்ளனர்.

இதனால் இந்நோயின் தாக்கம் எல்லை மிறிச் செல்லும் நிலை உருவாகவுள்ளது என யாழ்.மாநகரின் முன்னாள் முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது.

இதனால் மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் சடுதியாக அதிகரித்துள்ளதாக வைத்திய அதிகாரிகள் கூறுகின்றனர். வடபகுதியில் பருவமழை தற்போது உச்ச நிலையை அடைந்துள்ளது.

யாழ்.மாநகர சபையின் பல பாகங்களிலும் பல்வேறு நீர்வடிகால்கள் குப்பைகளுடன் நிரம்பிக் காணப்படுகின்றன.

இந்நிலைமையானது நுளம்பின் பெருக்கம் அதிகரிக்க ஏதுவான நிலைகளை மாநகர சபை உருவாக்கியுள்ளதாகவே எண்ண முடிகின்றது. அதுமட்டுமல்லாது யாழ்.மாநகருக்குட்பட்ட பகுதிகளில் மீண்டும் டெங்கு நோயின் தாக்கம் தற்போது அதிகரித்துள்ளது.

பலர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று அந்த நோய்த் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர் என்பதை உறுதி செய்துள்ளனர். ஆனால் கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் கூட இதற்கான விசேட திட்டங்கள் எதுவும் யாழ்.மாநகர சபையால் உள்வாங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இந்த அசமந்தப் போக்கு ஏன்? பொது இடங்கள் மற்றும் மக்களுடைய வீடுகளுக்குச் சென்று நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் சூழல் சுத்தமாக இருப்பதை உறுதி செய்ய விசேட செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனாலும் அது அறிக்கை வடிவில் தான் உள்ளதே தவிர நடைமுறையில் காணப்படுவதாகவோ அன்றி அதை முன்னின்று அதற்கான துறை சார்ந்த தரப்பினர் நடத்துவதாகவோ இல்லை என்றே அறிய முடிகின்றது.

இதனிடையே "யாழ்.நகருக்குள் பெருமளவு மக்கள் தினசரி கூடும் நிலையில், பேருந்து நிலையத்திற்குப் பின்னால் உள்ள பிரபல சைவ உணவகங்கள் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வருகின்ற நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக சில உணவகங்களில் கழிவு நீர்த் தொட்டிகள் அமைக்கப்படவில்லை.

சமயலறைக் கழிவுகள் நேரடியாக வெள்ள வாய்க்காலில் விடப்படுகிறது. குறித்த உணவகங்கள் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆனாலும் குறித்த உணவகங்களுக்கு "ஏ" தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சுகாதாரச் சீர்கேட்டுடன் நீர்வடிகான்களும் போதிய சுகாதார வசதிகளின்றிய நிலையில் பல உணவகங்களும் உள்ள நிலையில் இது தொடர்பாக யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாமல் இருப்பது எதற்காக?

யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் அதிகரித்துள்ளதாக வீடுகளுக்குச் சென்று குற்றம் கண்டுபிடிக்கும் யாழ்.மாநகர சபை சுகாதாரப் பரிசோதகர்கள் இவ்வாறான பாரிய சுகாதாரச் சீர்கேடுகளைக் கண்டும் காணாதது போல் நடந்து கொள்வது எதற்காக?

அந்தவகையில் மாநகரை அழகுபடுத்துவோம் என்று கூறி ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் தற்போது அதற்கான எந்தவொரு செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் முயற்சிகளைக் கூட செய்யாதிருப்பது வேதனையளிக்கிறது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

சந்திரிகாவுடன் உள்ள கட்சி அமைப்பாளர்களின் பதவி பறிக்கப்படும்

எஸ்.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு முக்குக் கொடுக்கத் தயாராகும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களின் பதவியைப் பறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அக்கட்சியின் பொருளாளர் எஸ்.பி. திஸாநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பாளர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றும் அமைச்சுப் பதவிகளுக்கு ஆசை வைத்து இணைந்து கொள்வதற்கு இரகசியப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

2018 இல் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 2017 ஆம் ஆண்டை விடவும் 2018 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதற்கு முன்னைய வருடத்தை விடவும் 10 சதவீதம் அதிகமானதாகும்.

அதாவது 2017 ஆம் ஆண்டில் 21 இலட்சம் உல்லாசப் பயணிகள் வருகை தந்த அதேவேளை, 2018 ஆம் ஆண்டில் 23 இலட்சம் பேர் வருகை தந்துள்ளனர்.

கடந்த வருடத்தின் ஏனைய மாதங்களுடன் ஒப்பிடும்போது டிசெம்பரிலேயே அதிக எண்ணிக்கையான உல்லாசப் பயணிகள் (இரண்டரை இலட்சம் பேர்) வந்திருந்தனர் எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1607

Search for people, places and things

நிவி

முள் குத்தினாலே கத்தும் நாம் டாக்டர் ஊசி போடும்போது மட்டும் தாங்கிக் கொள்வோம். வலி என்னவோ ஒன்றுதான் ஏற்றுக்கொள்ள துணிந்து விட்டால் வலிகளும் வேதனைகளும் தூசிதான்

நிரு

எது செய்தாலும் உலகம் பேசிக்கொண்டேயிருக்கும், ஏனென்றால் அதற்குப் பேச மட்டுமே தெரியும்



நெஜி

பணம் சேர்ப்பதற்காக மட்டும் வாழாதே உன்னைக் கூட்டிச் செல்லும் எமன் இலஞ்சம் வாங்கப்போவதில்லை

சரவணன்

இந்த உலகில் பணம் பெரிதென்று வாழும் நாகரிக மனிதனைவிட மானமே பெரிதென்று வாழும் ஏழை மனிதர்களே சிறந்தவர்கள்

துவாரகன்

ஐந்து தானங்கள் உயிரைக் காக்க இரத்ததானம், உடலைக் காக்க உடல் உறுப்புகள் தானம், உலகைக் காண கண் தானம், பசியைப் போக்க அன்னதானம், உலகில் அமைதியாக வாழ நிதானம்



சிவாகினி

நமக்கு நாமே ஆறுதல் கூறும் மன தைரியம் இருந்தால் அனைத்தையும் கடந்து போகலாம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

ஐ.தே.க.அரசை வீட்டுக்கு அனுப்ப இடதுசாரிகள் இணைந்து கூட்டணி

திஸ்ஸ விதாரண சூளுரை

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து செயற்பட்ட காலத்தில் சிறுபான்மை சமூகத்திற்காக குரல் கொடுத்துவந்தது இனியும் குரல் கொடுக்கும்.

ஐ.தே.கட்சி அரசாங்கத்தை வீழ்த்தும் வரை நாம் ஓயமாட்டோமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

(கொழும்பு)

தற்போதைய ஐ.தே.க. அரசாங்கத்தை தோற்கடித்து ஆட்சியாளர்களை வீடுகளுக்கு அனுப்புவதற்கு இடதுசாரிகள் ஒன்றிணைந்த புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கப்போவதாக லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண சூளுரைத்துள்ளார்.

லங்கா சமசமாஜக் கட்சியின் 83 ஆவது ஆண்டு விழா எகலியகொட கூட்டுறவு கேட்போர்கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு சூளுரைத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், இந்த நாட்டில் வாழும் மூவின மக்களையும் ஒன்றிணைந்து பொருளாதார ரீதியாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திய பெருமை எமது கட்சியைச் சேர்ந்த கொல்வின், என்.எம்.எஸ்.ஏ.,விக்கிரமசிங்க, லெஸ்லி குணவர்த்தன ஆகியோரையே சாரும்.

வெளிநாட்டின் பிடியிலிருந்து விடுபட்ட எமது நாட்டைப் பாதுகாப்பதற்கு முதல்வாது அரசியலமைப்பை லங்கா சமசமாஜக் கட்சியின் ஆரம்பத் தலைவரான டாக்டர் கொல்வினால் டிசில்வாவே வரைந்தார்.

ஆனால்இன்றைய ஐ.தே.கட்சி அரசாங்கம், அமெரிக்க ஏகாபத்தியத்தின் கொள்கைகளை நிறைவேற்றுவதிலேயே உறுதியாக நிற்பதாகவும் தாய் நாட்டையும் மக்களைப் பற்றியும் அவர்களுக்கு அக்கறை இல்லையெனவும் குறிப்பிட்ட திஸ்ஸ இதன் காரணமாகத்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்க மீது வெறுப்புக் கொள்ள நேர்ந்ததாகத் தெரிவித்தார்.

லங்கா சமசமாஜக் கட்சி, ஜனநாயக கோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கும் முரணான வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டு வருவதாக கவலை தெரிவித்திருக்கும் ஓய்வுபெற்ற சிவில் சேவை அதிகாரியான கலாநிதி தேவநேசன் நேசையா கடந்த வருடம் தனக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட தேசமான்ய விருதுக்கான பதக்கத்தையும் சான்றிதழையும் திருப்பியனுப்பப்போவதாக அறிவித்தார்.

தற்போது வெளிநாட்டில் வசிக்கும் கலாநிதி நேசையா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பகிரங்கக் கடிதமொன்றை எழுதியிருந்தார்.

1959 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை சிவில் சேவையில் பல்வேறு உயர் பதவி நிலைகளில் பணியாற்றிய அவர் தனது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது, விசுவாசமான ஒரு இலங்கையன் என்ற வகையிலும் தகுதியானவன் என்று என்னைக் கண்டு 2017 மார்ச்சில் தங்களால் தரப்பட்ட தேசமான்ய விருதைப் பெருமையுடன் பெற்றுக்கொண்டவன் என்ற முறையிலும் உங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன். எமது மகத்தான தேசத்துக்கு நான் செய்திருக்கக்கூடிய சேவைகளுக்கு ஜனாதிபதியிடமிருந்து கிடைத்த அங்கீகாரமாக எனக்கு அளிக்கப்பட்ட தேசமான்ய விருதைக் கொண்டாடுவதற்கு அன்று மூன்று கண்டங்களில் இருந்து எனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் நாட்டுக்கு வந்திருந்தார்கள்.

நீங்கள் தந்த தேசமான்ய விருதில் பெருமைப்பட இனிமேலும் எனக்கு எதுவுமில்லை என்பதால் நான் இதுவரை மதித்து வைத்திருந்த பதக்கத்தையும் சான்றிதழையும் திருப்பியனுப்புவதைத்தவிர எனக்கு வேறு தெரிவு இருக்கவில்லை என தெரிவித்த அவர் தனக்கு வழங்கப்பட்ட தேசமான்ய விருதை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

தேசமான்ய விருதை ஜனாதிபதியிடம் கையளித்தார் கலாநிதி தேவநேசன்

(கொழும்பு)

கலாநிதி தேவநேசன் நேசையா தனக்கு வழங்கப்பட்ட தேசமான்ய விருதை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் கையளித்தார்.

துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு அர்ஜுனவின் மெய்ப்பாதுகாவலரின் விளக்கமறியல் காலம் மேலும் நீடிப்பு



(கொழும்பு)

இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் மெய்ப்பாதுகாவலர் இம்மாதம் 11 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன் போது , சம்பவம் தொடர்பிலான விசாரணை அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்புமாறு நீதிமன்றம் கொழும்பு குற்றவியல் பிரிவிற்கு அறிவித்துள்ளது.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தனது மெய்ப்பாதுகாவலர்களுடன் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி கனியவள கூட்டுத்தாபன வளாகத்திற்கு சென்றிருந்த போது ஏற்பட்ட அமைதியின்மையை தொடர்ந்து அமைச்சரின் மெய்ப்பாதுகாவலரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

அதேபோல் , குறித்த சம்பவத்தில் குழப்பம் ஏற்படுத்துவம் வகையில் செயற்பட்ட எதிர்த்தரப்பு சந்தேக நபர்களையும் உடனடியாக கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(இ-7)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	சாவகச்சேரி	கொடிகாமம்	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	180	160	150	200
உருளைக்கிழங்கு	100	70	60	80
பச்சைமிளகாய்	500	350	310	500
தக்காளி	100	120	100	120
மரவள்ளிக்கிழங்கு	80	60	40	40
கோவா	120	100	80	100
கரட்	140	140	110	140
பூசணி	30	30	130	60
புடோல்	100	80	100	80
வாழைக்காய்	80	80	220	100
சின்ன வெங்காயம்	100	160	120	160
பெரிய வெங்காயம்	100	80	75	100
பாகற்காய்	250	200	200	300
வெண்டிக்காய்	150	80	80	120
கருணைக்கிழங்கு	60	50	40	80
பயற்றங்காய்	240	180	150	160
லீக்ஸ்	200	140	140	160
பீற்றூட்	180	160	100	160
கறிமிளகாய்	200	200	200	300
முருங்கைக்காய்	1000	800	—	50
போஞ்சி	150	140	110	140
கத்தரிதம்புள்ள	150	140	140	160
கீரை-1பிடி	50	50	40	60
தேசிக்காய்	200	150	150	200
தேங்காய் (ஒன்று)	60	35	35	20-40
இராசவள்ளி	180	150	180	150
வெங்காயப்பூ	250	320	—	—
முள்ளங்கி	50	100	30	120
பொன்னாங்காணி	40	50	20	50
வல்லாரை	20	20	20	30
ஈரப்பலா	60	50	110	60

செய்தித்துளிகள்

வர்த்தக நிலையத்தில் திருட்டு!

(கரணவாய்)

வர்த்தக நிலையத்திற்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த உலருணவுப் பொருட்களைத் திருடிச் சென்றுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு வதிரி-ஆலங்கட்டை வீதியிலுள்ள வர்த்தக நிலையத்திற்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த அரிசி, சீனி, பால்மா உள்ளிட்ட பல்வேறு பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு அண்ணா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நிலைய முன்றலில் சனசமூக நிலையத் தலைவர் மு.புவீஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொள்வார். (இ-7)

ஜனாதிபதி சட்டத்தரணி நியமனம்

(கொழும்பு)

லண்டன் பட்டதாரி அருணாசலம் முத்துக்கிருஷ்ணன் ஜனாதிபதி சட்டத்தரணியாக அண்மையில் நியமனம் பெற்றுள்ளார்.

இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரியும் சட்டக் கல்வியை லின்கன் இனிசில் கற்று பரிஸ்டர் பட்டமும் பெற்றவருமாவார்.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக சட்டத்தரணியாக செயற்பட்டதைப் பாராட்டி இவருக்கு சட்டத்தரணிகள் சங்கம் பல விருதுகளை வழங்கியுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமனம் பெற்ற இவர் எதிர்வரும் 18 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார். (இ)

மாமியாரை கொன்ற மருமகன்

(கம்பஹா)

கம்பஹா, இஹலகொட பிரதேசத்தில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் மகளுடைய கணவன் இந்தக் கொலையை செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இஹலகொட பிரதேசத்தில் வசிக்கும் 56 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்வதற்காகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

வருடாந்தப் பொதுக்கூட்டம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் பரீன் ஹஸ்ஸானா அப்துல்சமியும் கௌரவ விருந்தினராக கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரிஷாந்தனும் கலந்து கொள்வர். (இ-10-60)

நீர்த்தேக்கத்தில் ஆணின் சடலம்

(தலவாக்கல)

தலவாக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து நேற்றுக் காலை ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

தொல்லை



பசுமையான புல்வெளி. நிறையப் பசுக்கள் மேய்ந்து கொண்டிருந்தன. கொக்குகள் அவற்றின் அருகே நின்று பறக்கும் பூச்சிகளைப் பிடித்து தின்றன.

கொக்குகள் அவ்வப் போது மாடுகளின் முதுகில் ஏறும். வாய் அருகில் செல்லும். இது மாடுகளுக்குத் தொந்தரவாக இருக்கும். அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு பசுவிற்குக் கொக்குகளின் இந்தச் செயல் பிடிக்கவில்லை.

ஒருநாள் அந்தப் பசு கொக்குகளைக் கண்டித்தது. "நான் புற்களைக் கடிக்கும் இடத்தில் நீங்கள் நின்றுகொண்டு எனக்குத் தொந்தரவு செய்யக் கூடாது" என்று எச்சரித்தது.

'இல்லை நண்பா! எங்களை விரட்டாதீர்கள். புற்களின் அடியில் பூச்சிகள் மறைந்துகொள்ளும். எங்களால் அவைகளை எளிதாகப் பிடிக்க முடியாது. ஆனால் நீங்கள் புற்களை மேயும்போது உங்கள் மூச்சுக்காற்றுப்பட்டு புற்கள் அசையும். அப்பொழுது மறைந்திருக்கும் பூச்சிகள் அங்குமிங்கும் ஓடும். அதை நாங்கள் எளிதாகப் பிடித்து உண்டு எங்கள் பசியாற்றிக் கொள்வோம். உங்களுக்கு இடைஞ்சல் கொடுக்கமாட்டோம்' என்று கொக்கு பணிவுடன் சொன்னது.

"அப்படியானால் நீங்கள் பூச்சி பிடித்து உண்ண நாங்கள் உதவணுமா? முடியவே முடியாது. எனக்கு இடையூறாக இருக்கும் எதையும் நான் ஒத்துக்கொள்ளவே மாட்டேன். கடைசியாக நான் உங்கள் கொக்கு கூட்டத்தையே எச்சரிக்கிறேன். என் பக்கம் யாருமே வரக் கூடாது. மீறி வந்தீர்களென்றால் என் கால்களால் உங்களை மிதித்து நாசம் செய்துவிடுவேன். ஜாக்கிரதை" என்று கடும் கோபத்தோடு பசு கொக்குகளை விரட்டியடிக்க, பயந்தோடியது கொக்குகள்.

அன்றிலிருந்து அந்தப் பசு புல்மேயும் இடத்திற்கு எந்தக் கொக்கும் செல்லவில்லை. அந்தப் பசு ஒரு முறை தன்னுடன் மேய்ந்து கொண்டிருந்த இன்னொரு பசுவிடம், "பார்த்தாயா நண்பா, என் பக்கம் எந்தக் கொக்கும் வருவதில்லை. எந்தத் தொந்தரவும் தருவதில்லை. டென்ஷன் இல்லாமல் புல் மேய்கிறேன். உனக்கு அந்தக் கொக்குகளை விரட்ட தைரியமில்லை. அதனால்தான் உன்னிடம் அவைகள் வாலாட்டுகின்றன" என்றது.

"நீ சொல்லுவதுபோல் கொக்குகளால் எனக்கு எந்த இடைஞ்சலும் இல்ல" என்றது மற்றொரு பசு.

"சரி உன் இஷ்டம்" என்று சொல்லிவிட்டு இந்தப் பசு மேயத் தொடங்கியது.

சில நாட்கள் கழித்து, கொக்கு நெருங்காத பசு மிகுந்த பசியுடன் புற்களை மேய்ந்து கொண்டிருந்தது.

அப்போது அதன் மூக்கினுள் ஒரு விட்டில் பூச்சி நுழைந்தது. உடனே பசு மூச்சுவிட முடியாமலும் பங்கர வலியாலும் அலறித் துடித்தது.

அருகில் அமர்ந்து இரை தேடிக்கொண்டிருந்த கொக்கு ஒன்று பறந்து வந்து. 'பசு நண்பா எதற்காக இப்படி கத்துகிறாய்' என்றது.

'என் மூக்கினுள் ஏதோ பூச்சி நுழைந்துவிட்டது. வலி தாங்க முடியவில்லை' என்றது.

"கவலைப்படாதே நண்பா, கிழே படுத்துக் கொள் நான் பார்க்கிறேன்' என்றது கொக்கு.

பசு சாய்ந்து படுத்ததும், பசுவின் மூக்கைப் பார்த்த கொக்கு, "ஒன்றுமில்லை நண்பா, பூச்சி உள்ளே தள்ளி செல்லாமல் ஓரமாகத்தான் இருக்கிறது.

இதோ எடுத்துவிடுகிறேன்" என்ற கொக்கு தனது நீண்ட அல கால், மூக்கினுள் நுழைந்த பூச்சியை எடுத்து வெளியே போட்டது.

பசு வேதனை குறைந்து நிம்மதி அடைந்தது. "நண்பா உன் உதவிக்கு நன்றி. உங்களை என்னருகே சேர்க்காதபோதும், ஆபத்து என்று வந்த போது எனக்கு உதவி செய்துவிட்டீர்கள்.

பூச்சிகள் எங்கள் மூக்கினுள் புகுந்து விடக்கூடாது என்ற இயற்கை ஏற்பட்டால்தான் நீங்கள் எங்களுடன் அமர்ந்து இரை தேட அனு மதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை இப்போது புரிந்து கொண்டேன்.

என்னை மன்னித்து விடுங்கள். மீண்டும் உங்கள் இனத்தினர் என்னுடன் அமர்ந்து இரை தேட வேண்டும்" என்றது பசு.

கொக்குகளும் பசுவுடன் அமர்ந்து இரைதேட புல்வெளி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

கதையின் நீதி: எல்லாமே நன்மைக்காதான் என்று செயற்பட்டால் தீவினைகள் அதிகம் ஏற்படாது.

வாயில் வாழும் 600 விதமான பற்றீரியாக்கள்

நமது அனுமதி இல்லாமலேயே நம்முடைய வாயில் 600 விதமான பாக்டீரியாக்கள் உயிர்வாழ்கின்றன என்றால் நம்பமுடிகிறதா? நமது உடலிலுள்ள பாக்டீரியாக்களின் எண்ணிக்கை உடல் செல்களின் எண்ணிக்கையைப் போல் பத்துமடங்கு அதிகம் என்பது இன்னும் வியப்பானது இல்லையா?

ஆம் அதுதான்உண்மை. உங்களுடைய வாயில் உள்ள பாக்டீரியா குடும்பமும் உலகின் வேறொருபகுதியில் வாழும் இன்னொருவரின் வாயில் வாழும் பாக்டீரியா குடும்பமும் ஒன்றுபோல் இருப்பது என்பது அதைவிட வியப்பானது.

உலகம் முழுவதிலுமிருந்து மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்தபிறகு இம்முடிவு எட்டப்பட்டுள்ளது.

மனிதனின் சிறுகுடலிலும் தோலிலும் குடியிருக்கும் பாக்டீரியாக்கள் பற்றியே இதுவரை ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு வந்தன. இப்போது மனிதனின் வாயில் வாழும் பாக்டீரியாக்களைப்பற்றி ஆய்வாளர்களின் கவனம் திரும்பியிருக்கிறது. நோய்களின் நுழைவுப்பாதை வாய் என்பதால் இந்த ஆய்வு இன்னும் முக்கியத்துவம் பெறுகிறது.

ஜேர்மனியின் மாக்ஸ்ப்ளங்க் இன்ஸ்டிடியூட் பேராசிரியர் டாக்டர் மார்க் ஸ்டோன்கிங் என்பவரும் அவரது குழுவினரும் உலகம் முழுவதிலும் இருந்து உமிழ்நீர் மாதிரிகளைச் சேகரித்து வகைப்படுத்தி ஆராய்ந்து வருகின்றனர். ஆரோக்கியமான 120 நபர்கள் புவிப்பரப்பின் ஆறு வேறுபட்ட இடங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களிடமிருந்து உமிழ்நீர் மாதிரிகள் திரட்டப்பட்டன. செல்லின் முக்கியமான பகுதிப்பொருளாகிய ரிபோசோம்களில் உள்ள 16S rRNA ஜீன்களில் புதைந்துள்ள இரகசியங்களை வெளிக்கொணரும் ஆய்வுகளை ஸ்டோன்கிங் குழுவினர் தற்போது நடத்திவருகின்றனர். வாயில் வாழும் பாக்டீரியாக்களிடையே உள்ள வேறுபாடுகளையும் உணவுப் பழக்கம், சுற்றுச்சூழல், உடல்நலம் மற்றும் நோய்கள் இவற்றுடன் உள்ள தொடர்பையும் இன்னும் ஆராய வேண்டியுள்ளது.



உணவு, கலாசாரம் இவற்றிடையே மனிதர்களிடம் வேறுபாடு இருந்தாலும் அவர்களுடைய வாயில் வாழும் பாக்டீரியாக் களிடையே ஒத்தகுணம் இருப்பதைக் கண்டு ஸ்டோன்கிங் வியக்கிறார்.

உமிழ்நீரை ஆராய்தல் என்பது முகம் சுளிக்கவைக்கும் செயல் என்றாலும், நம்முடைய வாயில் யார் குடியிருக்கிறார்கள் என்பதும் அவர்களுடைய குணாதிசயங்கள் என்ன என்பதையும் நாம் தெரிந்து கொள்வது முக்கியமில்லையா? நம்முடைய பிள்ளைகள் கைசுத்தமாகவும் வாய்சுத்தமாகவும் வாழ வேண்டியது அதைவிட முக்கியமில்லையா?

விதைப்பதைவிட அறுப்பதே மிகுதி என்பது அறுவடையின் விதி.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

அரசியலமைப்புக்கான எதிர்ப்பு ஆரம்பமாகிவிட்டது

இராமபிரானின் பட்டாபிஷேகத்தை தடுத்து நிறுத்தியமை மந்தரை எனும் கூனியையே சாரும்.

தசரத மன்னன் தன் முதுமை அறிந்து மூத்த மைந்தனாகிய இராமபிரானுக்கு பட்டாபிஷேகம் செய்வதாக அறிவித்தார்.

அந்த அறிவிப்பால் அயோத்தி மாநகர் முழுவதும் அகமகிழ்ந்தது.

ஆனாலும் மந்தரை மட்டும் அகத் துன்பமடைந்தார். இராமருக்குப் பட்டாபிஷேகம் நடப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நினைப்பைத் தவிர அவரிடம் வேறு எதுவுமில்லை.

ஊண், உறக்கம் மறந்தவளாக, தன் தோழி கைகேயியிடம் இராம பட்டாபிஷேகத்தைத் தடுத்து நிறுத்தலாம் என்று யோசனை செய்கிறார்.

தசரத மனையில் கைகேயியின் தோழி என்பதைத் தவிர வேறு எந்த வகிபங்கையும் கொண்டிராத கூனி நினைப்பை அரங்கேற்றி, யதுதான் ஆச்சரியமான விடயம்.

கூனியின் சூழ்ச்சியால், இராமர் காடேக; தசரத மன்னன் உயிர் பிரிய; அயோத்தி மாநகரின் சிம்மாசனத்தில் பாதுகை இருக்க, பரதன் தாளா வேதனையுற, ஒட்டுமொத்தத்தில் தசரதரின் குடும்பமும் அயோத்தி மக்களும் துன்பக் கடலில் வீழ்ந்தனர்.

இவையெல்லாம் கூனியின் கெட்ட சிந்தனையால் வந்த வினை.

சரி, இராமபிரானின் பட்டாபிஷேகத்தைத் தடுத்து நிறுத்தி பதினான்கு ஆண்டுகள் இராமரைக் காட்டுக்கு அனுப்புவதாக கூனி திட்டமிடக் காரணம் என்ன என்றால், வலுவான காரணம் எதுவுமில்லை.

தன் சிறு வயதில் மண் உருண்டை செய்து அதனை மந்தரையின் கூன் முதுகில் எறிந்ததைத் தவிர வேறு எந்த நிந்தையும் இராமர் செய்தாரில்லை.

அதிலும் சிறுபிள்ளையாக, விளையாட்டுத் தனத்தில் செய்த செயல் மீது இத்துணை தூரம் கூனி ஆத்திரம் கொண்டாள் என்றால் விதி விளையாடுகிறது என்பதுதான் அதன் பொருள்.

கௌதம முனிவரின் சாபத்தால் கல்லாய் கிடந்த அகலிகைக்கு இராமபிரானின் கால் தூசி பட்டு சாப விமோசனம் கிடைக்கும் அளவில் தெய்வ அவதாரத் தன்மை பொருந்திய இராமருக்கு, கூனி மீது மண் உருண்டை எறிந்தால் அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பது தெரியாமல் போனது விந்தையே.

சரி, இராமரால் சில காரியங்கள் ஆக வேண்டும் என்றால் பட்டாபிஷேகத்தைத் தடுக்கும் பணியை வசிட்டரே செய்திருக்கலாமல்லவா? ஆனால் அப்படி நடக்கவில்லை.

சபிக்கப்பட்ட கூனியால் அந்தக் காரியம் நடந்தது என்பதனூடு நல்ல காரியங்களைக் கெட்டவர்களே தடுப்பர் என்ற தத்துவம் உணர்த்தப்படுகிறது.

இந்த வகையில்தான் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைத் தடுக்க இப்போது மகிந்த தரப்பு தயாராகிவிட்டது.

இதேபோன்று முன்னம் ஒரு தடவை சந்திரிகா அம்மையார் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க அதனை ரணில் தரப்பு ளித்தது.

ஆக, தீவினையாளர் மாறி மாறி ஆட்சியில் இருக்கையில் அரசியலமைப்பல்ல எதுவுமே எங்களுக்கு கிடையாது என்பதைப் புரிவது தான் இங்கு முக்கியமானது.

இந்திய மீனவர்களின் வருகை 2018இல் மிகக் குறைவு

பணிப்பாளர் சுதாகரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன் பிடிக்கும் இந்திய மீனவர்களின் வருகை கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு மிகக் குறைவடைந்துள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள். பின்னர் அந்தந்த பிரதேசங்களுக்குரிய நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள். அவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் தற்போது யாழ்.சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு இந்திய மீனவரின் வருகை மிகவும் குறைவடைந்துள்ளது. அந்த வகையில்.

கடந்த 2017ஆம் ஆண்டு எல்லை தாண்டி 71 படகுகளில் வருகை தந்து மீன் பிடியில் ஈடுபட்டதாக 380 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக 71 வழக் குகள் பதிவு செய் யப் பட் டுசிறையில் அடைக்கப்பட்டனர். சில மாதங்களின் பின்னர் அனைவரும் விடு விக்கப்பட்டதுடன் படகுகளும மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடந்த 2018ஆம் ஆண்டு எல்லை தாண்டி 22 படகுகளில் வந்து மீன்பிடியில் ஈடுபட்ட 107 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக 22 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு மீனவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

பின்னர் மீனவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டதுடன் 13 படகுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. 6 படகுகள் மீது வழக்கு நடைபெற்று வருகிறது. 3 படகுகள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் இந்திய மீனவரின் வருகை ஒப்பீட்டளவில் குறைவடைந்து காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

மக்களுக்கான சேவை தொடரும்

– மகிந்த ராஜபக்ஷ

எதிர்க்கட்சித் தலைவருக்குரிய அலுவலகம் இல்லாவிட்டாலும், அரசாங்கம் முன்னெடுக்கும் ஊழல், மோசடிகளைத் தோற்கடிப் பதற்கான நடவடிக்கைகளை, மக்களுக்காக முன்னெடுக்கும் பணிகள் தொடருமென, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல - நெலும் மாவத்தையிலுள்ள தனது அலுவலகத்தில், நேற்று புத்தாண்டுக்கான பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், இந்த வருடம், தேர்தல் வருடமென்பதால், அதற்கு முகங்கொடுக்க, தனது முகாமை பலப்படுத்தி வருவதாகக்கூறினார்.

எதிர்கட்சி தலைவர் பதவியில் கிடைக்கப்பெறுகின்ற அரச சுகபோகங்களை எதிர்பார்த்து எதிர் கட்சி தலைவர் பதவியை வகிக்கவில்லை என கூறினார். (மு-3)

புகையிரதம் மோதி ஒருவர் உயிரிழப்பு

அனுராதபுர புதிய பேருந்து தரிப்பிடத்திற்கு பின்னால் தொடருந்தில் மோதி நேற்று பிற்பகல் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த தொடருந்திலேயே குறித்த நபர் மோதியுள்ளதாக தெரியவருகிறது.

சுமார் 65 வயது மதிக்கத்தக்க உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (மு-3)

சந்தையில் இரவோடு இரவாக வந்த தடைகளால் காலையில் தடுக்கி விழுந்த வியாபாரிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் சந்தை உட்புறமாக போக்குவரத்து பாதைகளை அடைத்து வரி வசூலிப்பதற்கு ஏதுவாக கடந்த புதன்கிழமை நள்ளிரவு வேளையில் நகரசபையினர் சந்தை வளாகத்தில் நாலா புறமும் உள்ள போக்குவரத்து பாதைகளில் நிலத்தில் தூண்கள் போட்டு தடுத்துள்ளனர். இதனை அறியாத சந்தை வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் வியாழக்கிழமை அதிகாலையில் சந்தைக்குள் வழமை போல் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளில் வந்த போது நகரசபையினரின் தடுப்பு தூண்களில் மோதி விழுந்து காயமடைந்ததுடன், சிலருடைய மோட்டார் சைக்கிளும் சேதமடைந்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

நகர சபையினர் குறித்த தடுப்புத் தூண்களை நிலமட்டத் தோடு வைத்திருப்பதனால் பலரும் அதனை கவனிக் காது தடுக்கி விழும் அபாயம் காணப்படுவதாகவும் ஆகவே தடுப்பு தூண்களுக்கு பதிலாக இலகுவாக அவதானித்தக் கூடிய வகையில் நில மட்டத்தில் இருந்து உயரமாக தடுப்பு கம்பிகள் அமைக்கப்பட வேண்டும் என வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பொதுச்சந்தை நட்டத்தில் இயங்குவதாகவும், 2019 தை மாதத்தில் இருந்து எதிர்வரும் பங்குனி மாதம் வரை இலாபம் ஈட்டாமல் தொடர்ந்து நட்டத்தில் இயங்கினால் சந்தையை குத்தகைக்கு கொடுக்க வேண்டும் எனவும் சாவகச்சேரி நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு சாவகச்சேரி நகர சபையினர் கடந்த முதலாம் திகதியில் இருந்து கடுமையான சட்டதிட்டங்களை அமுல்படுத்தி இலாபம் ஈட்டுவதனை குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றனர்.

இலாபத்தை மாத்திரமே கருத்தில் கொள்ளாமல் மக்கள் நலனிலும் நகர சபையினர் கவனம்செலுத்தவேண்டும். சாவகச்சேரி பொதுச்சந்தையை தினமும் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

இலங்கை ஜனாதிபதிக்கு சீன ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)

சீனாவானது இலங்கையுடன் பாரம்பரிய ரீதியில் முக்கியத்துவமுடைய நட்புறவைப் பேணி வருகின்றது.

இந்த புதுவருடத்திலும் சீனா இலங்கை அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு தயாராக உள்ளதுடன், பல்வேறு துறைகளிலும் இரு நாடுகளும் பேணிவரும் இரு தரப்பு ஒத்துழைப்பு மற்றும் நல்லுறவு என்பவற்றை மேலும் மேம்பட்ட நிலையொன்றுக்கு உயர்த்த வேண்டும் என சீனா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு சீன ஜனாதிபதி சி ஜின்பிங்கின் புத்தாண்டு வாழ்த்து மடலை இலங்கைக்கான சீனத்தூதுவர் சென்ங் செங் ஷீவான ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார். அதனைக் கையளித்த சீனத் தூதுவர் மேலும் தெரிவிக்கையில்,

புதுவருடத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர பரிமாற்றங்கள், தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கை எதிர்பார்த்துள்ளதுடன், பட்டுப் பாதைத திட்டத்தில் விருப்புடன் பங்கெடுக்கவுள்ளதாகவும், இரு நாடுகள் மற்றும் நாட்டு மக்களுக்கும் நன்மையளிக்கும் வகையிலான துறைகளில் புதிய திட்டங்களை ஒன்றிணைந்து அமுல்படுத்த தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

அம்புலன்ஸில் கொண்டு செல்லப்பட்ட நோயாளர் விபத்தில் உயிரிழப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் நகரில் புகையிரதக் கடவையொன்றில் இடம்பெற்ற விபத்தில் அம்புலன்ஸில் கொண்டு செல்லப்பட்ட நோயாளரொருவர் உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் - எலயாபத்துவ பிரதேச வைத்தியசாலையில் இருந்து குறித்த நோயாளர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது குறித்த அம்புலன் ஆட்டோ ஒன்றில் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இசசம்பவத்தில் ஆட்டோ சாரதி மற்றும் அதில் பயணித்த பெண்ணொருவர் காயமடைந்துள்ள நிலையில், சாரதியின் நிலை கவலைக்கிடமாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5 மணி வரை யாழ் பிரதேசத்தில வேம்பிராய், கல்வயல், மட்டுவில், நுணாவில் சந்தி, அல்வாய், மாலு சந்தி, வியாபாரிமூலை, இன் பருட்டி, சுப்பர்மடம், நாவலடி, லங்கா பாடசாலை, ப்ருத்தித்துறை நகரம்,சாரையடி, கிராமக்கோடு, கல்லூரி வீதி, VM வீதி, தம்பசிட்டி, சாளம்பை, புனிதநகர், மாதனை, கற்கோவளம், வெளிச்சவீடு, தும்பளை, வறாத்துப்பளை, திகிரி, கற்கோவளம் ஜஸ் தொழிற்சாலை, மந்திகை, காளிகோவிலடி, வதிரி, இரும்பு மதவடி, சக்களாவத்தை, தேவரையாழி, மனோகரா, திக்கம், திக்கம் சித்தி விநாயகர், மயிலிட்டி, தையிட்டி, வறுத் தலை விளான், வீமன்காமம், பலாலி, காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப் படை ஓய்வுக்கால விடுதி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் பிரதேசம், அடம்பனிலிருந்து பாப்பாமோட்டை வரை, அடம்பன் நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

யாழ்.சுப்பர் லீக் கிரிக்கெட் போட்டி முதலாவது பருவகாலம் 12 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் உருவாக்கப் பட்டுள்ள யாழ்ப்பாணம் சுப்பர் லீக் என்னும் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதலாவது பருவகாலப் போட்டிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஏ பிரிவில் ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர்கிங்ஸ், அரியாலை வோரியர்ஸ், நல்லூர் பிறவுண்கொஸ் அணிகளும், பி பிரிவில் வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்ரார்ஸ், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் மற்றும் ரில்லியூர் ரைரன்ஸ் ஆகிய அணிகளும் உள்ளன.

முதற்சுற்று ஆட்டங்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையிலும், இரண்டாவது சுற்று ஆட்டங்கள் 27 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன.

முதலாவது பருவகாலப் போட்டியில் பங்குபற்றுவதற்கான அணிகளின் வீரர்களைத் தெரிவு செய்வதற்கான ஏலம் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது.

ஜப்னா பந்தேர்ஸ், ரில்லியூர் ரைரன்ஸ், கொக்குவில் ஸ்ரார்ஸ், பருத்தித்துறை சுப்பர்கிங்ஸ், அரியாலைவோரியர்ஸ் பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ், நல்லூர் பிறவுண்கொஸ் மற்றும் வேலணை வேங்கைகள் ஆகிய எட்டு அணிகள் உருவாக்கப்பட்டன. இந்த ஒவ்வொரு அணியையும் 8 உரிமையாளர்கள் கொள்முதல் செய்து, வீரர்களையும் அத்தினத்தில் ஏலத்தில் எடுத்திருந்தனர்.

இந்த ஏலத்தில் சென்ற லைட்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.கௌதமன் ரில்லியூர் ரைரன்ஸ் அணியினால் 24,500 ரூபாய் என்னும் உச்ச தொகைக்கு எடுக்கப்பட்டிருந்தார். (க-26)

அரையிறுதிக்குள் நுழைந்த ஊரெழு றோயல், உருத்திரபுரம் அணிகள்

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் அழைக்கப்பட்ட 12 கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியானது உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 12 அணிகள் பங்குபற்றின. அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றன.

அந்தவகையில் ஊரெழு றோயல், நாவாந்துறை சென்.மேரிஸ், குப்பிளான் குறிஞ்சிக்குமரன், மயிலங்காடு ஞானமுருகன், இளவாலை சென்.லூட்ஸ், தெல்லிப்பழை நாமகள், கிளிநொச்சி உருத்திரபுரம், இளவாலை யங்ஹென்றிஸ் அணிகள் தகுதி பெற்றன.

காலிறுதியாட்டங்கள் 3 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

முதலாவது காலிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் அணி, 04:01 என்ற கோல்கள் கணக்கில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை இலகுவாக வீழ்த்தியது.

இரண்டாவது காலிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் அணி மோதியது. இதில் இலகுவான ஆட்டத்தின் மூலம் கோல் மழை பொழிந்த உருத்திரபுரம் அணி, 07:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. உருத்திரபுரம் அணி சார்பாக பிரதீஸ், ஹரீஸ் தலா 3 கோல்களையும், சாந்தன் ஒரு கோலையும் அடித்ததுடன், நாமகள் சார்பாக அடிக்கப்பட்ட கோலை யஸ்மிலன் அடித்தார். (க-26)

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் நிதி ஒதுக்கீட்டில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் தம்பகாமம் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கு ரூபாய் தொண்ணூறாயிரம் பெறுமதியில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. தம்பகாமம் வட்டார அமைப்பாளர் வித்தியின் வேண்டுகோளிற்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினரால் குறித்த நிதி ஒதுக்கப்பட்டது. குறித்த உபகரணங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் போல்ராஜ் ஆகியோர் விளையாட்டுக்கழகத்திடம் கையளித்தனர். (க)

டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் கால்பந்தாட்ட சுற்று ஆட்டங்கள்

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், அழைக்கப்பட்ட 12 கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியானது உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 12 அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள், அடுத்த சுற்றுக்குத் தெரிவு செய்யப்படும். அந்தவகையில் 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு, காலிறுதியாட்டங்கள், அரையிறுதியாட்டங்கள் என நொக்கவுட் முறையில் நடைபெற்று இறுதிப் போட்டிக்கு அணிகள் தெரிவு செய்யப்படும்.

உருத்திரபுரம் அணி வெற்றி

முதற்சுற்று ஆட்டமொன்றில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணியை எதிர்த்து அராலி பாரதி அணி மோதியது. இதில் கோல் மழை பொழிந்த கிளிநொச்சி உருத்திரபுரம் அணி, 10:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

நாவாந்துறை சென்.மேரிஸ் அணி காலிறுதிக்குள் நுழைவு

இளவாலை சென். லூட்ஸ் அணிக்கும் நாவாந்துறை சென்.மேரிஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில், நாவாந்துறை சென்.மேரிஸ் அணி, 05:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றி

இளவாலை யங்ஹென்றிஸ் அணிக்கும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில், யங்ஹென்றிஸ் அணி, 04:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. யங்ஹென்றிஸ் சார்பாக தனேஸ் 03 கோல்களையும், ரூபன்ராஜ் ஒரு கோலையும் அடித்தனர்.

தெல்லிப்பழை நாமகள் அணி வெற்றி

தெல்லிப்பழை நாமகள் அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதியது. இதில் நாமகள் அணி, 04:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

ஊரெழு றோயல் அணி வெற்றி

ஊரெழுறோயல்அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் அணி மோதியது. இதில் றோயல் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. (க-26)

இலங்கை வீரர்களுக்கு அபராதம்

நியூசிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் விளையாடிய இலங்கை வீரர்களுக்கு ஐ.சி.சி. அபராதம் விதித்துள்ளது.

இலங்கை-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி பே ஓவல் மைதானத்தில் நடைபெற்றது. முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 371 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் ஆடிய இலங்கை 326 ஓட்டங்களுக்கு ஒல்-அவுட் ஆனதால், 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. குசல் பெரேரா 102 ஓட்டங்கள் எடுத்தார்.

முன்னதாக, நியூசிலாந்து அணி துடுப்பாட்டம் செய்து கொண்டிருந்தபோது இலங்கை பந்துவீச்சாளர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்துவீசி முடிக்கவில்லை.

இதனால் இலங்கை அணி வீரர்களுக்கு ஐ.சி.சி அபராதம் விதித்துள்ளது. அணித் தலைவர் மலிங்கவுக்கு 20 சதவிதமும், மற்ற வீரர்களுக்கு தலா 10 சதவிதமும் போட்டிக்கான சம்பளத்தில் இருந்து அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (க)

கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன

சாவகச்சேரி நகரசபையின் ஏற்பாட்டில் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இடம்பெறவுள்ளது.

தென்மராட்சியிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்பாக சாவகச்சேரி நகர சபையில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பித்து மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற முடியுமென சாவகச்சேரி நகரசபையினர் தெரிவித்துள்ளனர். (க-30)

அரியாலை சுதேசிய கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள்

அரியாலை சுதேசிய திருநாள் நூற்றாண்டு விழா கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் நாளை 5 ஆம் திகதி அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

அணிக்கு 7 பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இப்போட்டியில்,

காமாட்சி 'B', NoName, கைதடி ஜக்கியம், YFC, கோப்பாய் ஜக்கியம், ஞானவைரவர் (புத்தூர்), நல்லூர் தெற்கு, கலை ஒளி "A", பொற்பதி இந்து, வள்ளுவன், MCSC, ஸ்ரைல் போய்ஸ், உதய சூரியன் (உடுவில்), 11 star, இளங்கதிர், வீனஸ் "B" ஆகிய அணிகள் மோதவுள்ளன. (க)

வலம்புரியின் குறை 'களை' பதிகம் 01

பிறவுண் வீதி திருத்தப்படும்
யா.மா.ச. ஆணையாளர் உறுதி

குறைகளை பதிகம்

(யாழ்ப்பாணம்)

2019ஆம் ஆண்டில் வலம்புரி நாளிதழில் புதிதாக அறிமுகம் செய்து வைக்கப்பட்ட குறை "களை" பதிகம் என்ற பகுதியின் முதலாவது குறை "களை" பதிக மாக யாழ்ப்பாணம் பிறவுண் வீதி திருத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை பதிகமாகப்பாடப்பட்டி ருந்தது.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் இ.த.ஜெய சீலன் வலம்புரிக்கு அனுப்பிவைத்த கடிதம் வருமாறு.



மேற்படி தலையங்கத்தில். கூத் தனார் என்பவரால் எழுதப் பட்டு தங்களது 03.01.2019 திகதிய பத் திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பாக பின்வரும் விடயத்தை தெரியப்படுத்த விரும்புகிறேன்.

மேற்படி பிறவுண் வீதியானது மிக நீண்ட காலமாக திருத்தப் படாததனால் திருத்தப்பட வேண் டிய ஒன்றாக கருதப்பட்டு முன்னு ரிமை அடிப்படையில் I project (Integrated road investment program approved road list) திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டது.

எனினும் இவ் I project கடந்த காலத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இவ் வீதியை பூரண மாக புனரமைக்க முடியாமல் போனது. இவ்வாண்டு ஆரம்பத் தில் I project திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட உள்ள தாக அறிகின்றோம். எனவே விரை வில் இவ் வீதி பூரணப்படுத்தப்படும் என்று நம்புகிறேன் என அக் கடிதத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணிகளை விடுவிக்கக்கோரி வவுனியாவில் பாரிய போராட்டம்

(வவுனியா)

வவுனியா இராமியன்குளத்தில் மக்களின் காணிகளை கையகப் படுத்திய இராணுவத்தினர் விவ சாயம் செய்து வருவதாகவும் அதனை உடன் விடுவிக்க கோரி ஆண் டியாபுளியங் குளத் தில் பாரியளவிலன ஆர்ப்பாட்ட மொன்று நேற்று இடம்பெற்றது.

மதவாச்சி மன்னார் வீதியில் ஆண்டியாபுளியங்குளத்தில் மதிய நேர தொழுகையின் பின்னர் சுமார் 1 மணிக்கு ஒன்றுகூடிய இஸ்லாமிய மக்கள் தமது பூர்வீக காணிகளை இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும் என கோசங் களை எழுப்பியதுடன் பதாகை களையும் தாங்கியிருந்தனர்.

இதன்போது எங்கள் மூதா தையரின் காணியில் இராணுவம் விவசாயம் செய்கின்றது உடன் விடுவிக்கவேண்டும். டிசம்பர் 31 இற்கு முன் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என தெரிவித்த ஜனாதிபதியின் சொல் பொய். அரசே எமது விவசாய நிலங்களை விட்டு விடு. விவசாய நிலங்களையும் மேய்ச்சல் நிலங்களையும் விட்டு வெளியேறு போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளையும் தாங்கிய வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டி ருந்தனர்.

இதன் போது ஆர்ப்பாட்ட இடத் திற்கு வருகை தந்த செட்டிகுளம் பிரதேச செயலாளரிடம் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டவர்கள் மகஜரொன் றினையும் கையளித்ததுடன் இரா ணுவத்தினர் தமது காணியில் விவசாய பண்ணையினை நடத்தி வருவதாகவும் அங்கு விளையும் பொருட்களை தமக்கே கடை அமைத்து விற்பனை செய்து வருவதாகவும் சுட்டிக்காட்டியதுடன் விவசாய பொருட்கள் கடையை யும் விவசாய பண்ணை பெயர்ப் பலகையையும் சுட்டிக்காட்டியிருந்த னர்.

இந் நிலையில் சுமார் 2 மணி நேரமாக இடம்பெற்ற இவ் வார்ப் பாட்டத்தின் பின்னர் ஆர்ப்பாட்டக் காரர்கள் கலைந்துசென்றிருந்த னர். (ம-250)

அரசியலமை...

புதிய அரசியலமைப்பில் உள்ள டக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர் பில் நாடாளுமன்ற உறுப்பினர் மகந்த ராஜபக்ஷவிற்கும், அவரது தரப்பினருக்கும் முதலில் தெளிவு படுத்த வேண்டும்.

அரசியலமைப்பு விடயத்தில் இனவாதத்தை பரப்பி மக்கள் மத்தியில் பிழையான பிரசாரங் களையே மேற்கொள்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ உட்பட அவ ரது தரப்பினர் என்றும் தமிழ் மக் களுக்கு எதிரானவர்கள்.

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் தீர்வு கிடைப்பதற்கு இவர் களே ஆரம்பத்தில் இருந்து எதிர்ப்பினை வெளிப்படுத்தினார் கள். இன்று அவர்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர் களும் கைகோர்த்துள்ளனர்.

பெரும்பான்மை இனத்திலும் சில அடிப்படைவாதிகள் காணப் படுகின்றனர்.

அடிப்படைவாதிகளின் ஆத ரவு மாத்திரம் கிடைக்கப் பெற்றால் போதும் என்று கருதியே இன்று மகிந்த ராஜபக்ஷ புதிய அரசி யலமைப்பிற்கு எதிராக அவரது தரப்பினரை தூண்டி விடுகின்றார் என தெரிவித்துள்ளார். (ம-3)

வட மாகாண...

வந்தார். இவர் வடமாகாண ஆளு நராக நியமிக்கப்படுவார் என தெரி விக்கப்படுகின்றது. (ம-3)

ஜி.எஸ்.பி. பிளஸ்...

26ஆம் திகதி ஜனாதிபதி மேற் கொண்ட தீர்மானத்தினையடுத்து, மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை தனது வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கினால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை நிறுத்து வது குறித்து சிந்திக்கவேண்டி வரும் என ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

மாகாணசபை...

ஆண்டு வரவுசெலவுத்திட்டப் பிரே ரணையை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி சமர்ப்பிப் பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த, வரவுசெலவுத்திட்ட பிரே ரணை தொடர்பில் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி விவாதத் திற்கு எடுத்துக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-3)

தற்போது இலங்கையில் மீண் டும் ஸ்திரத்தன்மை உருவாகி யுள்ள நிலையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப் பிய பாராளுமன்றின் இலங்கை நட்பு குழுவின் உறுப்பினர் ஜெப்ரி வான் ஒர்டன் மற்றும் வில்லியம் டார்ட்மவுத்தினை நேற்று வெள் ளிக்கிழமை கொழும்பில் மங்கள சமரவீர சந்தித்து கலந்துரையாடி னார்.

இந்த சந்திப்பின் போது வர்த்தக ரீதியான பரஸ்பர ஒத்துழைப்பு, சுற்றுலாத்துறை மற்றும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பின் போது அபி விருத்தி மூலோபாய மற்றும் சர்வ தேச வர்த்தக அமைச்சர் மலிக் சமர விக்ரமவும் கலந்துகொண்டிருந்த தார்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததை அடுத்து இலங்கையில், ஊழலை ஒழிப்பதற்கும், மனித உரிமைகளை பேணுவதற்கும், நீதியின் ஆதிபத்யத்தை உறுதிசெய் வதற்கும் மேலும் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி கவனம் செலுத்துவதற்கு இலங்கை அரசாங் கம் விசேட கவனம் செலுத்தியமை தொடர்பில் கருத்திற்கொண்டு, மீண்டும் அவ்வரி (GSP+) விலக் களிப்பை வழங்க ஐரோப்பிய ஒன்றி யம் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (ம-3)

வவுனியாவில்...

கத்தில் அரசாங்க அதிபர் ஜ.எம். ஹனீபா தலைமையில் கலந்துரை யாடல் ஒன்று இடம்பெற்றது.

இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத் தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் விஜ யம் மேற்கொண்டு இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்கள், யுத்தத் திற்கு பின்னரான நிலமைகள் தொடர்பாக பார்வையிட்டு வருகின்ற னர். அந்தவகையில் வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திப்பணி கள் தொடர்பாக கேட்டறியும் கலந் துரையாடலில் கலந்து கொண்டு பிரதேச செயலாளர், திணைக் களத் தலைவர்களை சந்தித்து மாவட்டத்தின் அபிவிருத்திப்பணி கள் தொடர்பாக கேட்டறிந்தனர்.

இக் கலந்துரையாடலை முடித் துக்கொண்டு மாவட்டத்தில் மீள் குடியேற்றப்பட்ட சிதம்பரநகர் பகுதிக்கு நேரடியாக விஜயம் மேற் கொண்டு அங்குள்ள மக்களை சந்தித்து நிலமைகளை ஆராய்ந்த னர். (ம-281)

நீங்களும் வெள்...

களும், இங்குள்ள தமிழ் அரசியல் வாதிகளின் பிள்ளைகளும் வெளி நாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர்.

ஆனால் இங்குள்ள இந்த பிள்ளை கள் ஏழைகளாகவே வாழ்கின்றனர் என தெரிவித்துள்ளார் பத்ர முல்லே சீலரத்ன தேரர்.

கிளிநொச்சிக்கு நேற்று வெள்ளிக் கிழமை விஜயம் செய்த பத்ர முல்லே சீலரத்ன தேரர் அங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100 பேருக்கு நிவாரண பொதிகளை வழங்கி வைத்தார். அங்கு உரை யாற்றும் போதே இவ்வாறு தெரிவித் துள்ளார். (ம-3)

பொதுஜன முன்...

அவரின் தனிப்பட்ட அலுவலகத்தில் புது வருடத்தில் கடமைகளை ஆரம்பித்த நிகழ்வில் கலந்து கொண்டபோது அவர் இதனை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில்கட்டழகன்லூஷன் புஸ்பராஜ் கலந்து கொண்டு எதிர்க் கட்சித் தலைவருடன் நட்பு ரீதியான உரையாடலில் ஈடுபட்டார். (ம-3)

ஏதாவது சொல்ல வேண்டும்...

கிழக்கு இளைஞர் சம்மேளனத் திற்கு விளையாட்டு உபகரணங் கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற் றது.

இதில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் அரசியல் அமைப்பிலே விதிமுறைகள் இருக் கின்றன.

அவை மீறப்படுகின்ற போது அதை சீர் செய்ய வேண்டிய நிர்பந் தம் இருக்கிறது. உரிய நேரத்தில் அதை சீர் செய்யா விட்டால் விதி முறை ஒன்று இருப்பது தேவையற்ற விடயமாகி போய்விடும் ஒரு நாட் டின் அரசியல் அமைப்பு என்பது தேவையற்ற ஒன்றாக மாறிவிடும்.

அதற்கு இடம் கொடுக்க முடி யாது. ஜனநாயகம் பேணப்பட வேண்டுமாக இருந்தால் எழுதப்பட்ட விதிமுறைகள் சரியாக கடைப்பிடிக்க வேண்டும்.

அதை மீறுகின்ற போது எதற்கு எதிராக எவ்விதமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அந்த விதிமுறைகளில் எழுதப்பட் டுள்ளது. அந்த நடவடிக்கையை நாங்கள் முன்னின்று எடுத்தோம்.

அதை செய்ய வேண்டிய பொறுப்பு பிரதான எதிர்க் கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலையில் சுமத்தப்பட்டிருந்தது. அதை செவ் வனே நிறைவேற்றி இருக்கிறோம்.

அதை நிறைவேற்றிய காரணத் தாலே சிலருக்கு கசப்பு ஏற்பட்டுள் ளது. தவறான வழியில் பதவிகளை கைப்பற்ற முனைந்தவர்கள் ஜன நாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாது ஆட்சி அதிகாரத்திலே நிலைக்க விரும்பிய வர்கள் நீதிமன்றத்தின் ஊடாக அவர்கள் தடுக்கப்பட்டதன் காரண மாக ஒரு எரிச்சல், மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது.

அதன் வெளிப்பாடுகளை அண் மைய பத்திரிகைகளில் காண முடிகிறது. பத்திரிகைகளை திறந்து பாக்க தேவையில்லை முன்பக் கத்தை பார்க்கிற போது சுமந்திரன், சுமந்திரன், சுமந்திரன் என பலரது விமர்சனங்கள் நாளாந்தம் வந்து கொண்டிருக்கிறது.

இதற்கு ஒரே ஒரு காரணம் விதி முறைகள் மீறப்பட்ட போது தட்டிக் கேட்டதுதான் அதற்கான காரணம். அது தவறாக செயற்பட்டவர்களின் தோல்வி.

தோல்வியை ஜீரணிக்க முடி யாது எதையாவது சொல்ல வேண் டும் என்பதற்காக பேசிக் கொண்டு இருக்கிறார்கள் அதற்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் எமக்கு கிடை யாது என்றார். (ம-60)

NEC
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
வர்த்தகப் பிரிவு A/L 2021
கணக்கீடு K.பாலகஜன்
வணிகக்கல்வி SK.பாலசபேஷ்
பொருளியல் S.ஜெயக்குமார் K.பிரதீபன்
ஆரம்பம்: 06.01.2019 ஞாயிறு காலை 9.00 மணி

குறைவான கட்டணத்தில் வீடு மற்றும் அறைகள் நாள் வாடகைக்கு உண்டு
நல்லூர் இலங்கை வங்கி கட்டடத் தொகுதியில் Rooms (A/C, Non A/C) வீடு என்பன நாள் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
0212219732, 0777922265

D.C.M
யாழ். நகர் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)
A/L 2019
Day Class
07.01.2019 (திங்கள்)
கலைப்பிரிவு
காலை – 7.00 மணி
வர்த்தகப்பிரிவு
மாலை – 2.00மணி
தொ.பே: 077 011 9434

Personal Classes
கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகாமை)
A/L 2019
Day Class
வர்த்தகப்பிரிவு
ஆரம்பம்
07.01.2019 திங்கள் மாலை 5 மணி
பொருளியல் : S. ஜெயக்குமார்
கணக்கீடு : A.T. சுரேன்
வணிகக்கல்வி : T.S ரிஷி
தொடர்புகளுக்கு: 0777238597

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK– 550 /=Kg
கனடா–900 /=Kg
ஜேர்மனி– 700 /=Kg
நெதர்லாந்து–700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
நிபந்தனைகளுக்குட்பட்டது
மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS

நிரு ரியூசன் சென்ரர், கோண்டாவில்
A/L 2k21
கலை, வர்த்தக, கணித, தொழில்நுட்பப் பிரிவுகள்
ஆரம்பம்
06.01.2019
ஞாயிற்றுக்கிழமை
காலை 8.00 மணி

DCM யாழ்.நகர்
வேம்படி மகளிர் பாடசாலை அருகாமை
A/L 2021
வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்
06.01.2019 (ஞாயிறு)
9.00 am
பொருளியல்
S.ஜெயக்குமார்
கணக்கீடு S.தவா
வணிகக்கல்வி N.S.கபில்
தொ.இல. 077 011 9434

Personal Classes
கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகாமை)
A/L 2019
Day Class
வர்த்தகப்பிரிவு
ஆரம்பம்
07.01.2019 திங்கள் மாலை 5 மணி
பொருளியல் : S. ஜெயக்குமார்
கணக்கீடு : A.T. சுரேன்
வணிகக்கல்வி : T.S ரிஷி
தொடர்புகளுக்கு: 0777238597

Personal Classes
கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகாமை)
A/L 2021
வர்த்தகப்பிரிவு
ஆரம்பம்
08.01.2019
செவ்வாய் 3.00 pm
பொருளியல் : S. ஜெயக்குமார்
வணிகக்கல்வி : V.K. ரவீகரன்
கணக்கீடு : A.T. சுரேன்
தொடர்புகளுக்கு: 0777238597

காணி விற்பனைக்கு
முல்லைத்தீவில் பிரதான பேருந்து நிலையத்தில் இருந்து 2.5km இல் சிலாவத்தை பிரதான வீதியில் 1 1/4 ஏக்கர் காணி உடன் விற்பனைக்கு உண்டு. 0774425320
தொடர்புகளுக்கு:

பணிப்பெண் தேவை
கொழும்பில் வீட்டு வேலைக்கு 40 - 50 வயதுக்கு இடைப்பட்ட பணிப்பெண் தேவை. தொடர்புகளுக்கு:
0712215415, 0777364077

A/L 2021
ஊடகக்கற்கை Media Studies
திரு.என்.கஜிதரன்
B.A (Hons) Spl in media studies
M.A (mass communication & Journalisam)
கலை, தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்குரியது
பொருளியற் கல்லூரி நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பொருளியற் கல்லூரி கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
BARATHY - சித்தன்கேணி
ஆரம்பம்: ஜனவரி 06 காலை 8 am
A/L Day திங்கள் 2 pm (பாடி. பொருளியற் கல்லூரி)
விரும்பிய இடங்களில் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்

வேலைவாய்ப்பு
2019ஆம் ஆண்டிற்கான புதிய பல பிரிவுகளில் O/L, A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஏனையவர்களுக்கு அடிப்படைப் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
வெளிமாவட்டத்தினருக்கு தகுதிகாண் பயிற்சியுடன் சொந்த இடங்களில் வேலைவாய்ப்பு.
தொடர்புகளுக்கு: 077 157 1699

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

A/L பொருளியல்
MCQ -①②&③
முதல் நான்கு அலகுகளுக்குரியது
33 உப அலகுகள் & விடயத் தலைப்புகளில் ஒழுங்குபடுத்தப்பட்டது
1280 MCQs
2019 A/L புதிய மாதிரி வினாத்தாள் - அமைப்பு, புள்ளித்திட்டம், நோக்கங்கள், வினாவகைகள், பரீட்சை நுட்பங்கள், சிறப்புக் குறிப்புக்கள், வழிகாட்டல் குறிப்புக்கள் அடங்கியது
2015 A/L & 2016 A/L பரீட்சையில் 99 புள்ளிகளும் 100
2017 A/L & 2018 A/L பரீட்சையில் 100 புள்ளிகளும் 100
பெறவைத்த நூல்களின் ஆசிரியர் - வே.கருணாகரன்
* எல்லாப்புகழும் இறைவனுக்கே!
ரூபா 480
2019 பழைய பாடத்திட்டப் பரீட்சைக்குரிய வினாவிடை & MCQ நூல்களும்
பூபாலசிங்கம் புத்தகசாலை/ அன்னை புத்தகசாலை

Techno World
வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
A/L தொழில்நுட்ப பிரிவு
A/L 2021 - திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை
பகல் வகுப்புக்கள் 8.00 – 11.00am
A/L 2019 Day Class
திங்கட்கிழமை – வெள்ளிக்கிழமை
பகல் வகுப்புக்கள் 8.00 – 01.30pm
E.Tec/ B.Tec, SFT, ICT
பகல் வகுப்புக்கள் நடைபெறும் ஒரே ஒரு கல்வி நிறுவனம்.
புதிதாக அமைக்கப்பட்ட நவீன ஆய்வுகூட வசதிகளுடன்
தொடர்புகளுக்கு : 077 017 5346

கலை|வர்த்தகம் தொழில் நுட்பம் A/L 2021
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
ஆரம்பம்: 06.01.2019 காலை 9.00 மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

PERSONAL CLASS
கல்வியங்காடு
A/L கணக்கீடு - 2019
By: A.கலைச்செல்வன்
கிரயக்கணக்கீடும்
அலகொன்றிலிருந்து மீட்டல்
வினா விடையும்
A/L- 2021 புதிய பிரிவு
ஆரம்பம்:
ஞாயிறு 06.01.2019
நேரசூசி
தொடர்புகளுக்கு
077 694 4543

அரச...

கிழமை உடற் கட்டமைப்பு போட்டியில் சர்வதேச ரீதியில் முதலிடம் பெற்ற இலங்கையரான லுஷன் புஷ்பராஜை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வரலாற்றில்முதல் தடவையாக அரச ஊடகங்களுக்கு பாராளுமன்றத்திலே கடுமையான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது. அதன் தாக்கமே இன்று ஊடகத் துறையில் பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன.

அரசாங்கத்திற்கு தேவையான விதத்திலே ஊடகங்கள் செயற்பட வேண்டும் என்று அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றன. இச்செயற்பாடுகள் முற்றிலும் தவிர்க்கப்படவேண்டும்எனறார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக பாராளுமன்றத்தில் ஒரு பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி ஒன்று செயற்பட வேண்டும். அப்போதே மக்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரமும் உறுதிப்படுத்தப்படும். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் மற்றும் எதிர்க்கட்சிதலைவரின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலம் என்பன இன்று பலவந்தமாக கைப்பற்றப்பட்டுள்ளது.

இவற்றை ஒரு போதும் நான் கோரவில்லை. பதவிகளை வகிக்கும் பொழுது கிடைக்கப்பெறுகின்ற அரசசுகபோகங்களை துறந்தும் மக்களுக்காக சேவை செய்துள்ளேன். (ம-3)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக
ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி
சாந்தலிங்கம் (பத்தர்) சித்திரவேல்
(முன்னாள் இலங்கை மின்சாரசபை) முதி: வைகுண்ட ஏகாதசி



பாசம் என்னும் முன்றெழுத்தில்
அன்பு எனும் முன்றெழுத்தைச் சொரிந்து
பண்புடனே எமை வழிநடத்தி வந்தவரே
ஒன்றுபட்ட இதயத்திலே ஒரு நாளும்
பிரிவுகள் இல்லையென நினைத்தோம்!
புன்னகை தவழும் முகமும்
நேசம் நிறைந்த பேச்சும்
வந்தவரை விருந்தோம்பும் உயரிய பண்பும்
சித்தி எனும் சிறந்த நல்லறிவும் – எம்
கண்ணீரில் கரைந்து ஆண்டுகள்
ஆறாக ஓடினாலும் – நாம்
மீளாத்துயரில் மீண்டெழ மறுக்கின்றோம்
மீண்டுமொரு பிறப்பிருந்தால் எம்முடனே
வாழ வருவீர் எனக்காத்திருக்கின்றோம்!
தோற்றம்: 1943.01.09
மறைவு: 2013.01.05
மான் பாடசாலை வீதி,
டச்சு றோட், உடுவில்.
(சி-5021)
- குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.